# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

MADRAS




ஸ்ரீ வல்லப விநாயகர்

மாலை 8] பராபவ ஆவணி—செப்டம்பர் 1966 [ மணி 12

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு.



நமது மாநில கவர்னர் மேதகு. ஸ்ரீ உஜ்ஜல் சிங் அவர்கள்
தஞ்சைப் பெரிய கோயிலுக்கு வருகை தருதல்.

## பொருளடக்கம்


1. சிவஞான போதத் தெளி பொருள்.
2. வியப்பினும் வியப்பு.
3. தெய்வம் தெளிவும், சிதம்பர சுவாமிகளும்.
4. 'அருமையில் எளிய அழகே போற்றி'
5. விடை தெரியுமா?
6. விடை விளக்கம்.
7. குமரகுருதாசரும், குமரகுருபரரும்.
8. ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடாதிபதிகளின் அவா
9. தலப் பெயர்களிற் கவிப் புனைவுகள்.
10. அறிவார் இல்லை.
11. நூல்கள் - அறிமுகம்.
12. ஞானசித்தர்களும், சித்த மருந்தும்.
13. உள்ளுறை பொருளாராய்ச்சி.
14. வைஷ்ணவ குரு பரம்பரை.



**ஆண்டுச் சந்தா ரூ. 10/-** **தனி இதழ் விலை ரூ. ஒன்று**


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விம்புபவர்கள் **"திரு. ஆணையர் அவர்கள் அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34"** என்னும் முகவரிக்கு ரூபா **பத்து** அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்துகொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார **அறநிலைய உதவி ஆணையாளர்களின்** அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், **இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.** — ஆசிரியர்

CONNEMARA PUBLIC LIBRARY

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 8] பராபவ, ஆவணி-செப்டம்பர் [மணி 12

## சிவஞான போதத் தெளிபொருள்

### முன்னுரை :

சிவஞான போதம், நம்முடைய தமிழ் மொழியின் கண்ணுள்ள சமய தத்துவ நூல்கள் பலவற்றுள்ளும் தலை சிறந்த ஒன்று என்பது பலரும் அறிந்த செய்தி. மிகச் சுருங்கிய அளவில், மிக விரிந்த பொருள்களைச் சிறந்த முறையில், தருக்க நெறிமுறை பிறழாமல் தடை விடை நடையிலும், இஞ்ஞான்றை அறிவியல் ஆராய்ச்சிப் போக்கிற்கு ஏற்பத் தெளிவுற விளக்கும் சிறப்பிலும், சிவஞான போதம் ஈடு இணையற்றது. அது **பொது, உண்மை** என்னும் இரண்டு அதிகாரங்களைக் கொண்டது. பிரமாண இயல், இலக்கண இயல் சாதன இயல், பயனியல் என்னும் நான்கு இயல்கள் அமைந்தது.

### நூலின் சிறப்பு :

சிவஞான போதம், எளிய இனிய சிறு சிறு சொற்களால் அமைந்து, சிலவரியில் பலபொருள் உணர்த்தும் திட்ப நுட்பம் சான்ற சிறந்த சூத்திரயாப்பால், இயற்றப் பெற்றுள்ளது. பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டது. இப்பன்னிரண்டு சூத்திரங்களும், நாற்பது வரிகளில் அடங்கி விடுகின்றன. என்றாலும் இவ்வரிகளில் பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களைப் பற்றியும், இச்சூத்திரங்கள் முற்றமுடியத் தெற்றென விளக்கும் சிறப்புடையனவாக மிளிர்கின்றன.

சிவஞான போதத்தின் சிறப்பினைப் பின்வருமாறு பெரியோர்கள் வியந்து போற்றிக் கூறுவர். வேதம் பசுவைப்போன்றது. ஆகமங்கள் அப்பசுவின் பாலைப் போன்றவை. அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் பாடிய திருநெறிய தமிழ் ஆகிய திருமுறைகள், அப் பாலின்கண் உள்ள நெய்யைப் போன்றவை; திருவெண்ணெய் நல்லூரில் வாழ்ந்த ஆசிரியர் மெய்கண்டார் அருளிய சிவஞான போதம், அந்நெய்யினது சிறந்த சுவை நலத்தைப் போன்றதாகும்.

வேதம் பசு ; அதன்பால் மெய்ஆ கமம் ; நால்வர்
ஓதும் தமிழ்அதனின் உள்ளுறுநெய் ; — போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள் வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் திறம்.

**சூத்திரக் கருத்து :**

முதற் சூத்திரம் கடவுள் , இருத்தலை உணர்த்தும் பதியுண்மைக்குப் பிரமாணம் கூறுகின்றது. இரண்டாம் சூத்திரம் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும் மலங்களாகிய பாச வுண்மையை விளக்கு கின்றது. மூன்றும் சூத்திரம் ஆன்மா வாகிய பசு வுண்மைக்குப் பிரமாணம் கூறுகின்றது.

நான்காம் சூத்திரம் ஆன்மாவாகிய பசு இலக்கணத்தினையும், ஐந்தாம் சூத்திரம் மும்மலங்களாகிய பாச இலக்கணத்தினையும், ஆறும் சூத்திரம் கடவுள் ஆகிய பதி இலக்கணத்தினையும் விவரிக்கின்றன.

ஏழாம் சூத்திரத்தில் ஞானத்தை உணர்தற்குரிய ஆன்மாவாகிய அதிகாரியின் இயல்பும், எட்டாம் சூத்திரத்தில் ஞானத்தை உணரும் முறைமையும், ஒன்பதாம் சூத்திரத்தில் ஞானத்தைச் சாதிக்கும் முறையும் தெளிவிக்கப் படுகின்றன.

பத்தாம் சூத்திரம் பாச நீக்கம் பற்றியும், பதினொன்றும் சூத்திரம் சிவப்பேறு பற்றியும், பன்னிரண்டாம் சூத்திரம் சிவன் முத்தராகிய அணைந்தோர் தன்மையைக் குறித்தும் தெளிவுற விளக்குகின்றன.

**அதிகரணம் :**

இப்பன்னிரண்டு சூத்திரங்களில் ஒவ்வொன்றும், பல அதிகரணங்களைக் கொண்டதாகத் திகழ்கின்றது. அதிகரணம் என்பது கூறப்படும் பொருளின் பாகுபாடு பற்றியது. அஃதாவது நூலிற் கூறப்படும் பொருளும், அதன் கண் நிகழக் கூடிய ஐயப்பாடும், அதற்குப் பிறர் கூறும் கருத்துக்களும், அவற்றை மறுத்து நிலைநாட்டப் பெறும் முடிந்த முடிவாகிய சித்தாந்தத் துணிபும், இவற்றிடையே ஒன்றற் கொன்றுள்ள தொடர்பு பற்றிய இயைபும், ஆகிய ஐந்து கூறுகளையும் உட் கொண்டதாகத் திகழும் பாகுபாடே அதிகரணம் எனப்படும். இவைகள் ஐந்தும் முறையே **விஷயம், சம்சயம், பூர்வ பட்சம், சித்தாந்தம், சங்கதி** என வழங்கப்படும். இவற்றுள் சங்கதி என்னும் இயைபானது, நூல் இயைபு, அதிகார இயைபு ஓத்தின் இயைபு, பாத இயைபு, அதிகரண இயைபு என ஐந்து வகைப்படும். இவ்வனைத்துக் கூறுகளும் ஒருங்கே நன்கு அமைந்த நூலின் சிறு சிறு உட்பகுதிகளே, அதிகரணங்கள். இங்ஙனம் சிவஞான போதத்தில் அதிகரணங்கள், முப்பத்தொன்பது அமைந்துள்ளன.

சிவஞான போதம் என்னும் செந்தமிழ்த் தத்துவ ஞான நூலை, ஆசிரியர் மெய்கண்டார் எவ்வளவு சிறந்த முறையில் சங்கிலித் தொடர்போன்று, ஒன்றினொன்று பிரிவற இயைந்த கருத்துத் தொடர்பு வளமும், முன்னொடுபின் முரண்பாடு ஏதும் இல்லாத திட்ப நுட்பக் கலைத்திறமும் செறிய அருளிச் செய்துள்ளார் என்பது, ஆராயுந்தொறும் அளவிலா இன்பம் அளிக்கின்றது!

**அதிகரணப் பாகுபாடுகள் :**

(1) உலகம், தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலை உடையது; அம் முத் தொழிலும் செய்பவன் உருத்திரனாகிய அரனே. மும் மூர்த்திகளுள் ஏனைய இருவரும் முத்தொழிற்குட் படுவார்கள் என **மூன்று** அதிகரணங்கள் கொண்டது முதற் சூத்திரம்.

(2) இறைவன் உயிர்களின்பால் இரண்டறக் கலந்து நிற்பான். உயிர்களுக்கு வினைப்பயன்களை ஊட்டுபவன் இறைவனே. உயிர்கள் அச்சு மாறியே பிறந்து இறந்து வரும்; இறைவன் எங்கும் எதிலும் பரவி நிற்கும் சர்வவியாபகன் என்னும் **நான்கு** அதிகரணங்களைக் கொண்டது இரண்டாம் சூத்திரம்.

(3) இல்லை என்கின்ற அறிவுடனே சொல்லுகையால் அறிவாகிய உயிர் உண்டு: '**எனது உடல்**' என்று பொருட் பிறிதின் கிழமையாகச் சொல்லுகையால் உடற்கு வேறாக உயிர் உண்டு; மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்

பொறிகளையும் கொண்டு, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து புலன்களை யும் ஒருவனே அறிதலின், ஒவ்வொன்றை மாத்திரம் தனித்தனியே அறிகிற ஐம்பொறிகளுக்கும் வேருக உயிர் உண்டு; கனவு உடலை விட்டு நனவு உடலில் வருவதனுல், அக்கனவு உடலாகிய சூக்கும தேகத்திற்கு வேருக உயிர் உண்டு; உறங்கும் பொழுதும் பிராணவாயு இயங்கா நிற்பவும், உடம்புக்கு நுகர்ச்சியும் தொழிலும் நிகழாமையால், உறங்காத பொழுது நுகர்ச்சியும் தொழிலும் உடையதாகப் பிராணவாயுவுக்கு வேருக உயிர் உண்டு. மறந்து மறந்து நினைத்து உணர்ந்து வருவதால், மறவாமலே எதனையும் அறிகின்ற பிரமத்திற்கு வேருக உயிர் உண்டு. எல்லாத் தத்துவங்களுக்கும் தனித்தனியே வேறு வேறு பெயர் வழங்கி வருவதனுல், அந்தந்தத் தத்துவங்களுக்கும் வேருகத் தனியே ஓர் உயிருண்டு என ஏழு அதிகரணங்களை உடையது மூன்ரும் சூத்திரம்.

(4) மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அகக் கருவிகளாகிய அந்தக் கரணங்களுக்கு உயிர் உடன் கூடினுலன்றித் தொழில் நிகழாமையினுல், அவ்வந்தக் கரணங்களுக்கு வேருக உயிர் உண்டு; ஆணவ மல மறைப்பினுல்தான் உயிருக்கு அறிவில்லை; உயிர்கள் கேவலம் சகலம் சுத்தம் என்னும் மூன்று அவத்தைகளைப்படும் என மூன்று அதிகரணங்களாக அமைந்தது நான்காம் சூத்திரம்.

(5) உயிரால்தான் தத்துவங்களெல்லாம் தொழிற்படும்: இறைவனுல்தான் உயிர்களெல்லாம் அறியும் என்னும் இரண்டு அதிகரணங்களைக் கொண்டது ஐந்தாம் சூத்திரம்.

(6) உயிரின் அறிவினுற் சுட்டி அறியப்படும் பொருள்கள் எல்லாம் அழியும்; உயிர்களால் சுட்டிறந்து அப்பிரமேயமாக உணரப் படுபவனே இறைவன் என இரண்டு அதிகரணங்களை உட்கொண்டது ஆரும் சூத்திரம்.

(7) இறைவன் பாசத்தை அநுபவிக்க மாட்டான்; பாசம் இறைவனை அநுபவிக்காது; உயிரே இறைவனையும் பாசத்தையும் அநுபவிக்கும் என்னும் மூன்று அதிகரணங்களை உட்கொண்டது ஏழாம் சூத்திரம்.

(8) உயிருக்கு நல்லறிவு தவத்தினுல் தான் வரும்; உயிருக்கு ஞானசிரியனைகப் போந்து அறிவுறுப்பவன் இறைவனே யாவான்: உயிர் ஐம்பொறிகளைப் பற்றிக் கொண்டு நிற்றலால் தன்னையும் தான் அறிய வல்லதன்று; உயிரானது ஐம்பொறிகளிலே பற்று அற்ருல் தன்னையும் அறியவல்லதாகும் என நான்கு அதிகரணங்களைக் கொண்டது எட்டாம் சூத்திரம்.

(9) உயிரானது இறைவனின் ஞானத்தினுலேயே இறைவனைக் காணக்கூடும்; உயிர்க்குப் பாசமாகிய மலங்களில் பற்று அற்ருல் இறைவன் வெளிப்படுவான்: திருவைந்தெழுத்தைக் கணித்து இறைவனை வழிபடுவதனுல், மலவாதனை கழியும் என மூன்று அதிகரணங்களை உடையது ஒன்பதாம் சூத்திரம்.

(10) இறைவனுடன் ஒன்ருகி நிற்க; உன்னுடைய தொழிலை எல்லாம் இறைவனுடைய பணி என்றே கருதிச் செய்க என்னும் இரண்டு அதிகரணங்களாக அமைந்தது பத்தாம் சூத்திரம்.

(11) மெய்யுணர்வாளனுகிய சீவன் முத்தனுக்கு வருகிற இன்ப துன்பங்களையெல்லாம் இறைவனே ஏற்றுக் கொண்டு அனுபவிப்பான்; இறைவனை மறவாமல் அன்பு செலுத்தி வந்தால் இறைவனோடு நாம் ஒன்றுபட்டு இன்புறலாம் என இரண்டு அதிகரணங்கள் ஆக விளங்குவது பதினென்ரும் சூத்திரம்.

(12) ஆணவம் கன்மம் மாயை என்னும் மும் மலங்களையும் பற்றறக் களைக; சிவஞானச் செல்வர்களுடன் சேர்ந்து பழகி நலம் பெறுக; சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவபிரான் எனவே தெளிந்து நம்பி வழிபடுக; அங்ஙனம் வழிபடாமல் இருந்திருந்தால், வழிபடாமையை விடுக என்னும் நான்கு அதிகரணங்களாகத் திகழ்வது பன்னிரண்டாம் சூத்திரம்.

**மீனாட்சி சுந்தரம்பிள்ளை :**

சிவஞான போதத்தின் இத்தகைய பொருட் பாகுபாடுகளையும், கருத்து வகைகளையும் பற்றித் திருவாவடுதுறை ஆதினத்து மகாவித்துவானாக இருந்த பெருங் கவிஞர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் தாம் இயற்றிய நூல் ஒன்றில், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையில், இனிது தொகுத்துப் பாடியருளியிருக்கினறார்கள்.

"கவிதை இயற்றும் கவிஞர்கள் கருத்துக்களை வெளியிடத் தொடங்கும்போதே அவற்றை வரையறை செய்து தெளிவு படுத்திக் கொண்டு பாடுகின்றனர் என்று கூறுதல் இயலாது. அவர்களுக்கும் தெளிவில்லாமல், முதற்கண் கருத்துக்கள் குழப்பமாகவே பெரும்பாலும் இருக்கும். கவிதையை ஒருவாறு பாடி முடித்த பிறகே, கவிஞர்களுக்கும் தங்களுடைய கருத்துக்களின் முழு அளவும் வடிவமும் தெளிவாகப் புலப்படுதல் கூடும்" (1)

என இலக்கியக் கவிதை ஆராய்ச்சியாளர்கள் கூறுவது உண்டு.

ஆனால் நம்முடைய பெருங் கவிஞராகிய மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களோ, கவிதைபாடி முடித்துக் கருத்தைக் காண முயலும் ஒரு சில கவிஞர்களைப் போல் இல்லாமல், முன்பே வரையறுத்துத் திட்ப நுட்பமுறத் தெளிவு செய்து கொள்ளப்பட்ட கருத்துக்களை, அழகிய இனிய செய்யுட்களாக இயல்பாகவும் எளியவாகவும் பாடியிருத்தல் வியப்பிற்குரியதாக உள்ளது. கருத்துக்களையும் சொற்களையும் செய்யுள் வடிவிற்காக ஒருசிலர், சிதைத்தும் குறைத்தும் மாற்றியும் சேர்த்தும் பலவகைகளில் பழுது படுத்துவது உண்டு. அங்ஙனம் எல்லாம் இல்லாமல் சொற் சிதைவும் கருத்துப் பிறழ்வும், மரபு நெறி மாற்றமும் சிறிதளவும் நிகழாமல், சிவஞான போத நூற்பொருட் கருத்தினைச் செம்மையுறப் பாடியிருக்கும் திறன் பெரிதும் மிகப் பாராட்டற் பாலது.

**தத்துவ ஞானக் கடல் :**

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பெருங் கவிஞர் மட்டுமே அல்லர்; செந்தமிழ் மொழியின் பற்பல சிறந்த பெருநூல்களையும் ஆழ்ந்தினிது ஆராய்ந்து கற்றுணர்ந்த பெரும் புலவர்! புலவர்களில் சிலர் சிற்சில இலக்கண இலக்கியக் கலை நூல்களையே பெரிதும் பயின்று பழகியிருப்பர். **சிவஞான போதம், சிவஞான சித்தியார்** போன்ற அரும்பெரும் தத்துவ ஞான நூல்களில் பலருக்குப் பயிற்சி இராது. ஒரோவழியிருப்பினும், அவற்றில் ஆழ்ந்த அறிவும் புலமையும் தெளிவும் அமைதல் மிகமிக அருமை. ஆனால் நம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களோ, பிறபல இலக்கண இலக்கியக்கலைத் துறைகளிற் போலவே சிவஞானபோதம் முதலிய தத்துவ ஞானத் தமிழ் நூற் கடலிலும், ஆழ்ந்து மூழ்கி நீந்தித் திளைத்து இன்புற்ற மாபெரும் பேரறிஞர். இவ்வுண்மை சிவஞானபோத நூற்பொருட் கருத்தினை மிகத் தெளிவுற எடுத்து விளக்கி, எளிமையும் இனிமையும் அமைய அவர் பாடியிருக்கும் முறையே, நமக்குத் தெற்

---

(1) "Pure Poetry is not the decoration of a pre-conceived and clearly defined matter: it springs from the creative impulse of a vague imaginative mass pressing for development and definition. If the poet already knew exactly what he meant to say, why should he write the poem? The poem would in fact already be written.

For only its completion can reveal, even to him, exactly what he wanted. When he began and while he was at work, he did not possess his meaning; it possessed him.

It was not a fully formed soul asking for a body; it was an inchaote soul in the inchaote body of perhaps two or three vague ideas and a few scattered phrases."

—**Prof. A. C. Bradley,**
Poetry for Poetry's sake

றென உணர்த்துகின்றது. அப் பெருந் தகையின் அருமை பெருமைகளை நாம் எவ்வாறு அளவிட்டு அறிய வல்லேம்!

சிவஞான போதத் தெளிபொருளை விளக்கும் அச்சிறந்த பாடல்களின் பொருள் யாவருக்கும் இனிது விளங்கும் படி (2), சொற்களைப் பிரித்தும் குறியீடு கள் முதலியன அமைத்தும், அப்பாடல் கள் கீழே தரப்படுகின்றன.

அருமையினும் அருமைஎன யாரும்
பாராட்டிடுவது; அளவு இலாத
பெருமையுடை நூற்கெல்லாம் முடியாவது;
எத்துணைத்தாய்ப் பிறங்கும்? என்னின்,
இருமைதரு பன்னிரண்டு சூத்திரமாய்
முடிவுபெற்றது; இதுகேள்! என்றே,
ஒருமைமனம் நடுப்பதியப் பெருங்கருணை
தழைத்துஇறைவன் உரைப்பது
ஆனன். (1

எழுவாய்ச் சூத்திரம் பதிக்குப் பிரமாணம்;
பாசத்திற்கு இரண்டு; மூன்று
பழுதாகாப் பசுவிற்காம்; நான்கு, ஐந்து,
ஆறு,
இயல் பசு பாசம் பதிக்கு ஆம்
வழுவாத இலக்கணம்; ஏழ் எட்டு
ஒன்பான்
சாதனமே; மற்றை மூன்றும்
எழுதாத சாத்தியம் கூறுதல்ஆகும்;
இன்னும் ஒன்று உண்டு இயம்பக்
கேளாய்! (2)

முந்தியதாம் சூத்திரத்தில், சகம்தோற்றம்
நிலைஇறுதி மூன்றது என்றும்;
நந்தியமற்று அஃது அரனலே
உடையதுஎன்றும்; மேல் நாடுமாறு
வந்தியலும் இருவரும் முத்தொழிற்படுவர்
என்றும்; வரையறுக்கப் பட்ட
உந்தியமூன்று அதிகரணம் உள்ளதுகாண்
இந்தியங்கள் ஒருங்கு மாய்த்தோய்! (3)

நேய! இரண்டாவது அரன் உயிர்களிலே
இரண்டுஅறுமா நிற்பன் என்றும்;
மாய கன்மபலனை உயிர்களுக்குஅரனே
கொடுத்தூட்டும் பண்பன் என்றும்;
மேயஉயிர் அனைத்தும் அச்சுமாறியே
பிறக்குமென்றும்; மேலோன் ஆய
தூயஅரன் சருவ வியாபகன்என்றும்;
நான்கு ஆகித் தோன்றும். (4)

மூன்று, இலஎன் அறிவுடனே சொல்லு
கையால்
அறிவுஉயிர்தான் முழங்க உண்டு;
மான்ற 'எனது உடல்' என்ற பொருட்
பிறிதின்
கிழமையா வழங்க லாலே
ஆன்றஉடலினுக்கு வேறாய் உயிர்உண்டு;
ஒருவனே ஐந்தும் ஓர்வில்
ஏன்ற ஒவ்வொன்று அறிகின்ற ஐந்தினுக்கும்
வேறாய்ஓர் உயிர்உண்டு என்பர். (5)

கனவுஉடலை விட்டு நனவுஉடலிலே
வருகையினால், கனவு உடற்கும்
மனம்நக வேறாய் உயிர்உண்டு; ஒருவா
நித்திரையினும் பிராண வாயு
கனம்மருவு தொழில்செயவும், சரீரத்திற்குப்
புசிப்பும் தொழிலும் ஆன
உனவுஇன்மையால் பிராணனுக்கு வேறாய்
உயிர்ஒன்று உண்டு; மாதோ! (6)

(2) "To a volume of verse, what is all-important is the lay-out......A poem needs room to breathe in on the page; it needs wide margins, and, in my opinion, large type. The thing is that verse is carefully constructed, if it is good vsrse, to be read in a certain way, and a proper lay-out is essential if the reader is to find his task made easy. This is especially true of poems written in elaborate and complex forms. In such poems a misprint is fatal..."

—Dom Moraes,
Producing Poetry.

மறவியுற்று மறவியுற்று நினைக்கின்ற
படியாலே, மறவி தீர்ந்த
உறவி அரனுக்கு வேறாய் உயிர்உண்டு;
எல்லாத் தத்துவங் களுக்கும்
சிறவுபெற வெவ்வேறு பெயர் இருக்கும்
விதத்தாலே, தெரிய வந்த
அறவரு தத்துவங் களுக்கு வேறாக
உயிர்உண்டால்; ஆக ஏழே! (7)

நாலில், அந்தக் கரணங்கட்கு உயிருடனே
கூட்டுறவு நண்ணின் அன்றிச்
சாலஒரு தொழில் இல்லாமையின், அந்தக்
கரணங்கள் தமக்கு வேறாய்
ஏல உயிர்உண்டு ; மல மறைப்பினால்
உயிர்க்கு அறிவொன்றில்லை; நாலும்
கோலஉயிர் மூன்று அவத்தைப்படும்; ஆக
மூன்று என்றே கூறல் ஆமே. (8)

ஐந்தின், உயிராலே தத்துவங்கள் எலாம்
தொழில்செய்யும்; அரன் தனாலே
மைந்துஉயிர் எலாம்அறியும் ; இரண்டே ;
ஆறனில்,
உயிர்கள் மதியினாலே
முந்தி அறிவன அனைத்தும்அழியும் ;
மொழிதரும் அப்பிரமேயம் ஆக
நந்தி அறியப்படுவான் அரன் ; இதற்கும்
இரண்டு ஆக நவிலல் ஆமே: (9)

ஏழில், அரன் பாசத்தை அனுபவியான் ;
அனுபவியாது இயைப் பாசம்
வாழ் அரனை ; அவ்விரண்டும் அனுபவிக்கும்
உயிர் ; மூன்றே ; மருவும் எட்டில்
ஊழ் உயிர்க்கு நல்லறிவு தவத்து அடையும் ;
அரன்குருவாய் உறுவன் ; ஐந்தும்
ஆழும்உயிர் பற்றுதலில் தனையறியா ;
தனைஅறியும் அவை அற்றாலே! (10)

ஒன்பானில், அரன் ஞானத்தால்
அரனைக்காணும்
உயிர் ; உயிர் பாசத்தில்
வன் பார் பற்றுஅறின், அரன் தோற்றுவன் ;
மலம்போம் மதித்து ஐந்து எண்ணில் ;
இன் பார் மூன்று ; ஒருபதின், நீ அரனுடன்
ஒன்றாகி நிற்றி ; இயையு மாறு
நின்பாலாம் தொழிலனைத்தும் அரன்பணி
என்றே கோடி ; நிகழ்த்து இரண்டே.
(11)

பதினொன்றில், ஞானியுறும் விடயம்அரன்
அனுபவிப்பான் ; அரனைப் பற்றி
முதிர் அன்பின் இருந்தால் அவ் அரன்
இடத்தே
கலப்பன் ; இது மொழி இரண்டே ;
எதிரில்கடை மும்மலமும் களைக ;
சிவஞானியொடும் இயைக ; ஞானி
கதிஇலிங்கம் சிவன்என்றே வழிபடுக ;
படாமையை உட்கழிக்க ; நான்கே.
(12)

பன்னிரண்டு சூத்திரத்தின் தனிச்சிறப்பும்,
ஓரோவொன்றின் பாகு பாடும்,
இன்னிய! நாம் எடுத்துரைத்தாம் ;
இன்னும்கேள்!
சிலாதமுனி வேண்ட வந்தோய்......
—மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

---

| | | | |
|---|---|---|---|
| **திருக்குறள்**போல் | நீதிநூல், | **சிவஞான** | **போதம்**போல் |
| சுருக்கமிகும் | மெய்ப்பொருள்நூல், | தூய்மை**த்தொல்** | **காப்பியம்**போல் |
| திருத்தமிகும் | இலக்கண நூல், | சிறந்**ததிரு** | **வாசகம்**போல் |
| உருக்கமிகும் | பக்திநூல், | உலகினில்வே | றெங்குமில்லை, |

—ஆசிரியர்

# வியப்பினும் வியப்பு

## முன்னுரை :

உலகியற் பொருள்களுள் ஒவ்வொன்றையும் உற்று நோக்கி உணருந்தோறும் நம் உள்ளம் வியப்பில் அழுந்துகின்றது. எந்த ஒரு சிறு பொருளாயினும், அதனை உற்று நோக்கி நாம் உன்னி உணர முற்பட்டால், நமக்கு அஃது அளவிலா வியப்பை விளைக்க வல்லதாகத் திகழ்கிறது. 'கண்ணுள்ளவன் காணக்கடவன்' என்றது போல, நமக்கு உண்மையிலேயே நல்ல காட்சித் திறனும், அதனை யொட்டிய சிந்தனைத் திறனும் அமையப் பெற்றிருக்குமாயின், உலகிலுள்ள ஒவ்வொரு சிறிய எளிய பொருளிலும் கூட, எத்தனையோ பல நுண்ணிய உண்மைகளையும் பண்புகளையும் நாம் கண்டு உணர்ந்து இன்புறலாம். என்றாலும் "அருட்கண் இலாதார்க்கு அரும் பொருள்கள் தோன்றா" எனத் திருமூலர் அருளிச் செய்திருப்பது போல, உலகியற் பொருள்கள் ஒன்றும் நமக்குச்சிறப்புடையனவாகத்தோன்றுவதில்லை. ஆனால் ஞானிகளுக்கோ எந்த ஒரு பொருளைக் காண்கிற பொழுதும், அதன் சிறப்பும், அதனைப் படைத்தருளிய இறைவனின் சிறப்பும் புலப்பட்டுத் திகழ்கின்றன. ஒரு சிறிய மலரைக் கண்டாலும் அதன்கண் ஞானிகள் கடவுளின் கை வண்ணத்தையே காண்கிறார்கள்.

> "பார்க்கின்ற மலரூடும் நீயே இருத்தி;
> அப்பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்"

என்பது தாயுமானவரின் அருளனுபவத் திருமொழி. இதனைப் போலவே, ஞானிகள் பலரும் கடவுளை எல்லாப் பொருள்களின் உள்ளும் புறமும் கண்டு, வியந்து தொழுது களிக்கின்றார்கள்.

## சிதம்பர சுவாமிகள் :

திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள், ஒரு பூசனிக் கொடியையும் காயையும் காண்கின்றார். அதனைக் கண்ட அவர் தம் திருவுள்ளத்தில் தொடர்புற்ற பல சிந்தனைகள் கிளர்ந்து ஓங்கி எழுந்தன. பிற செடி கொடிகளுக்கு இல்லாத வகையில் பூசனிக் கொடிக்கு ஒரு சிறப்பியல்பு உண்டு. அது பூக்கும் போதே காயுடன் பூக்கும். கொடியில் சிறியதாகப் பூவுடன் தோன்றும் பிஞ்சினைத் தரையிற் படிந்து சிதையாமலும், சிதைக்கப் படாமலும் இருத்தற் பொருட்டு, ஒருவன் ஒரு குடத்துக்குள் இட்டு வைக்கிறான். அப்பிஞ்சு நாளடைவில் வளர்ந்து அக்குடத்தின் அளவு பருத்து நன்கு பழுத்துவிடுகின்றது. அப்போது தோட்டக்காரன் அப் பூசனிப் பழத்தை எடுக்க விரும்புகிறான். எடுக்குங்கால் பழம் சிதையாமலும், குடம் உடையாமலும் இருக்க வேண்டும் என்று முயல்கின்றான். ஆனால் அவ்வாறு குடம் உடையாமலும், பூசனிப் பழம் சிதையாமலும் எடுத்தல் ஒரு போதும் இயல்வதில்லை. இரண்டில் ஏதேனும் ஒன்று சிதைவுற்று அழிந்தேபோகின்றது. இதனை நாம் எல்லோரும் அறிவோம். இதனைச் சிதம்பர சுவாமிகள் சிந்திக்கின்றார். எதன் கண்ணும் இறைவனின் திருவருட்டிறத்தையே கண்டுணர்ந்து இன்புறும் அப் பெருந்தகையார்க்கு, இறைவன் நாளும் நாளும் நிகழ்த்தி வரும் அற்புத அருட்செயல் ஒன்று அவர் தம் சிந்தனைக்கு விருந்தாகின்றது.

## அற்புதப் பெருஞ் செயல் :

கடவுள் ஒருதோட்டக்காரர். தாயின் கருப்பையாகிய குடத்தில் "அறுகு நுனி பனியனைய சிறிய துளி" எனத்தக்க கரு, ஆகிய பூசனிப்பிஞ்சை விட்டு வைக்கின்றார். அப்பிஞ்சு தாயின் வயிறாகிய குடத்தில், பத்து மாதங்கள் அல்லது முந்நூறு நாட்கள் தங்கிப் "பெரியதொரு ஆகமாய்" முதிர்ந்து வளர்ந்து விடுகின்றது. சாதா

ரணத்தோட்டக்காரன் குடத்தை உடைத்தே பழத்தை எடுப்பான், ஆனால் கடவுளாகிய தோட்டக்காரனே ஒரு பெரிய வித்தைக்காரன் :

"விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும்
யாவையும் வைச்சு வாங்குவாய்"

என மாணிக்கவாசகர் பாடுவது போல, அவன் விதையில்லாமலே பயிர் செய்ய வல்லவன்; விண்ணையும்மண்ணையும்படைத்துத் தனக்குள் வைத்து வெளிப் படுத்துபவன்; ஆதலால் குடம் உடையாமல், பழம் சிதையாமல், இரண்டையும் தனித் தனியே பிரித்து விடுவித்துக் காப்பாற்றியருள்கின்றான். தாயின் வயிறுகிய குடத்திலிருந்து, குழந்தையாகிய பூசனிப் பழம் இனிதே நலமுற வெளிப் படுதலைக் காண்கின்றோம். இறைவன் நிகழ்த்தி யருளும் வியத்தகு அற்புதப்பெருஞ்செயல் அன்றோ இது! எனச் சிதம்பர சுவாமிகள் சிந்தித்து இறும்பூது எய்துகின்றார்.

**கருணை யுள்ளம் :**

தாயின் சுரோணிதம் ஆகிய செந்நீரில், தந்தையின் சுக்கிலம் ஆகிய வெண்ணீர் போய் ஒருபால் சேர்கின்றது. அதனால் திங்கள் தோறும் சிந்துகின்ற உதிரம் சிந்தாமல் பந்தமுறத்தங்குகிறது. குயவன் ஆகிய சித்திரிகன், மண்ணைக் கொண்டு பிசைந்து பதப்படுத்திப் பலப் பல அழகிய பதுமைகளை இயற்றுதல் போல, கடவுளாகிய பெருங் கலைஞனும், செந்நீரும் வெண்ணீரும் சேர்ந்த கலவையிலே, கையும், காலும், தலையும், முகமும், மூக்கும் விழியும் அழகுற அமைந்த அற்புதக் குழந்தை உருவினைப் படைத்து, அதற்கு உயிரும் கொடுத்து வெளிப்படுத்தியருள்கின்றான். அவனுடைய கை வண்ணத்தையும் கருணை உள்ளத்தையும், நாம் என்னென்பது? வியப்பிலும் வியப்பாக உள்ள இத்தகைய இயற்கைச்செய்திகளை எண்ணி எண்ணி உன்னுந்தோறும், இறைவன் ஒருவன் உண்டு என்னும் உணர்வு ஒவ்வொருவருக்கும் உண்டாதல் திண்ணமே யாகும்.

**பஞ்சதிகார விளக்கம் :**

இதனைச் சிதம்பர சுவாமிகள் பின்வரும் பாடலின்கண் அழகுறக் குறிப்பிட்டு அருள்கின்றார். அப்பாடல் பின்வருமாறு :—

"செந்நீரில் வெண்ணீர் போய்ச் சேர்ந்தொரு
பால் திங்கள்
சிந்துதிரஞ் சிந்தாமற் பந்தமுறத் தங்கி
அந்நீர்கள் மண்ணதனுற் சித்திரிகன் பதுமை
ஆக்குதல்போல் ஒருவரும்பண் ணுதாக்கை
யாகித்
தந்நீர்மை குறையாமல் தாயுதரத் திருந்து
தகுகடப்பூ சனிப்பிஞ்சு தான்பருத்து
வெளியில்
மன்னீர்மை குன்றுமற் கடமும் உடையாமல்
வருவதுபோல் யோனிவழி குழவிவரல்
வியப்பே"

சிதம்பர சுவாமிகள் அருளிய இப் பாடல், அவர் இயற்றிய 'பஞ்சதிகார விளக்கம்' என்னும் நூலில் அமைந்து காணப்படுகின்றது.

---

## கோயில் நிகழ்ச்சிகள்

**துவஜஸ்தம்பப் பிரதிஷ்டை விழா :**

1. ஸ்ரீ அபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரர் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம், சென்னை-1.

**ஆவணிமூல உற்சவம் ;**

2. மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில்.
3. தருமபுர ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள், ஆவணிமூல விழாவில் காஞ்சிபுரம் திரு க. வச்சிரவேல் முதலியார், B.A.,L.T. அவர்களுக்குச் "சித்தாந்தக் கலைச் செல்வர்" என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்தருளினார்கள். (25—8—66)

# தெய்வம் தெளிவும், சிதம்பர சுவாமிகளும்.

**முன்னுரை :**

உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும், பொதுவாகக் கடவுள் உணர்ச்சியென்பது என்றுமே இருந்துவந்திருக்கின்றது. மனிதனுக்குரிய உணர்ச்சிக் கூறுகள் பலவற்றுள், கடவுள் பற்றிய உணர்ச்சிக் கூறும் (Instinct) இயல்பாகவே அமைந்து கிடக்கின்றது. நாகரிகம் எய்தப் பெருத காட்டு மக்கள் முதல், நாகரிகத் துறையில் நனி சிறந்த மேன் மக்கள் ஈருக, அனைவருக்குமே அவரவர்களின் நிலைக்கும் பண்பாட்டுக்கும் ஏற்பக் கடவுள் உணர்ச்சி அமைந்து விளங்கி வரக் காண்கின்ருேம். மனித குலம் தோன்றிய காலம் முதல், இயல்பாகவே எல்லா நாடுகளிலும் எல்லா இனத்தினர்களிடையும், கடவுளுணர்ச்சியும் வழிபாடும் நிலவி வருகின்றன.

ஆயினும் இந்நாளில் ஒரு சிலர் கடவுள் ஒருவர் உண்டா? இல்லையா? என்ற ஆராய்ச்சியைத் தாமே எழுப்பிக்கொண்டு, கடவுள் இல்லை என்றும் கரைந்து வருகின்றனர். இத்தகையோர் ஒரு சிலர் பண்டைக் காலத்திலும் இருந்தனர் என்பது,

> "ஆத்தம் ஆனர் அயலவர் கூடி
> நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்"

என மாணிக்கவாசகரும்,

> "நடையை மெய்யென்று நாத்திகம்
> பேசாதே"

எனத் திருநாவுக்கரசரும் பிற சான்ருேர்களும் பாடியிருத்தல் கொண்டு உணர்கின்ருேம்.

**அருளாளர்கள் :**

நம்முடைய பண்டைய அருளாளர்கள், தம்முடைய வாழ்க்கையில் கடவுளைத் தம் கண்ணர நேரே கண்டு இன்புற்ருர்கள். அவர்தம் அருளை ஆரப்பெற்று அளவிலா அநுபவங்கள் பல அடைந்து நலமுற்ருர்கள். கடவுளின் பலவகை அரும் பெரும் பண்புகளையும் அருள் நலங்களையும் குறித்துத் தாம் பாடியருளிய சாத்திரம் தோத்திரம் என்னும் நூல்களிலெல்லாம் விரிவாக எடுத்து விளக்கியருளியிருக்கிருர்கள். என்ருலும், கடவுள் ஒருவர் உண்டு என்பதற்கு உரிய காரணங்களையோ சான்றுகளையோ, இந்நாளைய மக்கள் அனைவருக்குமே தெளிவுற விளங்கும்படி அவர்கள் அருளிச் செய்திருப்பதாக நமக்குப் புலப்படவில்லை. அதனல் கடவுள் நம்பிக்கை உடையவர்களும் கூட, ஒரு சில சமயங்களில் தம்மோடு வாதம் நிகழ்த்தும் கடவுள் நம்பிக்கை யில்லாதவர்களுக்குத் தக்க மறுப்புரைகளோ மாற்றுரைகளோ வழங்க முடியாமலிருக்கின்றனர்.

**அநுபவப் பொருள் :**

அத்தகைய நிலைகள் ஏற்படும் போது தான், நம்முடைய முன்னேர்களாகிய பெருமக்கள் தம்முடைய நூல்களில் ஏன் இத்தகைய ஐயங்களுக்கும் வினக்களுக்கும் தக்க விளக்கங்களை அருளிச் செய்யாமல் போயினர் என்ற ஓர் எண்ணம் நமக்குத் தோன்றுகின்றது. சமயச் சான்ருேர்களும் அருளாளர்களும் கடவுளை அநுபவப் பொருளாக நன்கு உணர்ந்திருந்தனர். நம்மைப் போல வெறும் அறிவாராய்ச்சி நிலையில் அவர்கள் இருக்கவில்லை. கடவுளைத் தம்முடைய ஐந்து புலன்களாலும் கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் உணர்ந்திருந்த அருளாளர்களுக்கு, நம்மைப் போலக் கடவுள் ஒருவர் உண்டா? இல்லையா? என்ற ஐயப்பாடோ ஆராய்ச்சியோ நிகழ வாய்ப்பே இல்லை. கையிலுள்ள கனிக்குக் கண்ணடி வேண்டுமா? என்ற நிலையில், தம்முடைய ஐம்புலன்களுக்கும்

தெளிவுறப் புலப்பட்டுத் திகழும் ஒரு பொருளை, உண்டு என்று சான்றுகள் தேடிக் காட்டி நிறுவ வேண்டிய இன்றியமையாமை அவர்களுக்கு நேர்ந்திலது.

செய்ய மேனியன் தேனெடு பால்தயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மைய லாய்மற வாமனத் தார்க்கெலாம்
கையில் ஆமல கக்கனி ஒக்குமே
—திருநாவுக்கரசர்

தடக்கையில் நெல்லிக் கனியெனக்
காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தான்எனைச் செய்தது''
—மாணிக்கவாசகர்

என்றாற்போல, அவர்களுடைய அருளனுபவம் அமைந்திருந்தமையினால்தான், அத்தகைய அநுபவப் பொருளை உண்டென்று கூறி உணர்த்தி நிலை நாட்ட அவர்கள் முற்பட்டிலர்,

**சுடர்விட்டுளன் சோதி:**

அறிவில்லாத ஒருவனுக்கு ஒன்றை அறிவிக்க முற்படுபவன், தானே அறிவில்லாதவன் எனப்படுவான். அறிவில்லாதவன் பிறர் அறிவித்தாலும் அதனை அறிந்து கொள்ளாமல் தன்னுடைய அறிவின் நிலைக்கு எட்டியபடியே எதனையும், அறிந்துகொள்ள வல்லவனாவான். பிறர் வலிந்து சென்று அவனுக்கு அறிவுறுத்த முற்படுதல் பயன் பெறாது. அவரவர்க்கும் அதததற்குரிய பருவமும் பண்பும் பக்குவமும் வரப் பெற்றால் அதனைத் தாமே உணர்ந்து கொள்வர். இந்த உண்மையை உணர்ந்தே, பெரியோர்கள் கடவுள் உண்மையை வற்புறுத்தக் காரண காரியங்கள் ஏதும் காட்டி நூல் முகமாக விளக்கப் பெரிதும் முனைந்து முயன்றிலர். ''காணாதாற் காட்டுவான் தான் காணான்; காணாதான் கண்டானாம் தான் கண்டவாறு'' என்பது திருக்குறள்.

நாம் நம்முடைய சிற்றறிவைக் கொண்டு பேரறிவும் பேராற்றலும் உடைய பரம் பொருளைக் குறித்து அளந்து அறிந்து ஆராயத் தலைப்படுதல், வேண்டாத வீண் செயலே யாகும். நம்முடைய எளிய சிறிய அறிவினால் இறைவனை அளந்து அறிய முயலுதல், ''நரிவால் கொண்டு கடலாழம் காண முயலுவது'' போன்ற அறிவில் செயலே ஆகும். ஆதல் பற்றியே திருஞான சம்பந்தர்,

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும்
மிக்குச்
சோதிக்க வேண்டா, சுடர் விட்டுளன்
எங்கள் சோதி''

என அருளிச் செய்துள்ளார். பிறவிக் குருடனுக்குப் பட்டப் பகலும் காரிருள் போன்றே காணப்படும். கூகைக்குப் பகலும் இருளாகவே தோன்றும். பித்த நோயுற்றோர்க்கு இனிய சுவைப் பொருளும் கசப்பாகவே இருக்கும். இவற்றையெல்லாம் எண்ணியே, நம் சமயச் சான்றோர்கள் கடவுளுண்மையினைக் காரண காரியங்கள் காட்டி நூல்களின் வாயிலாகப் பெரிதும் அறிவுறுத்த முயற்சி செய்திலர்.

**சிதம்பர சுவாமிகள் :**

என்றாலும் ஒரு சில பெரியோர்களும், அருளாளர்களும், நம்மீது வைத்த பேரருட் பெற்றிமையால், நம்முடைய சிற்றறிவு நிலைக்கு எட்டும் வகையில் மிகவும் கீழ் இறங்கிவந்து, தம்முடைய அனுபவப் பொருளாகிய கடவுளை நாம் நம் அறிவு கொண்டும் ஒரு சிறிதேனும் உன்னி உணரும் வகையில் விளக்கிக் காட்ட முற்பட்டுள்ளனர். அத்தகைய சிறந்த அருளாளர்கள் பலருள் சிதம்பர சுவாமிகள் அவர்கள் ஒருவராவர். சிதம்பர சுவாமிகள் சென்னைக்கு அணித்தாகவுள்ள திருப்போரூரில் வாழ்ந்தவர். அங்கே முருகப் பெருமானுக்குத் திருக்கோயில் அமைத்தருளியவர். 'திருப்போரூர்ச் சந்நிதி முறை' என்னும் சிறந்த பக்திப் பெருநூலைப் பாடியருளியவர். பேரூர்ச் **சாந்தலிங்க சுவாமிகள்** இயற்றிய வைராக்கிய தீபம், வைராக்கிய சதகம், கொலை மறுத்தல், அவிரோத வுந்தியார் என்னும் நூல்களுக்குச் சிறந்த உரைகள் இவரால் வரையப்பட்டுள்ளன. **காழிக் கண்ணுடைய வள்ளலார்** அருளிய 'ஒழிவில் ஒடுக்கம்' என்னும் நூலுக்கும் இவரால் உரை செய்யப்பட்டுள்ளது.

விருத்தாசலம் **குமாரதேவர்** அவர்களின் மாணவராய் விளங்கி அருள் பெற்ற இப் பெருந்தகையார், இயற்றிய நூல்களுள் **பஞ்சதிகார விளக்கம்** என்பது ஒன்று. அளவாற் சிறிய பொருளாற் பெரிய அந் நூலின்கண், நமது சிதம்பர சுவாமிகள் கடவுள் ஒருவர் உளர் என்பதற்குப் பின் வரும் கருத்துக்கள் அமையும் முறையில் விளக்கம் செய்தருளியுள்ளார்.

**கருத்துச் சுருக்கம் :**

இவ்வுலகில் உள்ள சூரியன், சந்திரன், பரந்த வானப் பெருவெளி, அங்கு ஒளிரும் எண்ணில்லாத விண்மீன்கள், கடல்கள், மேகங்கள், ஓங்கியுயர்ந்த மலைகள், நெருப்பும் காற்றும் போன்ற பூதங்கள், மற்றும் எத்தனையோ சரம் அசரம் என்னும் இயங்கியல் நிலையியற் பொருள்கள் என்பவற்றின் இயல்பையெல்லாம் எண்ணிப் பார்த்தால், கடவுள் ஒருவர் உண்டு என்னும் உணர்வு கட்டாயம் உண்டாகும். உலகப் படைப்பும் இயற்கையும் எத்துணை வியக்கத் தக்கனவாக இருக்கின்றன. சூரியன் காலையிலும், சந்திரன் மாலையிலும், விண்மீன்கள் இரவிலும் தத்தம் ஒழுங்கு முறைகள் தவறாமல் ஒளி வீசி உழன்று கொண்டு வருகின்றன. பரந்த பெருங் கடலின் நீரை முகந்து கொண்டு பல இடங்கட்கும் பரவிச் சென்று மேகங்கள் மழை பொழிந்து பயிர்களை வாழ்விக்கின்றன. கடல் தன் எல்லையிற் கடந்து பொங்கி விடாமல் ஒரு வரம்புக்குள் அடங்கி நிற்கின்றது.

காலம் என்பது பகலும் இரவுமாக மாறி மாறி வருவதுடன், இளவேனில் முதுவேனில் கார்காலம் குளிர்காலம் முன் பனிக்காலம் பின் பனிக்காலம் எனப் பல வேறு பருவங்களாகவும் அமைந்து, அவ் வக்காலங்களுக் கேற்ற செடி கொடி வகைகளை வளர்த்தும், இயற்கை நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்தும், காய் கனி பயிர் வகைகளை அளித்தும் உதவி புரிகின்றது.

பாம்பு முதலிய நச்சு உயிர்கள், மந்திரம் முதலியவற்றுக்குக் கட்டுப்பட்டு வசமாகின்றன. உயிர்க் கூட்டங்கள் தம்முடைய இனவளர்ச்சியுற்றுப் பெருகி, வழி வழியே தம் பண்புகள் மாறாமல் விளங்கி வருகின்றன. யானை முதல் எறும்பு ஈறாக உள்ள எண்ணில்லாத கோடிக் கணக்கான உயிரினங்கள் யாவும் ஆணும் பெண்ணுமாக அமைந்து கூடிக் கலந்து வாழ்ந்து பெருகி வருகின்றன. இங்ஙனமே செடி கொடி வகைகளில் ஒவ்வொன்றும் தமக்கென ஒவ்வொரு தனித் தனி அமைப்பும் பண்பும் பயனும் பெற்றுத் திகழ்கின்றன.

மக்களில் சிலர் குருடு செவிடு ஊமை முடம் முதலிய குறைபாடுகள் உடையவர்களாக உள்ளனர். ஒரு சிலர் தீராப் பிணியாளராயும் மற்றும் சிலர் காண்பதற்கே அருவருப்பை விளைவிக்கும் குரூபிகளாகவும் உள்ளனர். வேறு சிலர் பெருஞ் செல்வராக விளங்குகின்றனர். ஒரு சிலர் வறுமையிலேயே வாடி வதங்குகின்றனர். ஒரு சிலர் பேரறிஞர்களாக விளங்குகின்றனர். மற்றும் சிலரோ அறியாமையிற் கிடந்து அழிகின்றனர். சிலர் நல்லொழுக்கம் தலை நிற்கின்றனர். பிறர் சிலரோ தீயொழுக்கமே பேணி வாழ்கின்றனர்.

**கருத்துச் சுருக்கம் :**

நம் உடலில் ஒன்பது பெருந்துளைகளும், மற்றும் பல சிறு சிறு துளைகளும் உள்ளன. ஓட்டைக் குடத்திற்குள் அடங்கியுள்ள காற்றுப்போல, நம் உயிர் அதன்கண் ஒருவாறு தங்கி யிருக்கின்றது. நம்முடைய உடம்பில் ஓர் உறுப்புக் குறைந்தால் அதனை நாமே மீட்டும் படைத்துக் கொள்ள இயலவில்லை. ஒவ்வொரு உடம்பிலும் உயிராகிய காற்று, தங்கி இயங்கி வருகின்றது. உயிர்களின் பிறப்பும் இறப்பும் அவற்றின் வசத்தில்லை. நாம் விரும்பும் போது இறக்கவோ, விரும்பாமல் இருக்கும்போது இறக்காமலிருக்கவோ இயலுவதில்லை. அங்ஙனமே நம் முன்பின் பிறவிகளும், நாம் இறந்தபின் இருக்கும் நிலைகளும்,

மறைபொருளாகவும் வியப்பாகவும் உள்ளன.

நாம் நினைப்பது போலவோ, விரும்பி மகிழ்வது போலவோ எதுவும் நடப்பதில்லை, சில சமயங்களில் நாம் சிறிதும் எதிர்பாராத நன்மை தீமைகள் ஏற்படுதலைக் காண்கிறோம். நம் வாழ்க்கையின் போக்கு நமக்கே விளங்குவதில்லை. மகப்பேறுவேண்டுவோர்க்கு அது கிடையாமையும், வேண்டாதார்க்கு அது மிகுதியாகக் கிடைத்தலும், ஆண் மகவு வேண்டுவோர்க்குப் பெண் மகவு பிறத்தலும், பெண் மகவு வேண்டுவோர்க்கு ஆண் மகவு உதித்தலும், சில சமயங்களில் இரண்டுமல்லாத அலித்தன்மையில் குழந்தைகள் தோன்றுதலும் போன்ற பலப்பல நிகழ்ச்சிகளைக் காண்கின்றோம்.

உலகப் பொருள்களெல்லாம் சடம் சித்து என்று இருவகைப்படும். சடம் என்பது உயிரில் பொருள். சித்து என்பது உயிருடைய பொருள். சடப்பொருள்கள் உயிரும் உணர்வும் உடையனவல்லவாதலின் தாமே இயங்கமாட்டா. சித்துப் பொருள்களோ உயிரும் உணர்வும் உடையனவாயினும் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவை. தமக்கெனச் சுதந்திரமில்லாதவை. ஆதலால் இவையிரண்டிற்கும் வேறாக உள்ள, பேரறிவும் பேராற்றலும் உடைய பரம்பொருளே இவ்வுலகைப் படைத்து இயக்குவதாதல் வேண்டும். குடத்தைக் காணுங்கால் அதனை வனைந்த குயவன் ஒருவன் உண்டென உணர்வோம். நல்ல அணிகலன் ஒன்றைக் காணநேர்ந்தால் அதனைச் செய்த கம்மியன் ஒருவன் உளன் எனத் தெளிவோம். ஓர் அழகிய ஆடையைக் காண்பின் அதனை நெய்த நெசவாளன் ஒருவன் உண்டு எனக் கொள்வதில் நமக்கு ஐயம் ஏற்படுவதில்லை. அவ்வாறே இவ்வுலகத்திற்கும் ஒரு கடவுள் உண்டு என நாம் நிச்சயமாக நம்பலாம்.

"தவ்வலருஞ் சந்திரசூ ரியர்உடுவிண் மேகஞ்
சாகரமா மலைதிகால் சர அசர பேதம்
ஒவ்வவுரு துறு பஞ்ச பூதமுமற் றுளவும்
உயிர்களுமுண் டாக்குதல்கூ டாதமுறை
யானும்; (1)

"சந்திரசூ ரியர்உடுஅந் தரமதிலெந் நாளுந்
தத்தம்முறை வழுவாது கொட்புறுத
லானும்;
கந்தரம்வா ரியின்மொண்டே பொழிதருத
லானும்;
கடல்தன்எல் லையைமீறிக் கடவாமை
யானும்,
செந்தழல்மா ருதமீறிச் செறியாமை யானும்;
திகழ்காலம் பலவிதமாய்ச் சேர்ந்துறுத
லானும்;
மந்திரத்தாற் பாம்பாதி வசமாகை யானும்;
மன்னுயிர்பா ரம்பரைமா றுதுறைத
லானும்; (2)

"ஆனைமுதல் யாவைகளும் ஆண்பெணவை
அவ்வுருவ வேடம்போட் டாங்குவர
லானும்;
ஊனமிலாண் பெண்கூடா துயிர்தோன்ற
லானும்
உறும்விதைவர்க் கப்படிதா வரம்எழுத
லானும்,
தீனமில்இந் தியபங்கர் அங்கமதிந் பங்கர்
திகழுருவி லார்நோயர் இவைகளிலா வடிவர்
ஆனமிடி யினர்செல்வர் அறிஞரறி வில்லார்
ஆதிபாவ புண்ணியர்க ளாகியுற
லானும்; (3)

ஒன்பதுவா யுடன்ஒருவாய் விட்டுடலில்
உறைய
உயிர்கட்குக் கூடாமையினும்;ஒரங்கம்
நீங்கின்
தன்சுயமாய் வருவிக்கக் கூடாமை யானும்;
தனுக்கள்தொறும் ஓர்காற்றுத் தங்கியுற
லானும்;
அன்புடன்ஆண் பிளைவேண்டிற்
பெண்ணுறுத லானும்;
அழகியபெண் வேண்டுமிடத் தாணுறுத
லானும்;
தென்பயிலாண் பெண்வேண்டிற்
சிகண்டியுற லானுஞ்:
சிந்தையிலெண் ணியவாறே சேராமை
யானும்; (4)

மகவினிவேண் டாமெனவும் மகவருத லானும்;
மகவுக்காய்ப் பாலருத்த மரித்துறுத லானும்;
மிகைசெய்தான் றனையொருவன்
வெட்டுமிடத் தொருவன்
விடுவித்தாள் கையினுலும் ;
விளம்புறுமற் றெருவன்
பகைவர்தமக் கஞ்சியொளித் துறவுமவர்
கையிற்
படலானுந் ; தாவரங்கள் பரிந்துதமைக்
காக்கும்
தகையறிவி லாதிருந்துந் தங்கியுற லானும்;
சாற்றியமுற் பிற்பிறவி தாம் அறியா
மையினும்; (5)

இம்முறையே அளவிறந்த பேதமதாய்ச்
சடமும்
இலங்குயிருஞ் சுதந்தரமின் ருய்நிகழ்த
லானும் ;
கம்மியனற் குயவன்கைக் கோளன்றே காரங்
கடபடமுண் டாக்கிடுமோர் காரணமே
போலச்
செம்மைதரும் அருள்கோடா
திறையுயிர்கள் செய்த
தீவினைநல் வினைக்கீடாய்ச் செறிதனுவா
திகள்தந்து
அம்முறையே அளித்தழிப்பன்
அருள்தருவான் ; அதனுல்,
அக்கடவுள் உளன்எனநீ மிக்கதிடத்
தறியே! (6)

## முடிவுரை :

பரந்த உலகத்தை நோக்கி யுணருந் தோறும், இதனைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என நம்புவது அறிவிற்கு ஏற்றதேயாகும். அக்கடவுட் பொருளே நமக்குத் தனுகரண புவன போகங்களைக் கொடுத்து நம்முடைய நல்வினை தீவினை களுக்கேற்ப இன்ப துன்பங்களை நல்கி, நம்மைக் காத்து ஆட்கொண்டு வருகிறது. இவ்வுண்மையை உணர்ந்து நம்பி வாழ் வதனுல் நமக்கு நம் உலகியல் வாழ்வில் நன்மையே ஏற்படும் என்பது திண்ணம். ''நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு'' என்பர் பாரதியார். நம்பிக்கையினுல் விளையும் நலங்கள் பல.

தெய்வம் உண்டு எனத் தெரிந்து ஒழு குதல், நம் மனித வாழ்க்கை சிறப்புறு தற்குப் பல்லாற்ருனும் துணை புரியும். சமய வுணர்வும் தெய்வ நம்பிக்கையும், சிறந்துயர்ந்த பண்பு நலங்கள் பலப்பல வெளிப்பட்டு மேலோங்கித் திகழ்தற்குக் காரணமாக அமைகின்றன, (1)

சமய வுணர்வில்லாத ஒருவன் வேறு பிற துறைகளில் எவ்வளவுதான் சிரும் சிறப்புமுற்று விளங்கினுலும், சமயவுணர் வும் தெய்வ நம்பிக்கையும் உடைய ஒருவன் முன்னிலையில் சிறிது தாழ்ந்தே நிற்பான். முன்னையவனிடம் இல்லாத ஏதோ ஒரு சிறந்த தனிப் பெருஞ் சிறப்பு. பின்னையவனிடம் அமைந்திருக்கக் காண லாம் (2). எனவே, நாம் அனைவரும் இத்தகைய தெய்வ வுணர்வு மிக்கவர் களாய் விளங்கி, வையத்து வாழ்வாங்கு நலமுற வாழ முற்படுவோமாக!

--ஆசிரியர்.

---

(1) "The highest flights of *charity*, *devotion*, *trust*, *patience*, *bravery etc*., to which the wings of human nature have spread have been for *religious ideals*".

— **Prof. William James**

(2) "When one compares the deeply religious and spritual person with the best and bravest of those who are not religious, one sees, it must be *confessed*, that the former possesses something which *others lack*".

— **Prof. J. B, Pratt.**

# குமர குருதாசரும், குமர குருபரரும்.

**முன்னுரை :**

அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்து பெரும் அருளாளராக விளங்கியிருந்தவர், பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் என்பவர் ஆவார். அவர் முருகனருள் பெற்ற ஒரு பெரும் சான்றோராகத் திகழ்ந்தவர். அவர் இற்றைக்கு ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு முன் சென்னையில் வாழ்ந்திருந்தார். சைவப் பெரியார் திரு. ச. **சச்சிதானந்தம் பிள்ளை**, தமிழ்த் தென்றல் திரு. வி. **கலியாண சுந்தரனார்** போன்ற பெருமக்கள் பலர், **ஸ்ரீமத்** சுவாமிகள் அவர்களைத் தமது ஞான குரவராக ஏற்றுப் போற்றி வருகின்றனர். முருகன் அடியார்களில் சுவாமிகளைப் பற்றி அறியாதவர் எவரும் இரார்,

**பாம்பன் அடிகள் :**

சுவாமிகள் பாடிய **சண்முக கவசம் என்னும்** நூல் சிறந்த அருள் நூலாக, முருகன் அடியார் அனைவராலும் நாள் தோறும் அன்புடன் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றது. சுவாமிகள், தகராலய ரகசியம், பரிபூரணானந்த போதம், குமார சுவாமியம், திருப்பா, திருவலங்கற் றிரட்டு, சேந்தன் செந் தமிழ், செக்கர்வேள் செம்மாப்பு முதலிய பற்பல அரும் பெரும் நூல்களை அருளிச் செய்துள்ளனர். வடமொழி தென்மொழி என்னும் இரு மொழி களிலும் சுவாமிகளுக்கு எல்லையற்ற புலமை இருந்தது, வேதாகம உபநிடத புராண இதிகாசங்கள் முதலிய வடமொழி நூல்கள் அனைத்திலும் சுவாமி களுக்கு மிகுந்த பயிற்சியும் நுண்மாண் நுழைபுலமும் அமைந்திருந்தன. இவர்கள் கி. பி 1854 முதல் 1929 வரை நிலவுலகில் உலவி வந்தார்கள்.

**குமரகுருபரர் :**

பேரருளாளராகிய நம் குமர குருதாச சுவாமிகள், தமக்கு முன்னே வாழ்ந் திருந்த **அருணகிரி நாதர்** முதலிய பெரியோர்கள் அனைவரிடத்திலும், மிக்க ஈடுபாடும் பக்தியும் கொண்டு விளங்கினர். சிறப்பாக இவருக்குக் குமர குருபர சுவாமிகளிடத்திலும், அவர் அருளிச் செய்த திருச்செந்தூர்க் **கந்தர்கலி வெண் பாவிலும்** மிக்க பெருமதிப்பும் ஈடுபாடும் இருந்தன. சுவாமிகள் வடக்கே யாத்திரையாகச் சென்றிருந்தபொழுது, **ஸ்ரீகுமர குருபர சுவாமிகள்** (கி.பி. 1600—1680), நிறுவிய குமார சுவாமி மடத்தில் தங்க நேர்ந்தது. அப்போது அங்கே இருந்த தம்பிரான் சுவாமிகள் ஒருவர், சுவாமிகளுக்குக் காவி ஆடைகள் இரண்டினைக் கொடுத்து அணிந்து கொள்ளுமாறு வேண்டினர். அதுவரையில் வெள்ளாடையே தரித்து வந்த சுவாமிகள், இதுவும் இறைவனின் திருவருட் குறிப்புப் போலும் என நினைந்து. தம்பிரான் சுவாமிகளை ஸ்ரீ குமர குருபரரின் வடிவமாகவே மதித்து, அவர் விரும்பியவாறே அக்காவி யாடைகளை ஏற்று அணிந்து கொண்டனர். இச்செய்தியினைக் குமர குருதாச சுவாமிகளே,

> " காசிக் குமரகுருபரன் செய்த கனமடத்திற்
> பாசிப் பயறு கலந்தநல் லன்னமும்
> பாலுமுண்டங்
> கேசற்று நின்ற வெனதரை யிற் குமரேசன்
> அன்பர்

தூ சிற் சிறந்தபொற் காடாய வத்திரஞ்
சுற்றினரே. (1)
சுற்று மமையங் குமர குருபர சாமிசொந்தம்
உற்ற மடமிதிங் கேயிட்ட காவி யுடை
யிரண்டும்
பெற்றிட னின்கட னுகுங் குமர குருப்
பெயரே
பெற்ற சுவாமி யெனவுரைத் தாரந்தப்
பேரன்பரே. (2)
பின்னு மெனையிங் கறியா தெழுந்ததிப்
பெற்றியிதை
நன்ன ரிலையெனத் தள்ளே லெனவு
நவின் றவன்ஞர்
சொன்ன மொழியைக் குமர குருபரன்
சொல்லெனவே
என்ன திதயமு மொப்பிப் பரவச
மெய்தியதே (3)
அன்றிறை கோவணங் கட்டிவந் தெற்குய
ராக்கஞ்சொலிச்
சென்றநா டொட்டுவெண் கோவணங்
கொண்டு சிவப்பிறுணி
ஒன்றையே போர்த்துத் திரிந்தவெற்
கிச்செவ் வுடையிரண்டும்
நன்றெனத் தந்தசெவ் வேளனுள் பூர்த்தியும்
நல்குகவே " (4)

எனக் குறிப்பிட்டுக் கூறியிருத்தலால், சுவாமிகள் **குமரகுருபரர்** மீது கொண்டிருந்த எல்லையற்ற மதிப்பும் பக்தியும் இனிது புலனுகின்றன.

**திருப்பாவில் குறிப்பு :**

பாம்பன் குமர குருதாசர்க்குக் **கந்தர் கலிவெண்பாவிலும்**, பெருமதிப்பும் பேரன்பும் இருந்தமை, அவர்கள் தம்முடைய **திருப்பா** என்னும் நூலில் அருளிச் செய்துள்ள பின்வரும் பாடலால் புலனுகும்.

நூல்எனும் பெயர்கொண்ட முறைகள்பல
வுளும்,நன் நுவற்சிகொள் முதல் நூல்களா
நுவல்சைவ தந்திரமும் மறையுமே
பிரதான நூல்களாம்; மறை யினுட்பஞ்
சாலவெளி யாமாறு சாற்றுபிர
சன்னமே சைவசித்தாந்தம் ஆகும்;
சற்சனர்கள் இதைஒப்பி யுய்வதற்
கைந்துவய தாகும்வரை மூரிமூங்கை
போலவாய் பேசா திருந்துளோன்,
உன்னருட் பொலிவின்நல் வாய்மலர்ந்தே
புகன்றசெந் தூர்க்கந்தர் கலிவெண்
திருச்செய்யுட் பொருள், ஆக மாந்த
முடிவின்
சீலமல் லாதுபிறர் அத்துவிதம்
அன்றெனத் திகழல்கிழ மைக்கரியரோ !
சிற்சுகன வெளியாகி ஒளியாகி
நிறைபுமொகு திவ்வியசுப் பிரமணியமே.
— திருப்பா.

**பாடற் பொருள் :**

நூல்கள் என்னும் பெயரில் எவ்வளவோ புத்தகங்கள் உள்ளன. அவைகள் எல்லாவற்றிலும் மிகவும் சிறப்பு வாய்ந்தவை வேதங்களும் ஆகமங்களுமே யாகும். இவ்விரண்டுமே, வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்ட முதல் நூல்கள் ஆகும். வேதாகமங்களின் நுண்பொருள்கள் அனைத்தையும், நன்கினிது வெளிப்படுத்தி விளக்குவது **சைவசித்தாந்தம்** ஆகும். நன்மக்கள் அனைவரும் யாம் கூறும் இதனை உடன்பட்டுக் கைக்கொண்டு உய்யலாம். ஏனெனில் ஐந்து வயது ஆகும் வரையில் ஊமைப் பிள்ளைபோல வாய் பேசாமல் இருந்து முருகனின் திருவருளைப் பெற்றுச் சிறப்புற்ற **குமர குருபரர்**, அருளிச் செய்த **திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா** என்னும் திருச்செய்யுளின் பொருளாக விளங்குவது, ஆகமாந்த முடிவாகிய சைவ சித்தாந்தமே அல்லாமல். மற்றவர்களின் அத்துவிதம் அன்று. இவ்வுண்மையைக் கந்தர் கலிவெண்பாவை ஓதி, யாவரும் உணரலாம். அச்சிறந்த அருள் நூலே யாம் கூறும் உண்மைக்குச் சிறந்த சான்றாகும் என்பது, மேற்குறித்த பாடலின் பொருள். எனவே, பாம்பன் குமரகுருதாசருக்கு,

ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் அருளிச் செய்த கந்தர் கலிவெண்பாவின்பால் இருந்த பெருமதிப்பையும் பெரும் பக்தி யையும் நாம் உணரலாம்.

**கந்தர் கலிவெண்பா :**

கந்தர் கலி வெண்பா மிகச் சிறந்த ஒரு பாராயண நூலாகும். எளிய இனிய நடையில் மிகச்சிறிய அளவில், யாவரும் இனிது ஓதி பாராயணம் செய்து பயனடை யும் வகையில், அந்நூல் அமைந்துள்ளது. சைவ சித்தாந்தம் என்னும் அரும் பெரும் தத்துவ உண்மைகளை யெல்லாம் மிகச் சுருக்கமாகத் தொகுத்து, அந்நூல் தன் முற்பகுதியில் அழகும் தெளிவுமுறவிளக்கு கின்றது. இடைப்பகுதியில் **கந்தபுராணம்** என்னும் கவின் கலை நூலின் வரலாறு முழுதையும், முறையுற வரிசைப் படுத்தித் தொகுத்துச் சுருக்கித் தந்து விளக்கிச் செல்கின்றது. இவ்வாற்ருல், இதனைக் கந்தபுராணப் பெருநூலின் ஓர் அழகிய சிற்ருேவியம் (Miniature) என்றே கூற லாம். நூலின் இறுதிப்பகுதி, "ஆசு முதல் நாற்கவியும், அஷ்டாவதானமும், பல்காப்பியத் தொகையும், எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும், தோய்ந்து பழுத்த தமிழ்ப் புலமையும் பாலித்தருளல் வேண்டும்' என முருகனைப் பாடிப் பரவித் துதித்து வழுத்துகின்றது.

**முடிவுரை :**

ஆதலின் இந்நூலைப் பாராயணம் செய் பவர் சிறந்த கல்வியும் புலமையும் ஒழுக் கமும் அருளும் பெறுவர் என்பது திண்ணம். எனவே, நாம் அனைவரும், குமர குருதாசர் போற்றிப் புகழ்ந்த ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் அருளிய கந்தர் கலிவெண்பாவினைச் சந்ததமும் படித்துப் பாராயணம் செய்து, பயனடைய முற்படுவோமாக.

—ஆசிரியர்.

[கந்தர் கலிவெண்பாவினிடையே அமைந்துள்ள கந்தபுராண வரலாறு களை விளக்கும் அழகிய அச்சோவி யங்களை (Blocks), நமது திருக் கோயில் இதழில் வெளியிடுதற்கு மனமுவந்து வழங்கியருளிய, திருப் பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு, நம்முடைய அன்பும் வணக்கமும் உரியன வாகும்.

—ஆசிரியர்.]

---

# கோயில் நிகழ்ச்சிகள்.

தஞ்சை உடையார் கோவில் கரவிந்தேசுவரர் ஆவணி மூல விழா.


சென்னை அடையாறு காந்தி நகர் ஸ்ரீ அநந்த பத்மநாப சுவாமி கோயிலில் திருவோண விழா ஸ்ரீ உத்ஸவர் பிரதிஷ்டை.

வேதாரண்யம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில்—வருடப் பெருவிழா.

விச்சூர் கிராமம் பரப்பிரம்மயோக ஞானலயம், சுவாமிகள் ஜயந்தி விழா.

தஞ்சைப் பெரிய கோயில் — சென்னை மாநிலக் கவர்னர் மேதகு. ஸ்ரீ உஜ்ஜல் சிங் அவர்கள் வருகை.

சிவகாசி விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விசுவநாத சுவாமி கோவில் அறுபத்து மூவர் பிரதிஷ்டை; பரிவார மூர்த்திகள் ஆலயத் திருப்பணிக் குடமுழுக்கு விழா (4-9-1966).




ஸ்ரீ வல்லப விநாயகர்



பூங் கயிலையில் பரமசிவன் விண்ணவர்க்கு அருளல்.



குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS




சரவணத்தில் சண்முகனார் குழந்தைகளாக விளையாடுதல்.



மெய்ட ஆவும் ஒன்றுக மேவுவித்து விமலன் காத்தளித்தல்.

CONNEMARA PUBLIC LIBRARY
5 - APR 1967
MADRAS



செங்கட் கிடாயதனை நடத்தி விளையாடுதல்.



புரிசடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமம் மொழிதல் .

CONNEMARA PUBLIC LIBRARY
5-4 APR



தாரகனும் தடங்கிரியுந் துகளாக வீரவடிவேல் விடுத்தல் .

# 'அருமையில் எளிய அழகே போற்றி'

**முன்னுரை :**

"அருமையில் எளிய அழகே போற்றி" என்பது, திருவாசகத்தில், போற்றித்திரு அகவல் என்னும் பகுதியில் அமைந்துள்ள ஒரு சிறந்த வரியாகும். திருவாசகம் என்னும் செந்தமிழ்த் தெய்வ மாமறையின் சிறப்பு, யாவரும் அறிந்ததொன்று. அதன் ஒவ்வொரு திருப் பாடலும், அப்பாடலின்கண் வரும் அழகிய சொற்கள் சொற்றொடர்களும், எத்துணையோ உயர்ந்த பல பொருள் நுட்பங்களைப் பொதிந்து கொண்டு இருப்பவை என்பதும் அனைவருக்கும் உடன்பாடு. அம்முறையில், இவ்வரியும் பல சிறந்த பொருள் நுட்பங்களைப் பொதிந்து கொண்டு உணர்த்தும்முறையில் அமைந்து திகழ்கின்றது.

**கடவுள் இலக்கணம் :**

இவ்வரியைக் கடவுள் இலக்கணம் கூறும் ஒரு சிறந்த இனிய நூற்பா என்றே கூறலாம். கடவுளின் எல்லையற்ற பற்பல நல்லியல்புகளை யெல்லாம் இவ்வரியானது ஒருங்கு தொகுத்துச் சுருக்கிச் செவ்விதின் உணர்த்தவல்லதாக விளங்குகின்றது. அன்பர் அல்லாதவர்களுக்கு அருமை உடையவராக, உணரமுடியாத நிலையில், கடவுள் விளங்குகின்றார். அன்பர்களுக்கோ அவர்கள் விரும்பும் முறைகளிலெல்லாம் எளிவந்து இன்னருள் புரிகின்றார். அத்தகைய அவர்தம் இயலும் செயலும் அழகு மிக்கோங்கிப் பிறங்குகின்றன. கடவுளிலக்கணத்தின் இவ்வுண்மையினையே திருவாசகத்தின் சிறந்த இவ்வரியானது பொதுவாக உணர்த்துகின்றது.

எனினும், தொட்டனைத்தூறும் மணற்கேணி போல, இவ்வரியினை உன்னி உன்னி உணருந்தோறும் பல சிறந்த அரும்பெரும் பொருள்கள், இவ்வரியின் அடிப்படையில் நமக்குப் புலனாகின்றன.

**மூவகை நிலைகள் :**

(1) கடவுள் தன்னியல்பில் எல்லாவற்றிற்கும் எல்லோருக்கும் அப்பாற்பட்டு மிக மேலானவராக விளங்குகின்றார். இதனைக் **கடந்த நிலை** (Transcendence) என்பர். அவரே எல்லாப் பொருள்களிலும் எல்லா உள்ளத்திலும் பிரிவற இயைந்து நின்று திகழ்கின்றார். இதனைக் **கலந்த நிலை** அல்லது அந்தர்யாமித்துவம் (Immanence) என்பர். கடவுள் தம்மை வழிபடும் அன்பர்களுக்கு அவர் விரும்பும் திருவுருவங்களில் தோன்றிக் காட்சி தந்து அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு மகிழ்வித்து அருள் புரிகின்றார். இதனைக் **கவர்ந்த நிலை** (Appearance) எனலாம். 'என் உள்ளம் கவர் கள்வன்' என வரும் திருஞானசம்பந்தர் திருமொழியும் இங்கு நினைவு கூரத் தகுந்தது. இங்ஙனம் கடவுளுக்குரிய கடந்தநிலை, கலந்தநிலை, கவர்ந்தநிலை என்னும் மூன்று வகை நிலைகளிலும், முறையே அருமை எளிமை அழகு என்னும் சொற்களால் மாணிக்க வாசகர் குறிப்பிட்டு அருளினார் போலும் எனக்கருதவும் இடமுண்டு.

**முப் பெரும் பண்புகள் :**

(2) மேலை நாட்டுச் சிந்தனையாளர்கள் அனைவரும் மிக விதந்தெடுத்துப் போற்றி வியந்து புகழ்ந்து, உண்மை (Truth), நன்மை (Goodness), அழகு (Beauty) என்னும் மூன்றையும் எல்லாவற்றிற்கும் மேலான மிகச் சிறந்த

பண்பு நலங்களாகக் குறிப்பிடுவர்.[1] உலகத்தில் எல்லாவற்றிற்கும் மேலானதாய்ச் சிறந்து, திகழ்வது உண்மையே. உண்மை எதுவோ அதுவே நன்மையாகும். நன்மை எங்கே எதில் உள்ளதோ, அங்கே அதில் அழகும் இருக்கும். உண்மையும், நன்மையும், அழகும் ஆகிய இவைமூன்றும் தம்முள் ஒன்றி ஒன்றுபிரிவற இயைந்து நிற்பதாகும். இம்மூன்றும் உலக மக்கள் அனைவராலும் விரும்பிப் போற்றப் படுவன. அவர்களுக்குப் பெரிதும் இன்றியமையாதனவாய் எல்லையில்லா நலங்களை விளைவிப்பன. மலைநாட்டு நூல்கள் சிறப்புற வியந்து போற்றும் இம்மூன்றையும், நம் நாட்டு நூல்களும் **சத்தியம் சிவம் சுந்தரம்** எனக் குறிபிட்டுப் போற்றி நிற்கும் இம் மூன்றின்கண் அடங்காத உயர்ந்த பண்பு நலங்கள் எதுவுமேயில்லை. எனவே இவற்றையே கடவுள் இலக்கணம் குறிக்கும் சிறந்த மூன்று பண்புகளாக நாம் கொள்ளலாம். இம்மூன்றினையுமே அருமை எளிமை அழகு எனும் மூன்றும் குறித்து நிற்பனவாக நாம் கொள்ளுதல் கூடும். உண்மை நமக்கு ஒருவகையில் அருமையானதே, அது நமக்கு நன்மை பயக்கும் பொழுது அருமை தவிர்ந்து எளிமையாகிவிடுகின்றது. அங்கிலையில் அதன் அழகை நாம் உளமார உணர்ந்து வியந்து போற்றுகின்றோம்.

**சச்சிதானந்தம் :**

(3) கடவுட் பெரும் பொருளின் இயல்பினைக் கவிஞர்களும் ஞானிகளும் பலவகையாகச் சிறப்பித்து விதந்து வியந்து, எத்துணையோ வெவ்வேறு பலவகைகளில் போற்றிப் பாடுவர். ஆயினும், அவர்கள் அனைவரும் கடவுட் பெரும் பொருள் **சத்து - சித்து - ஆனந்தம்** என்னும் மூன்றன் வடிவாகத் திகழ்கின்றது என்பதனை ஒரு முகமாக ஒத்து உடன்பட்டுப் புகழ்ந்துரைப்பர்.

"நம் இந்திய நாட்டுப் பழம் பெரும் சான்றோர்களும், தத்துவஞானிகளும், தவநெறிச் செல்வர்களும் உலகையும் கடவுளையும் பற்றி ஆராய்ந்து அறிந்து உணர்ந்திருந்த கருத்துக்கள் அனைத்தையும், **சச்சிதானந்தம்** என்னும் சுருக்கம் மிக்க சொற்றொடர் ஒன்றே, தெளிவுற விளக்கி நிற்கின்றது!"[2]

உள்பொருளாகத் திகழும் கடவுட் பொருள் ஒன்றே சத்து சித்து ஆனந்தம் என்னும் முப்பெரும் பண்பும் கூறும் உடையதாக மிளிர்கின்றது. இம் மூன்றினையும் ஒருவகையில் அருமை எளிமை அழகு என்னும் சொற்கள் குறிப்பனவாகக் கொள்ளுதல் இயலும். **சத்து** என்னும் சொல் உள்ளது, உண்மை என்னும் பொருளை உணர்த்தும். உண்மை அருமை வாய்ந்தது என்பது யாவரும் ஒப்புவர். **சித்து** என்பது அறிவு. அறிவுடையார் எல்லாம் உடையார் என்றபடி, அறிவிற்கு ஏனைய எல்லாப் பொருளும் எளிமையாவதுடன், அறிவுடையோர் ஏனையோர்க்கு எளிவந்து இரங்கி இன்னருள் புரிவர். ஆதலின் எளிமை

---

(1) "Among all the meaningful values of the superorgonic world there is the supreme integral value – the veritable summum bonum ...... It is the indivisible unity of **Truth, Goodness** and **Beauty**......"

— **Pitrim A. Sorokin,**
This is My Philosophy, (A symposium) P. 184.

(2) "The view of this world which India has taken is summed-up in one Compound Sanskrit word **Satchidanandam.** The meaning is that Reality, which is essentially one, has three phases.

The first is **Sat**; it is the simple fact that things are, the fact which relates us to all things through the relationship of Common existense.

The second is **Chit**; it is the fact that we know, which relates us to all things through the relationship of knowledge.

The third is **Ananda**; it is the fact that we enjoy, which unites us with all things through the relationship of Love."

— **Dr. Rabindranath Tagore.**
The Message of the Forest

என்பது இங்குச் சித்து என்பதனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். **ஆனந்தம்** என்பது அழகால் விளைவது. அழகைக் காணும் யாவரும் ஆனந்தம் அடைவது திண்ணம். எனவே **சச்சிதானந்தம்** என்னும் அழகிய அரும் பெரும் தொடரின் கருத்தினையே அருமை எளிமை அழகு என்னும் சொற்கள் முறையே குறிக்கும் என்றும் சொல்லலாம்.

**இறைவனின் நிலைகள் :**

(4) இறைவன் பரத்துவம் வியூகம் விபவம் அந்தர்யாமித்துவம் அர்ச்சாவதாரம் என்னும் ஐவகை நிலைகளில் விளங்குவதாக வைணவ நூல்கள் கூறும். **பரத்துவமாவது** வைகுந்தத்தில் முக்தர்களுக்கும் நித்தியர்களுக்கும் போக்கியனாக இறைவன் எழுந்தருளியிருக்கின்றான். **வியூகம்** என்பது சங்கர்ஷணன் பிரத்தியும்நன் அநிருத்தன் வாசுதேவன் என்பவர்களாகத் திருப்பாற்கடலில் விளங்கும் நிலை. **அந்தர்யாமித்துவமாவது** எல்லாப் பொருள்களிலும் உயிர்களிலும் உட்கலந்து நின்று இயக்கி யருளும் நிலை. **விபவம்** ஆவது மச்சம் கூர்மம் வராகம் முதலிய எல்லாப் பொருள்களாகவும் பிறந்து வந்து அருள் புரியும் நிலை. **அர்ச்சாவதாரம்** என்பதோ கோயில்களிலும் இல்லங்களிலும்ஒரு வடிவத்தின்கண் எழுந்தருளி, அன்பர்கள் உவக்கும் செப்பு சிலை முதலிய உபாதானப் பொருள்களே தனக்குத் திருமேனியாகவும், அவர்கள் விரும்பும் திருநாமங்களே தனக்குத் திருநாமமாகவும், அவர்கள் புரியும் பாவனையே தனது வண்ணமாகவும் விளங்கும் நிலை.

இவற்றுள் பரத்துவநிலை நித்தியர்களின் அநுபவத்திற்கும்; வியூக நிலை இந்திரன் முதலானவர்களுடைய கூக்குரல் கேட்கைக்கும்; விபவ நிலை அவ்வக்காலத்தில் வாழ்ந்திருந்தவர்களுக்கும்; அந்தர்யாமி நிலை பிரகலாதாழ்வான் போல்வார்க்கும்; அர்ச்சாவதார நிலை நம்மைப் போன்ற அடியார்களுக்கும் அருள் புரிதற் பொருட்டாகும்.

மேலும் பரத்துவநிலை அண்டத்துக்கு வெளியே பெருகிக் கிடக்கும் ஆவரண ஜலம் போன்றது; வியூக நிலை எளிதிற் கிட்ட இயலாத திருப்பாற்கடல் நீர் போன்றது; அந்தர்யாமித்துவ நிலை தரையிற் பதிந்து மறைந்து கிடக்கும் பூகத ஜலம் போன்றது; விபவ நிலை முன்பே பாய்ந்து வடிந்தொழிந்த பெருக்காறு போன்றது; அர்ச்சாவதார நிலை நீர் வேட்கை கொண்டவன் எளிதிற் சென்று இறங்கி, வேண்டும் அளவும் பருகலாம்படி தேங்கியுள்ள மடுக்கள் போன்றது என்றெல்லாம் வைணவ நூல்கள் கூறும். ஒரு வகையில் இறைவனின் இவ் வைந்து நிலைகளையும் சுருக்கமாகத் தொகுத்துச் சுட்டுவதாகவும் இவ்வரியைக் கொள்ளுதல் பொருந்தும். பரத்துவம் வியூகம் அந்தர்யாமித்துவம் என்னும் நிலைகள் **அருமை;** அவதாரங்கள் ஆகிய விபவ நிலை **எளிமை;** அர்ச்சாவதார நிலை **அழகு** எனலாம். ஆழ்வார்கள் பல இடங்களிலும் பிரபத்தி செய்து ஈடுபட்டது அர்ச்சாவதார நிலை அழகிலேயாகும். ஆதலின் இக்கருத்தும் ஒருவகையில் பொருத்தமானதே.

**மூவகைத் தொடர்பு :**

(5) சைவசித்தாந்தம், இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பினை ஒன்றுதல் வேறுதல் உடனுதல் என மூவகை நிலைகளாகக் கூறும். உடலின் உயிர்போல் கலப்பினால் இறைவன் உயிர்களுடன் அவ்வுயிர்களேயாய் நிற்கும் நிலை **ஒன்றுதல்;** கண்ணின் அருக்கன் போலப் பொருட்டன்மையால் உயிர்களும் இறைவனும் தனித்தனியே நிற்கும் நிலை **வேறுதல்;** கண்ணொளியின் ஆன்ம போதம் போல உயிர்க்குயிராதற்றன்மையால் இறைவன் உயிர்களோடு ஒன்றித்து இயைந்து நிற்கும்நிலை **உடனுதல்;** உயிர்களிற் பிரிந்து இறைவன் வேறாய் நிற்கும் நிலை **அருமை;** கலப்புத் தன்மையால் இறைவன் உயிர்களேயாய் உயிர்களோடு ஒன்றாய் நிற்கும் நிலை **எளிமை;** உயிர்க்குயிராகும் தன்மையால் இறைவன் உயிர்களோடும் அவற்றின் நுகர் பொருள்களோடும் உடனாய் நிற்கும் நிலை, **அழகு**

ஆகும். ஓர் அழகுப் பொருளை நாம் கண்டு இன்புறுங்கால், அவ்வழகுப் பொருளிலும் இறைவன் விளங்கியிருக்கின்றான். அவ்வழகினைக் கண்டு நாம் இன்புறுதற்கு நமக்கும் துணை செய்கின்றான். இவ்வாறு இரண்டிடத்தும் இறைவன் உடனாக நிற்க வேண்டி இருத்தலின், அழகு என்பது ஈண்டு உடனாதல் நிலையைக் குறிப்பதாகக் கொள்ளப் பெரிதும் ஏற்புடைத்தே யாகும்.

**சோமாஸ் கந்தம் :**

(6) இனி, அருமை எளிமை அழகு என்னும் மூன்றினையும், சத்து சித்து ஆனந்தம் என்னும் மூன்றினோடும் தொடர்புடையனவாக நாம் முன்னர்க் கொண்ட முறைமையில் வேறொரு கருத்துக் கொள்ளவும் இடனுள்ளது. சச்சிதானந்தம் என்னும் தொடர், **சோமாஸ்கந்தம்** என்னும் சிவபிரான் திருவுருவைக் குறிப்பதாகக் கொள்வதும் பெரியோர்கள் மரபு.

சோமாஸ்கந்த மூர்த்தம், தமிழ்நாட்டுக்கே தனிப்பெரும் சிறப்பாக உரியது. இந்திய நாட்டின் வேறுபிற எந்தப் பகுதிகளிலும் காணப்படாமல், தமிழ் நாட்டில் மட்டுமே தனிப்பெரும் சிறப்பியல்பாகச் சோமாஸ்கந்தர் திருவுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. பழமையான சிவாலயங்களில் சிவலிங்கத்திற்குப் பின்புறமுள்ள கருவறைச் சுவரில், சோமாஸ்கந்தர் திருவுருவம் அழகுற அமைக்கப்பட்டிருத்தல் காணலாம். உலகியல் வாழ்க்கை நலம் பெற வளர்ந்து செழித்தற்கு ஒருவனும் ஒருத்தியும் முறைப்படி மணந்து கோடலும்; இனிய நல்ல மக்கட்பேறு எய்துதலும் இன்றியமையாதன. கணவனும் மனைவியும் குழந்தையும் ஆகிய முப்பொருட்டன்மை திகழ்வது, குடும்ப வாழ்வின் அரும் பெரும் சிறப்பு.

சிவபெருமான், குழந்தையாகிய ஸ்கந்த மூர்த்தியைத் தமக்கும் உமா தேவியார்க்கும் நடுவே இருக்கச் செய்து, எழுந்தருளியிருக்கும் திருவுருவமே சோமாஸ்கந்த மூர்த்தம் எனப்படும் **(ஸ+உமா+ஸ்கந்த).** சோமாஸ்கந்த மூர்த்தத்தை அன்புடன் வழிபட்டு வருவோர், கணவனும் மனைவியுமாகிய இல்லற நெறிநின்று இணையிலா இன்பம் துய்த்து, நன்மக்கட்பேறும் குல வளர்ச்சியும் பெற்று, இம்மையிற் சிறந்து வாழ்வர் என்பது சான்றோர் நூல்களின் கோள்கை.

இத்தகைய சோமாஸ்கந்த மூர்த்தம் சச்சிதானந்தம் என்னும் அரிய தொடரின் ஆழ் பொருளை அறிவுறுப்பதே யாகும். இறைவன் **சத்து**; இறைவி **சித்து**; முருகன் **ஆனந்தம்** என விளங்குதலைச் சமய ஞான நூல்கள் சாற்றுகின்றன.

"மல்லல்வளம் கனிந்தபுகழ்க் கமலேசர்
திருவுருவும், வாம பாகத்து
அல்லமர்பைங் குழலுமையாள் திருவுருவம்,
இருவருக்கும் அமுதம் ஆன
கொல்லயில்வேற் பசுங்குழவி திருவுருவும்,
அவ்வுருவாம் குணங்கள் மூன்றின்
நல்உரு ஆதலின் அன்றோ? இவர் அகில
காரணராய் நவில்கின் றாரே!"

- குமரகுருபர சுவாமிகள்,
திருவாரூர் நான்மணிமாலை.

"பொருள்உள சத்து; நிரந்தரம்
பொருவரும் அதனை அணைந்தவிர்
அருள்உறு சித்து; நிரம்பிடும்
அசிக மதர்ப்பெனும் இன்பமும்
ஒருமுகம்உற்ற சொலின்கன்; முன்
உளது சிவப் பொருள்; நள்ளது
திருவுரு சத்தி; நல்அந்தரம்
திகழ்வது சுப்பிரமண்யமே.

- பாம்பன் சுவாமிகள்,
தகராலய ரகசியம்.

வேதாகம உபநிடதங்கள் எல்லாம் விதந்து கூறும் சத்து சித்து ஆனந்தம் என்னும் முப்பெரும் பண்புகளின் திருவுருவாக விளங்குவதே சோமாஸ்கந்த

மூர்த்தம் என்றும்; இஃது ஒருவகையில் கிறித்தவ சமயத்திற் கூறப்படும் **பரம பிதா — தேவகுமாரன் - பரிசுத்த ஆவி** என்னும் முப்பொருள்களின் இயல்புக்கு ஒத்த தன்மையுடையதாகக் காணப்படு கிறது என்றும் பெரியோர்கள் கூறுவர்.*

இத்தகைய சோமாஸ்கந்த மூர்த்தத் திற் சிவபிரானைக் குறிப்பது **அருமை;** அம்பிகையைக் குறிப்பது **எளிமை;** முரு கனைக் குறிப்பது **அழகு** என்ற சொல். முருகன் என்னும் சொல் அழகன் என் னும் பொருளை உணர்த்துவது ஆதல் வெளிப்படை. எனவே அருமை எளிமை அழகு எண்ணும் மூன்று சொற்களும், முறையே சிவபிரான் அம்பிகை முருகன் என்னும் மூவர் உருவமும் ஒருங்கே இயைந்த சோமாஸ்கந்த **மூர்த்தத்தைக் குறித்து,** அவரைப் போற்றி வழிபடும் முறையில் அமைந்துள்ளது எனலாம்.


## முடிவுரை :

இங்ஙனம் நாம் சிந்தித்து ஆராயுந் தோறும் வெளிப்படக்கூடிய சிறந்த பல நுட்பக் கருத்துக்களை, அருமையில் எளிய அழகே போற்றி என்னும் அழகிய தொடர் அறிவுறுத்து நிற்கின்றது. இனைய பல இனிய தொடர்களையும், சிறந்த பாடல்களையும் கொண்டுள்ள திருவாசகச் செந்தமிழ்த்தெய்வமறையினை நாம் அனை வரும் தினமும் ஓதி உய்யக் கடவோமாக

—ஆசிரியர்.

*Our ideaof God is **Sat-Chit-Anandam,** symbolised in the form of **Somaskanda** (Sa + Uma + Skanda) and this is the same as God the **Father,** God the **Mother** or Holy Ghost, and God the **Son,** and I have quoted in some other place the definition of this terms from **Bishop Wes Cott** God as pure being or **spirit** God. as **light** that links to him all humanity, and God as **Love.**

— Sri. J.M. Nallaswamy Pillai, B.A.B L.,
Studies in Saiva Siddhantham, P. 139





ஸ்ரீரங்கம் கோயிற் சிற்பங்கள்

# விடை தெரியுமா ?

1. சிவபிரானின் **''அஷ்டாஷ்ட மூர்த்தங்கள்''** என்பன யாவை? அவற்றை முறையே குறிப்பிடுக.

2. முருகனின் இருதேவிமார்களுள் யார் தெய்வயானை யம்மை? யார் வள்ளி யம்மை? இருவருக்கும் உரிய சிறப்பு அடையாளங்களைக் குறிப்பிடுக.

3. ''விண்ணுக்கு ஒரு மருந்தை **வேத விழுப்பொருளை...''** என வரும் திருவெம்பாவைப் பாடலில், 'வேத விழுப்பொருள்' என்னும் தொடருக்குப் பெரியோர்கள் கூறும் சிறப்புரை யாது?

4. **ஆறு ஆதாரங்கள்** என்பன யாவை? அவற்றின் இயல்பினைக் குறிப்பிடுக

5. பௌத்த மதத்தின் நால்வகைப் பிரிவுகள் யாவை? அவற்றின் பெயர்க் காரணத்தையும், கொள்கைகளையும் சுருக்கமாகக் குறிப்பிடுக.

6. ''சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்... என்னும் **திருப்பாவை** வரிக்குக் கூறப்பட்டுள்ள சிறப்புரைகள் யாவை?

7. பெருமாள் **'உத்தான சாயி'** என்னும் பெயர் கொண்டு விளங்கும் தலம் யாது? அது அங்ஙனம் விளங்குவதற்குக் காரணம் என்ன?

8. காஞ்சிபுரம் என்னும் தலத்தில் உள்ள பெருமாள் கோவில்கள் எத்தனை? விவரம் தருக.

9. **அந்யாபதேசம், ஸ்வாபதேசம்** என்பவற்றின் பொருளை விளக்குக.

10. திருமாலின் தசாவதாரங்களோடு ஒப்பிட்டு ஆழ்வார்களின் திரு அவதாரங்களையும் கூறுவதுண்டு. அம்முறையில் எந்தெந்த ஆழ்வார் எந்தெந்த அவதாரமாகக் கருதப்படுகின்றனர்? குறிப்பிடுக.

[விடை மறுபுறம் காண்க]

# விடை விளக்கம்

(1) சிவபெருமான், ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் உடையவரல்லர். எனினும் அவர் அடியார்களின் பொருட்டுப் பல திருப் பெயர்களையும் திருவுருவங்களையும் ஒரொவொரு சமயங்களில் கொண்டருளுகின்றார். அத்தகைய திருவுருவங்களையே பெரியோர்கள் **"அஷ்டாஷ்ட மூர்த்தங்கள்"** எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுக் கூறுவர். (அஷ்டம் + அஷ்டம் = அஷ்டாஷ்டம், 64). சிவபிரான் ஒருவரே இங்ஙனம் 64 திருவுருவங்களைக் கொண்டருளினர் என்பது 'ஒருவனே தேவன்'' என்னும் உயரிய கொள்கைக்கு முரண்பட்டதன்று. ஒரு மனிதனே பல நிலைகளில் பல நிழற் படங்கள் எடுக்கப்பட்டு இருத்தலைப் போல்வனவே இத்திருவுருவங்கள்: அவைகள் பின் வருமாறு:-

1. சந்திரசேகரம்
2. அர்த்தநாரீசுரம்
3. சக்கரப்பிரதானம்
4. தட்சிணமூர்த்தி
5. இலிங்கம்
6. இலிங்கோற்பவம்
7. தட்சயக்ஞ பங்கம்
8. சந்தியில் நிருத்தனம்
9. சந்தத நிருத்தனம்
10. சண்டேசுரானுக்கிரகம்
11. சலந்தரவதம்
12. அகோராஸ்திரம்
13. ஏகபாத மூர்த்தம்
14. அசுவாரூடம்
15. சத்தியசதாசிவம்
16. மிக்கசதாசிவம்
17. லகுளேசுரம்
18. சகஜசுகாசனம்
19. கூர்மசங்காரம்
20. மச்சாரி
21. வராகாரி
22. சற்குருமூர்த்த"
23. உமேசம்
24. உமாபதி
25. ஜயபுஜங்கத்திராசம்
26. சார்த்தூலஹரி
27. பைரவம்
28. கலியாணசுந்தரம்
29. வடுகம்
30. கிராதம்
31. விருஷப ஊர்தி
32. விஷாபஹரணம்
33. சுவராபக்நம்
34. க்ஷேத்ரபாலகம்
35. கருடாந்திகம்
36. முகலிங்கம்
37. கங்காதரம்
38. கங்காவிசர்ஜனம்
39. சோமாஸ்கந்தம்
40. சூரசிம்மாரி
41. காமாரி
42. எமாந்தகம்
43. மாணவபர்வம்
44. சுபகரப்பிரார்த்தனை மூர்த்தம்
45. திரிபுராந்தகம்
46. சுமுக கங்காளம்
47. இரக்தபிட்சைப் பிரதானம்
48. கௌரிவரப்பிரதம்
49. மகாபாசுபத சொரூபம்
50. புஜங்கலலிதம்
51. ரிஷ பாந்திகம்
52. கஜயுத்தம்
53. கஜாந்திகம்
54. வீணை தயங்கு தட்சிண மூர்த்தம்
55. யோக தட்சிண மூர்த்தம்
56. பிட்சாடனம்
57. கவலை உத்தாரணம்
58. விதிசிர கண்டனம்
59. கௌரி விலாஸம்
60. அரியர்த்தம்

61. வீரபத்திரம்
62. திரிமூர்த்தி முப்பாதம்
63. மகாவேதாளி நடம்
64. ஏகபதத்திரியுருவம்

(2) முருகனின் தேவிமார்கள் இருவருள் தெய்வயானை யார்? வள்ளி யம்மை யார்? என்பது நம்மிற் பலருக்குத் தெரிவதில்லை. முருகனின் இடப்பக்கம் இருப்பவர் தெய்வயானையம்மை; வலப்பக்கம் இருப்பவர் வள்ளியம்மை. பண்டைக் கால முன்னோர்கள் சிற்சில செய்திகளைக் குறிப்பினாலேயே உணரவும் உணர்த்தவும் வல்லராக விளங்கியிருந்தனர். ஒரு குடும்பத்தில் ஆடவரும் பெண்டிரும் ஆகப் பலர் இருப்பின், யார் யாருக்கு என்னென்ன உறவுரிமை உடையவர் என்பதை நாம் வினவி யறிந்து கொள்ள வேண்டாமலே, நயத்தக்க நாகரிக நிலையில் குறிப்பில் பெறப்பட உணர்த்துவர். ஓர் ஆடவனுக்கு இடப்புறத்தில் ஒருத்தி இருந்தால், அவள் அவனுடைய மனைவி என்று குறிப்பாகத் தெரிந்துகொள்ளலாம். சகோதரி களோ பிறரோ ஆயின் அவர்கள் வலப்பக்கம் இருப்பது மரபு. இம்மரபினால் உறவுரி மையினை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். மனைவி இடப்பக்கத்திற்குரியவளாகக் கொள்ளப் பெற்றமை, அப்பக்கத்திலேயே ஆடவனின் இருதயம் அமைந்திருப்பது பற்றியே ஆகும். "என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே" என்பது சங்கப் பாடல். உமையம்மையார் சிவபிரானின் இடப்பக்கத்தில் வீற்றிருந்தருளுதல் காண லாம். தெய்வயானையம்மை முறைப்படி மணந்துகொள்ளப்பெற்ற முதல் மனைவி யாதலின், அவள் இடப்பாகத்திற்குரியவள் எனலாம். வள்ளியம்மை **களவு** மணத் திற்கு உரியவளாக நூல்கள் கூறுதலின், அவள் வலப்பக்கத்திற்கு உரியவள் ஆவாள். திருவாசகம் திருச்சாழலில், இறைவன் அம்பிகையை உலகறியத் தீ வேட்டமை, கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்காமையின் பொருட்டே என்று கூறுதலால், இன்னோரன்ன உலகியற் செய்திகளும் இறைவனின் திருவுருவ அமைப்புக்களில் நுட்பமாக அமைத்து விளக்கப் படுகின்றன என்று உணர்தல் நலம். வேறு வகை களில் இவற்றிற்கு விபரீதக் கருத்துக்கள் கொள்ளுதல் கூடாது. தெய்வயானை **கிரியா சக்தி**. வள்ளி **இச்சா சக்தி**. தெய்வயானையின் நிறம் **பொன்மை**. வள்ளி யின் நிறம் **பசுமை**. தெய்வயானை ஞானசக்தி என்றும், வள்ளி கிரியா சக்தி என் றும் கூறுவதுண்டு. வள்ளியின் திருக்கரத்தில் **கழுநீர்** மலர் இருக்கும். தெய்வயானை யின் கரத்தில் **தாமரை** மலர் விளங்கும் எனத் திருத்தணிகைப் புராணத்தில் கச்சி யப்ப முனிவர் குறிப்பிடுகின்றார்.

(1) செக்கர்மெய் வேட்கி ரண்டு
தேவிக ளுளரா லன்னோர்
எக்கலை களுக்குஞ் செல்வ
மெதற்குமே தெய்வ மாவர்;
அக்கரு ணுருசொ ரூப
வவரைவல் லியராய்க் கூறல்
தக்கவர் தொன்மை யுண்மை
தகைமைகண் டுரைத்த தாகும்.

(2) முன்னவட் கமுதப் பேர்தான்
மொழியலா மவள்தே வானை;
என்னுமோர் பெயருங் கொண்டாள்;
இளையள்சுந் தரப்பே ருள்ளாள்;
அன்னவள் பெயர்தான் வள்ளி
யாகுமா றிலங்கினாள்; நூல்
பன்னுல கெல்லா மீன்ற
பராபரை யிவர்க ளானாள்.

(3) நலந்திகழ் சரியை யாதி
நாற்றிற மார்க்க மாட்சிப்
பலந்திகழ் மலர்க ணன்குற்
பவிக்கும்வல் லிகளாய்ச் செவ்வேள்
வலந்திகழ் வுற்றாள் வள்ளி ;
மற்றவ ளிடமே யுற்றாள் ;
சலந்தெறு சரியை யோகங்
கிரியையை அறிவைச் சாரும்.

(4) ஆதலால் றேவ யானை
யமுதமாய் மேனி பொன்மை
ஈதலாற் றேவ லோகி
லிருந்ததான் ஞான மாவள்;
கோதிலாச் சுகுண வள்ளி
குழகியாய் மேனி பைம்மை
ஈதலாற் பூலோ கத்தில்
இருந்ததாற் கிரியை யாவாள்.

—பாம்பன் சுவாமிகள்
செக்கர்வேள் செம்மாப்பு

இறைகதித்த சூர்முதலை இறுப்ப அரனே
இளையோன் ஆன வாற்றால்
முறைகதித்த இருசுடரே முகத்துவிழி
எனத்தெரிக்கும் முறைமை ஏய்ப்ப,
நறைகதித்த மலர்க் கழுநீர், நளினம், அவன்
விழியருகு நலக்க ஏந்தி
நிறைகதித்த உனத்தொடு இடம் வலம் அமர்ந்த
மாதர்பதம் நினைத்தல் செல்வாம்

—கச்சியப்ப முனிவர்
தணிகைப் புராணம்

(3) "வேத விழுப்பொருள்" என்பது சிவபெருமானின் மேன்மையை விளக்கும் ஒரு சிறந்த தொடராகும். வேதங்கள் விளக்கும் பொருள்களிலெல்லாம் மிக மேலான விழுமிய பொருளாக விளங்குபவன் சிவபெருமான் என்பது அத் தொடரின் பொருள். வடமொழி தமிழ் என்னும் இருவகை வேதங்களிலும் நடுநாயகமாக விளங்குவது திருவைந்தெழுத்து. அம் மந்திரத்தின் பொருளாகச் சிவபெருமான் விளங்குகின்றான். இருக்கு எசுர் சாமம் என்னும் மூன்று வேதங்களே மிகவும் பழமையானவை. ஆதலின் வேதத்திற்குத் **'திரயீ'** என்றும் ஒரு பெயர் வழங்கும். வேதங்களுள் எசுர் வேதம் நடுவானது. அதன் சாகைகள் 101. அவற்றுள் நடுவணதாக விளங்குவது 51-ஆம் சாகையாகிய போதாயன சாகை. அது ஏழு காண்டங்கள் கொண்டது. அவற்றுள் நடுவதாகிய நான்காம் காண்டமாக அமைந்திருப்பது சதருத்திரம். அது 9 பிரச்சினங்களைக் கொண்டது. அவற்றிற்கு நடுவாக விளங்கும் 5-ஆம் பிரச்சினத்தின் நடுவில் விளங்குவது **'நமச்சிவாய'** என்னும் மந்திரம். அம்மந்திரத்தின் இடைப்பகுதியில் 'சிவ' என்னும் திருப்பெயர் அமைந்துள்ளது. அம்மந்திரத்தின் பொருளாகச் சிவபெருமான் விளங்குதலின், சிவபெருமான் **வேத விழுப்**

பொருள் என வியந்து துதிக்கப்பட்டார். வேதங்களின் நடுவில் நடுநாயகமாக 'சிவ' என்னும் சொல் அமைந்திருப்பதனைப் பின்வரும் செய்யுள் கொண்டு உணரலாம்.

"மும்மறையுள் நடுமறையின் முனிவில் எழு காண்டத்தில்
செம்மைதரு நடுக்காண்டம் சேர்ந்தஎழு சங்கிதையில்
அம்மநடுச் சங்கிதையின் ஆதிஈறு ஒழித்துநடுப்
பொம்மலுற அமர்மனுவின் பொருளாவான் சிவபெருமான்"

—திருநாகைக் காரோணப் புராணம்

தமிழ் வேதமாகிய சைவத் திருமுறைகளின் நடுவிலும் இவ்வாறே 'சிவ' எனும் மந்திரம் நடுநாயகமாக அமைந்து திகழ்கின்றது. மூவராகிய தேவார ஆசிரியர்களுள் திருநாவுக்கரசர், ஏனைய இருவருக்கும் நடுவில் நிற்பவர் ஆவர். அவர் தம் திருமுறைகள் மூன்று. அவற்றின் நடுவே இருப்பது திருக்குறுந்தொகைகள் அடங்கிய திருமுறை. அது 101 பதிகங்கள் கொண்டது. அவற்றிற்கு நடுவாய்த் திகழ்வது 51-ஆம் பதிகம். ஏனைய பதிகங்கள் எல்லாம் 10 பாடல்கள் மட்டுமே கொண்டவை. ஆனால் 51-ஆம் பதிகமோ 11 பாடல்கள் கொண்டுள்ளது. இவற்றின் நடுவணதாகத் திகழும் 6-ஆம் பாட்டின் நடுவில் 'சிவாய' என்னும் மந்திரம் ஓர் அழகிய பெருமணி போல் ஒளிவிட்டு மிளிர்கின்றது.

"விண்ணி னார்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னார்மற வாது சிவாயவென்
றெண்ணி னார்க்கிட மாஎழில் வானகம்
பண்ணி னாரவர் பாலைத் துறையரே"

—அப்பர் தேவாரம், திருப்பாலைத்துறை

(4) யோகிகள் தம்முடைய யோகஞான அனுபவத்தினால் நம்முடைய உடம்பினுள்ளே முதன்மையான சில சிறப்பு இடங்கள் அல்லது பகுதிகள் இருத்தலைக் கண்டு உணர்ந்து அவற்றின் இயல்புகளை மிக வியத்தகு முறையில் விளக்கியுள்ளனர். அவைகள் நம்முடைய புறக் கண்களுக்கோ, எக்ஸ்ரே முதலிய கருவிகளுக்கோ புலப்படுவன அல்ல. யோக நெறிப் பயிற்சியில் பல்காலும் தலைப்பட்டு, மெய்யுணர்வு அனுபவத்தினாலேயே, அவற்றின் இயல்பினை ஒருவர் உணர்ந்துகொள்ளுதல் இயலும். எனினும் ஞானச் செல்வர்கள் தம்முடைய நூல்களில், ஆறு ஆதாரங்கள் பற்றிய செய்திகளைக் குறிப்பிட்டிருக்கக் காண்கின்றோம். ஆறு ஆதாரங்களும் நம் உடலினுள் அமைந்திருக்கும் இடம், அவற்றன் அமைப்பு, வடிவம், நிறம், அவற்றிற்குரிய அதி தெய்வம், மந்திர எழுத்து முதலியவற்றை, நூல்கள் விளக்குகின்றன.

(1) மூலாதாரம் : குதத்திற்கும் கோசத்திற்கும் நடு, முக்கோணம், நாலிதழ்க் கமலம், மாணிக்க நிறம், கணபதி, குண்டலி சக்தி, ஓங்காரம்.

(2) சுவாதிட்டானம் : கோசத்திற்கும் நாபிக்கும் நடு, நாற்சதுரம், ஆறிதழ்க் கமலம், செம்பொன்னிறம், பிரமா, சரசுவதி, நகாரம்.

(3) மணிபூரகம் : நாபிக் கமலம், மூன்றாம்பிறை, பத்திதழ்க் கமலம், மரகத நிறம், விஷ்ணு, லட்சுமி, மகாரம்,

(4) அனாகதம் : இருதய கமலம், பன்னிரண்டிதழ்க் கமலம், முக்கோணம், ஸ்படிக நிறம், உருத்திரன், பார்வதி, சிகாரம்.

(5) விசுத்தி. கண்டத்தானம், பதினறிதழ்க் கமலம், அறுகோணம், மேகசிறம், மகேசுவரன், மகேசுவரி, வகாரம்.

(6) ஆஞ்ஞை : லலாடத்தானம், மூன்றிதழ்க் கமலம், வட்டம், படிக நிறம், சதாசிவம், மனோன்மணி, யகாரம்.

(5) பௌத்த மதம் பொதுவாக நான்கு வகைப் பிரிவுகள் உடையதாகக் கூறப்படும். மாத்தியமிகம், யோகாசாரம், சவுத்திராந்தகம், வைபாடிகம் என்பன அவை. அவற்றுள் சவுத்திராந்தகம் என்பதே, ஆசிரியர் அருள் நந்தி சிவாசாரியரால் தமது சிவஞான சித்தியாரின் பரபக்கப் பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

நால்வகைப் பௌத்தருள், எல்லாப் பொருள்களும் சூனியம் என்பர் மாத்தியமிகர். புறப்பொருள் மட்டுமே சூனியம் என்பர் யோகாசாரர். புறப்பொருள் உண்மை அனுமானம் ஆகிய வழியளவையால் அறியப்படும் என்பர் சவுத்திராந்திகர். புறப்பொருள் காட்சிப் பொருளாம் என்பர் வைபாடிகர். இந்நால்வரும் ஆதி புத்தனுடைய மாணுக்கர்.

ஆசிரியர் மொழிந்ததே பொருள் எனக் கொள்ளுதலால் தலை மாணுக்கர் அதற்குமேல் அறிய விரும்பி வினு நிகழ்த்தாமையிற் கடை மாணுக்கர், என இரண்டும் ஒருங்குற்று நின்றமையின் மத்தியம மாணுக்கராய் மாத்தியமிகர் எனப் பெயர் பெற்றனர்.

பௌத்த மதத்தில் ஆசிரியர் மொழி உடன்படுதலை ஆசாரம் எனவும் அதற்கு மேல்வினுவுதலை யோகம் எனவும், பெயரிட்டு வழங்குவர். அம்முறையில், 'புறப்பொருள் சூனியம்' என்று உபதேசித்த ஆசிரியரின் உரையினை உடன்பட்டு, ஞானமும் அவ்வாறு சூனியமாயின் வழங்கற்பாடு நிகழுமாறு யாங்ஙனம்? என வினவியதனுல், யோகாசாரர் எனப் பெயர் பெற்றனர்.

ஆசிரியன் அறிவுறுத்தும் கருத்துக்கள் மாணுக்கரின் வினுவிற்கும் தகுதிக்கும் ஏற்ப வெவ்வேறு வகைப்படுதல் கண்டு, 'இங்ஙனம் நீர் வெவ்வேறுபட அறிவுறுக்கும் சூத்திரங்கள் எவ்வளவில் முடிவுபெறும்?' என ஆசிரியனை நோக்கிச் சூத்திரத்தின் அந்தம் பற்றி வினவியதினுல், அங்ஙனம் வினவினோர், சவுத்திராந்திகர் எனப் பெயர் பெற்றனர்.

ஆசிரியர், புறப்பொருள்கள் ஞானத்தால் அனுமான அளவையைக் கொண்டு ஆராய்ந்து உணரற்பாலன எனக் கூறியது கேட்டு, இது முற்கூறிவந்தனவற்றிற்கு முரண்படும் மாறுகோளுரை ஆகிய விபாடை ஆகும் அன்றோ? என வினவினோர் வைபாடிகர் என வழங்கப் பெற்றனர். 'விபாடை' என்னும் சொல்லிலிருந்து வைபாடிகர் என்னும் சொல் தோன்றியது.

(6) "சீர்மல்குமாய்ப் பாடிச் செல்வச்சிறுமீர்காள்" என்னும் திருப்பாவை வரியில், சீர்மல்குதலாவது, இவ்வூரிலுள்ள செல்வ வளம் வேறோர் ஊர்க்கு வெள்ளமிடப் போந்திருத்தல். அதாவது அந்தகாரத்தில் தீபம்போலே கிருஷ்ணனுடைய நீர்மைகள் எல்லாம் இங்கே விளங்கித் தோன்றி, பரமபதத்திலும் சென்று அலை எறியும்படியாய் இருத்தல். பண்டே பசுக்களின் செல்வ வளம் நிரம்பியிருந்தாலும், பிள்ளைகளின் கால் நலத்தாலே கறப்பன கடைவனவற்றுல் குறைவற்று, நாழிபால் நாழி நெய் போருகை முதலியனவுமாம்.

**ஆய்ப்பாடி** - பரமபதத்தையும் அயோத்தியையும் விடக் கூட ஆய்ப்பாடி சிறந்து விளங்குகின்றது. பரமபதம்போல வேறு தேகம் தேடிப் பெறவேண்டாமல் மனித தேகத்தோடேயே இறைவனை அனுபவிக்கப் பெறும் ஊர் ஆய்ப்பாடி. ஆசாரப் பிரதானரான வசிஷ்டர் போன்ற சிறந்த பெருமக்கள் மட்டுமே வாழ்வது திரு அயோத்தி. ஆய்ப்பாடியோ இடக்கையும் வலக்கையும் அறியாத எளிய இடையர்கள் நிரம்பி வாழ்வது. பெருமாள் குணங்கண்டு உகக்குமூர் திருவயோத்தி; ஆய்ப்பாடியோ கிருஷ்ணன் தீம்பு கண்டு உவக்கும் ஊர்.

**செல்வச்சிறுமீர்காள்** என்னும் தொடரில் செல்வமாவது பகவத் சம்பந்தம். வேறு செல்வங்கள் எதுவும் இல்லையாயினும் பகவத்சம்பந்தம் உடைமை ஒன்றுமே, பெரும் செல்வமாகும். அரசைத் துறந்து வெறுங்கையோடு இராமன் பின் சென்ற இளையபெருமாளும், இராவணனின் அரண்மனையை விட்டு நீங்கி எல்லாவற்றையும் துறந்து வறிதே வந்த விபீஷணனும், இறைவனையே காவலனாக நம்பித் தன் பக்கல் முதலற்றுக் கைவாங்கின கஜேந்திரவாழ்வானும், பெரும் செல்வமுடையவர்களாக நூல்களில் சிறப்பிக்கப் பெற்றுள்ளனர். ஆதலின் பகவத் சம்பந்தம் பெற்றுள்ள ஆயர் சிறுமியர்கள், செல்வச் சிறுமியர்கள் எனப் புகழ் பெற்றனர். இச்சிறுமியர்கள் கிருஷ்ணனுடைய தொடர்பாகிய செல்வம் நிரம்பப் பெற்றவர்கள். அவர்களோடு கூடிக் கலவாவிடில் கிருஷ்ணன் களிக்க மாட்டான். கூடிக் கலப்பதற்குரிய மைத்துன மையாகிய உறவு உரிமையும் அவர்களுக்கு அமைந்துள்ளது. தன்னோடு கலவாவிடில் தரியாமை யுடைய அவர்கள் திறத்தில், கிருஷ்ணனின் காருண்யமும் பெருகிக் கிடக்கிறது. இங்ஙனம் **வலிமை வழக்கு தருமம்** என்னும் மூன்றும் இச்சிறுமியர்களுக்குக் கிருஷ்ணனோடு தொடர்புரிமை இருத்தலின் அவர்கள் செல்வச் சிறுமியர்கள் எனப்பட்டனர். **சிறுமீர்காள்** என்றது கிருஷ்ணனோடு ஒத்த பருவத்தினராயும், எல்லாவற்றிலும் அவனுக்கு ஈடாயும், அவனுக்கே உரியவர்களாயும் இருக்கும் சிறப்பை உணர்த்தியவாறு.

(7) கும்பகோணம் என வழங்கும் **திருக்குடந்தையிலுள்ள ஸ்ரீ ஆராவமுதப்பெருமாளுக்கு** 'உத்தானசாயி' என்னும் ஒரு பெயர் உண்டு. திருமழிசையாழ்வார் திருக்குடந்தையிலுள்ள ஆராவமுதனின் திருவடிகளிலே, ஈடுபட்டு அனுபவிக்க இழிந்தார். அப்பெருமான் வாய்திறந்து ஒரு வார்த்தையேனும் அருளிச் செய்யாமலும், கைகோலி அணைத்தருளாமலும் பெருவடிவினராய்க் கண்வளர்ந்தருளக் கண்டார். அந்நிலையில் ஆழ்வார், பெருமாள் ஏதோ அளவற்ற களைப்பினால்தான், இங்ஙனம் திருக்கண் வளர்ந்திருக்கிறார் போலும் என்று ஐயுற்றார். பெருமானை நோக்கி, உலகங்களை உம்முடைய மென்மையான திருவடிகளால் அளந்ததினால் திருவடிகள் நோவுற்றனவோ? அல்லது வராகாவதாரம் எடுத்துப் பூமிப் பிராட்டியைப் பாதாளத்தினின்று எடுத்து நிலைபெறுவித்ததினால் உடம்பு குலுங்கியதோ? இங்ஙனம் நீர் கண் வளர்ந்தருள்வது எற்றுக்கு? என்பதனைத் தெரிவித்தருளுதல் வேண்டும், என்னும் கருத்தமையப் பாசுரம் அருளிச் செய்தார்.

நடந்த கால்கள் நொந்தவோ?
 நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ?
 விலங்குமால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்த
 காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந் திருந்து
 பேசு வாழி கேசனே.

எனவரும் திருச்சந்த விருத்தப் பாசுரத்தில், திருமழிசையாழ்வார் "கிடந்தவாறு எழுந்திருந்து பேசு" என அருளிச் செய்ததினுல், கிடந்தவாறே எழுந்திருக்கும் நிலையில் உத்தானசாயியாகத் திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதப் பெருமாள் விளங்கி வருகின்ருர்.

(8) காஞ்சிபுரம் தொன்னெடுங்காலம் முதலே, இந்திய தேசம் முழுவதும் புகழ் பெற்று விளங்கிய சிறந்த நகரங்களில் ஒன்ருகத் திகழ்ந்து வருகின்றது. "கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகர்" என்றும, "முத்திதரும் நகரேழில் முதன்மையதாம் காஞ்சி" என்றும் பெரியோர்கள் இதனைப் போற்றியுள்ளனர். காஞ்சியைப் போன்ற கோயில்கள் நிறைந்த நகரம் வேருென்றில்லை எனலாம். இத்தகைய காஞ்சிமா நகரில் பெருமாள் கோயில்கள் சிறப்பாக 18 இருக்கின்றன.

1. திருக்கச்சி அத்திகிரி (ஸ்ரீ வரதராஜ சுவாமி கோயில்)
2. திருவெஃகா (ஸ்ரீ யதோக்தகாரி சந்நிதி, சொன்னவண்ணம் செய்த பெருமாள் கோயில்.)
3. அஷ்டபுயகரம்.
4. வேளுக்கை (ஆளழகிய சிங்கர் கோயில்)
5. திருத்தண்கா (ஸ்ரீ விளக்கொளி கோயில்)
6. ஊரகம்
7. நீரகம்
8. காரகம்
   (6–8) உலகளந்த பெருமாள் கோயிலிலுள்ளவை.
9. கார்வானம்
10. பரமேச்சுர விண்ணகரம் (ஸ்ரீவைகுண்டப் பெருமாள் கோயில்)
11. பவளவண்ணம்
12. நிலாத் திங்கள் துண்டம் (ஸ்ரீ திருவேகம்பநாதர் கோயிலிலுள்ளது.)
13. கள்வனூர் (ஸ்ரீ காமாட்சியம்மை கோயிலில் உள்ளது.)
14. திருப்பாடகம் (ஸ்ரீ பாண்டவதூதர் சந்நிதி)

இப்பதினன்கு கோயில்களும், ஆழ்வார்களின் பாடல்களில் குறிப்பிடப் பெற்று மங்களாசனம் பெற்றவை.

15. நரசிங்கப் பெருமாள் கோயில்
16. முகுந்தப்பெருமாள் கோயில்
17. உள்ளுவார் உள்ளத்தான் கோயில்
18. பச்சை வண்ணர் கோயில்

இந்நான்கு கோயில்களும் தலபுராணங்களில் குறிப்பிடப் பெறுபவை.

9. ஒரு பாடலில், சொற்போக்கில் மேலெழுந்தவாருகத் தோன்றுகின்ற பொருள் அந்யாபதேசம் எனப்படும். உள்ளுற ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கும் அளவில் அப்பாடலிலேயே கிடைக்கும் நுண்பொருள் ஸ்வாபதேசம் எனப்படும். பொதுப் பார்வைக்கு மேல் நோக்காகத் தோன்றும் பொருள் **அந்யாபதேசம்**. சிறப்பு நோக்கில் நுட்பமாகத் தோன்றும் பொருள் **ஸ்வாபதேசம்**. உத்தேசிக்கப்பட்ட பொருளைக் காட்டிலும் வேருன ஒரு பொருளைக் குறிப்பது அந்யாபதேசம். உண்மையில் விவட்சிதமான பொருளைப் பிரிப்பது ஸ்வாசதேசம். ஸ்வாபதேசம் என்பதை அக நோக்கு (Subjective) என்றும், அந்யாபதேசம் என்பதைப் புற நோக்கு (Objective) என்றும் ஒருவகையில் பொதுவாகக் கொள்ளலாம்.



(10) திருமாலின் தசாவதாரங்களுக்கு ஒப்பிட்டு ஆழ்வார்களின் திருவவதாரங்களைக் கூறுவதுண்டு. அம்முறையில் ஆழ்வார்கள் பின்வரும் அவதாரங்களாகக் கொள்ளப்படுவர்.

1. பொய்கையாழ்வார் — மச்சாவதாரம்.
2. பூதத்தாழ்வார் — கூர்மாவதாரம்.
3. பேயாழ்வார் — வராகாவதாரம்.
4. திருமழிசையாழ்வார் — நரசிம்மாவதாரம்.
5. நம்மாழ்வார் — வாமனவதாரம்.
6. குலசேகராழ்வார் — பலராமாவதாரம்.
7. பெரியாழ்வார் — இராமாவதாரம்.
8. தொண்டரடிப்பொடியாழ்வார் — பலராமாவதாரம்.
9. திருப்பாணாழ்வார் — கிருஷ்ணவதாரம்,
10. திருமங்கையாழ்வார் — கற்கி அவதாரம்.

இவ்வாறு ஆழ்வார்களின் பெருமையை விளக்கியருளியவர் வேதாந்த தேசிகர் ஆவர்.

—ஆசிரியர்.

---

ஸ்ரீரங்கம் கோயிற் சிற்பங்கள்

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அவா.

காலையில் பல் துலக்கி, நெற்றியில் திருநீறு அல்லது சிறிதளவு மண்ணுவது இட்டுக்கொண்டு, சூரியனைப் பார்த்து மூன்று தடவை நமஸ்காரம் செய்ய வேண்டும் (**விழுந்து கும்பிட வேண்டும்**). பிறகு "**ஹரோ ஹரா**" **அல்லது** "**ராம ராமா**" என்று கடவுள் நாமத்தைக் கணக்கிட்டுக் கொண்டு, பதினேரு தரம் மனதில் ஜபிக்க வேண்டும். பிறகு ஒரு தரம் நமஸ்காரம் செய்ய வேண்டும் (**விழுந்து கும்பிடவேண்டும்**). இவ்விதம் சூரியனைப் பார்த்து அந்திப் பொழுதிலும் செய்ய வேண்டும்.

இவ்விதமே இரு வேளைகளிலும் நமது ஆயுள் காலம் வரை ஜபிக்க வேண்டும்.

'**ஐயமிட்டுண்**' என்பது தமிழ் மூதாட்டியான ஔவையின் அருள் வாக்கு. இதை ஒவ்வொரு குடும்பமும் பின்பற்றுவது நல்லது. ஒவ்வொரு நாளும் சமையலுக்காக உலைப்பானையில் அரிசி போடும்போது, தர்மத்துக்கென்று ஒரு தனிப் பாத்திரத்தில் ஒரு **பிடி அரிசியும், ஒரு காசும் போட்டு** வைக்க வேண்டும். வாரத்துக்கு ஒரு தரம் இந்த அரிசியை வசூல் செய்து, ஓர் இடத்தில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்காக ஒவ்வொரு தெருவிலும் அல்லது வட்டத்திலும் ஒரு சங்கம் அமைத்துக் கொள்ளலாம்.

சேமிப்பு அரிசியை அந்தச் சங்கத்தின் மூலம், பக்கத்திலுள்ள கோயிலில் கொடுத்துச் சமைத்துப் **பகவானுக்கு நிவேதனம்** செய்ய வேண்டும். நிவேதனம் செய்த அந்த அன்னத்தைப் பட்டை போட்டு, அந்த வட்டாரத்திலுள்ள ஏழை ஜனங்களுக்குக் குறைந்த விலையில் 10 காசு வீதம் விற்க வேண்டும். இதில் கிடைக்கும் தொகையை விறகு வாங்குவதற்கு, அல்லது கோயிலில் சமையல் செய்பவருக்கு ஊதியம் கொடுப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த தர்மத்தைக் கடைப் பிடித்தால் ஏழை ஜனங்களுக்கு உபகாரமாக இருக்கும். பகவானுக்கு நிவேதனம் செய்த அன்னத்தை உட்கொள்வது மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றச் செய்யும். இந்த தர்மத்தினல், தர்மம் செய்பவர்கள், அதைப் பெறுகிறவர்கள் இருவருமே கடவுளின் கிருபைக்குப் பாத்திரர்களாகிருர்கள்.

ஊர் கூடித் தேர் இழுப்பதுபோல், எல்லோரும் இதைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தால், ஏழை ஜனங்களுக்குப் பேருதவியாக இருக்கும். பசித்தவனுக்கு உணவளிப்பதைவிட வேறு சிறந்த தர்மம் ஏது? நாம் கொடுப்பது பிடி அரிசி; அதில் எவ்வளவோ பேர் பலன் பெறுகிருர்கள்.

# தலப்பெயர்களில் கவிப் புனைவுகள்

**முன்னுரை :**

தமிழ் நாடு எண்ணிறந்த தலங்கள் நிறைந்தது. பழமையும் பெருமையும் வாய்ந்த எண்ணிறந்த தலங்கள் தமிழ் நாட்டிற் போல இத்துணை மிகுதியாக வேறு எங்கணும் இல்லை என்றே கூற லாம். தமிழ் மக்களின் சமய சமுதாயத் துறைகளிலும், கலையியல் பொருளியல் துறைகளிலும், தலங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. தலங்களை இறை வனின் திருவருள் விளங்கிப் பெருகும் "ஆற்றல் ஊற்றகங்கள்" என்றே கூற லாம். ஒவ்வொரு தலத்திற்கும், ஏதே னும் ஒருகுறிப்பிட்ட தனிச் சிறப்பும், தெய்வீகப் பெருமையும் அமைந்து திகழக் காண்கின்றோம். அதனால்தான் வாழை யடி வாழையாகவும், பன்னூற்றுக்கணக் கான ஆண்டுகளாகவும், இறைவன் எழுந் தருளி விளங்கும் இத்திருத்தலங்கள் பல வும், மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து கொள்ளை கொண்டு, அவர்களின் மதிப் பிற்கும் வழிபாட்டிற்கும் உரியனவாகப் பெருமையுற்றுப் பிறங்கி வருகின்றன.

**தலமும் மக்களும் :**

அக்காரணம் பற்றித்தான், தமிழ் மக் கள் அவ்வத் தலங்களிலுள்ள இறைவ னின் பெயர்களை மட்டுமேயன்றி, அந்தந் தத்தலங்களின் பெயர்களையும்கூட மிகவும் புனிதமும் சிறப்புமுடையதாகப் போற்றி வருகின்றனர். மதுரை, பழநி, சிதம்பரம் அண்ணாமலை, திருவேங்கடம், திருமலை, விருத்தாசலம், தணிகாசலம் எனப் பலப் பல தலங்களின் பெயர்களைப் பெரியோர் கள் தம் மக்களுக்கு வைத்து வழங்கி வரு தல் காணலாம், தலங்களின் பெயர் களையே மந்திரங்கள் போலவும், அப் பெயர்களை இடைவிடாமல் கூறிக் கொண் டும் சிந்தித்துக் கொண்டும் இருத்தலேஒரு சிறந்த வழிபாடு என்றும், பெரியோர்கள் கருதி வந்துள்ளனர்.

"படிக்கின்றனை பழநித் திருநாமம் ;
படிப்பவர்தான்
முடிக்கின்றிலை"

எனவரும் கந்தரலங்காரப் பாடலில் அரு ணகிரிநாதர், பழநி என்னும் திருநாமத் தினை இடைவிடாமல் சொல்லிக் கொண்டு இருத்தலும், அங்ஙனம் இடைவிடாமல் சொல்லிக் கொண்டிருப்பவர்களின் திரு வடிகளைத் தலைமேல் ஏற்றுச் சூடிக் கொண்டு மகிழ்தலும், சிறந்த செயல்க ளாகப் புலப்படுத்தியுள்ளமை காண லாம்,

**திருநாவுக்கரசர் :**

இவ்வாறே திருநாவுக்கரசர் பெருமா னும், பூந்துருத்தி, நெய்த்தானம், ஐயாறு, பழனம், சோற்றுத்துறை, வலஞ்சுழி, கண்டியூர், குடமூக்கு, வெண்காடு என்னும் தலங்களின் பெயர்களை நாம் இடை விடாமல் சொல்லிக் கொண்டிருந் தால், நம்முடைய தீவினைகள் எல்லாம் நீங்கி ஒழிதல் திண்ணம் எனக் குறிப்பிட் டருளுகின்றார்.

பூந்துருத்தி பூந்துருத்தி என்பீ ராகில்
பொல்லாப் புலால்துருத்தி போக்க
லாமே. (1)
நெய்த்தானம் நெய்த்தானம் என்பீ ராகில்
நிலாவாப் புலால்தானம் நீக்க
லாமே. (2)
ஐயாறே ஐயாறே என்பீ ராகில்
அல்லல்தீர்ந் தமருலகம் ஆள லாமே. (3)

பழனம் பழனமே என்பீ ராகில்
பயின்றெழுந்த பழவினைநோய் பாற்ற லாமே. (4)

சோற்றுத்துறை சோற்றுத்துறை என்பீ ராகில்
துயர்நீங்கித் தூ நெறிக்கட் சேர லாமே. (5)

கண்டியூர் கண்டியூர் என்பீ ராகிற்
கடுகநும் வல்வினையைக் கழற்ற லாமே. (6)

வலஞ்சுழியே வலஞ்சுழியே என்பீ ராகில்
வல்வினைகள் தீர்ந்துவா னாள லாமே. (7)

குடமூக்கே குடமூக்கே என்பீ ராகில்
கொடுவினைகள் தீர்ந்தரனைக் குறுக லாமே. (8)

வெண்காடே வெண்காடே என்பீ ராகில்
வீடாத வல்வினைநோய் வீட்ட லாமே. (9)

இங்ஙனம் திருநாவுக்கரசர் முதலிய செந்தமிழ்ச் சான்றோர்கள் பலரும் தலங்களின் பெயர்களைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்திருத்தல், அவற்றின் சிறப்பினை நமக்கு நன்கினிது விளக்கும்.

**மீனாட்சி சுந்தரம் பிள்ளை :**

தலங்களின் பெயர்களை. அவற்றின் சிறப்புடைமையும் அருமையும் கருதி, புலவர் பெருமக்கள் பலர் தத்தம் கவிதை நூல்களில், இடம் பொருள்களுக்கு ஏற்ற பெற்றி, ஆங்காங்கே பிணைத்து இணைத்துத் தம் கற்பனைத் திறனால், பல அற்புதக் கருத்துக்களை அமைத்து, அழகிய கவிதைகள் பாடியுள்ளனர். அவர்களுள் திருவாவடுதுறை ஆதின மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களும் ஒருவராவர்.

இறைவன்பால் தம்முடைய குறைகளையும் குற்றங்களையும் முறையிட்டுக் கொண்டு, தம்மையும் அருள் செய்து காத்தருள்தல் வேண்டுமென விண்ணப்பித்துக் கொள்ளும் முறையில், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், பல தலங்களின் பெயர்களைச் சொற்பொருட் சுவை நலம் விளங்கப் பின்வருமாறு பாடியருளுகின்றார் :—

1. இறைவனே நீ எழுந்தருளி விளங்குகின்ற **காஞ்சி** என்னும் தலத்தை அடைந்து உன்னை நான் பணிய மாட்டேன்; காஞ்சி என்னும் அணிகலன் விளங்குகின்ற மகளிரின் இடைப் பகுதியினையே பெரிதும் விரும்பி அடைய முயலுவேன்.

2. மதுரை மாநகரமாகிய மாட்சிமை மிக்க **கூடல்** என்னும் தலத்தினை யான் விரும்புவதில்லை; பெண்களோடு சேரும் கூடலையே பெரிதும் விரும்பி விழைவுறுவேன்.

3. என்னுடைய மனமானது என்றும் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் **ஐயாற்றையே** (ஐந்து வழிகளையே) விரும்பிச் செல்லும்; உன்னுடைய ஒப்பற்ற திருவையாறு என்னும் தலத்தை அஃது ஒரு போதும் விரும்புவதில்லை. யான் உயர்**தில்லை** என்னும் தலம் சென்று தரிசித்த தில்லை.

4. **மறைவனம்** என்னும் வேதாரண்யம் ஆகிய தலமானது கொடிய பாவியாகிய என் விழிகளுக்கு மறைகின்ற வனமாகவே விளங்குகின்றது.

5. **மாதங்க வனம்** என்னும் திருவானைக்கா ஆகிய தலத்தை யான் சிறிதும் சிந்திக்க மாட்டேன். ஆனால் மாது அங்க வனம் (பெண்களுடைய உறுப்பின் அழகு) பற்றியே, இடை விடாமல் நினைத்துக் கொண்டிருப்பேன்.

(தொடரும்)

# "அறிவார் இல்லை!"

"பாகலவி" வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்
(தத்புருஷ தேசிகர்), தேவகோட்டை.

---

கருணைக் கடலாகிய சிவபெருமான், ஆன்மாக்களாகிய நம்மிடத்தில் வைத்திருக்கும் பேரன்புக்கும், அது காரணமாக அவர் நமக்குச் செய்து வரும் உதவிகளுக்கும் அளவே கிடையாது. அநாதி காலம் தொட்டு நம்முடன் அநந்நியமாகப் பற்றித் தொடர்ந்து வருகின்ற ஆணவ மலத்தில் நாம் அழுந்திக் கிடந்த நமது கேவலநிலைமையிலும், பின்னர் நமக்குச் சிறிது அறிவு விளக்கம் உண்டாவதற்குக் கிடைத்த தநு கரண, புவன, போகங்களுடன் கூடிய இப்போதைய நமது சகல நிலையிலும், இனி மும்மலங்களையும் கழித்துச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வு பெற இருக்கிற நமது சுத்த நிலையிலும் சிவபெருமானுடைய உதவியின்றி நாம் வாழுதலில்லை. இதனை "அவனை யகன் றெங்கின்றும்" என்று திருவருட் பயன் அறிவுறுத்துகின்றது.

இடையீடின்றி இறைவன் செய்து வருகின்ற உதவிகளை உயிர்கள் பெற்று இன்புறுகின்றன என்பதனோடு, அவ்வுதவியை யின்றி அவைகள் வாழுமாறில்லை என்பதும் நாம் நன்கு உணர வேண்டியனவாகும்.

> "காட்டுவித்தா லாரொருவர் காணு தாரே
> காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே"

என்ற திருத்தாண்டகப் பகுதியில் உடன்பாடு, எதிர்மறை ஆகிய இரண்டு வகைகளிலும் வைத்து "இறைவன் உதவுகிறபொழுது உயிர்களுக்கு எந்த நுகர்ச்சியும் அமையாது போகாது" என்பதனையும் 'அவ்வுதவி இல்லாதபொழுது எந்த நுகர்ச்சியையும் யாரும் பெற முடியாது' என்பதனையும் அப்பர் சுவாமிகள் அருளிச் செய்திருக்கின்றார்கள்.

காலவரம்பு செய்து காண முடியாத அநாதி வேளை தொடங்கி இன்றுவரை, இனி என்றுமே வேறு யாரும் செய்து தரமுடியாத பேருதவியை உயிர்களோடு ஒன்றாகவும், வேறாகவும், உடனாகவும் இருந்துகொண்டு ஆண்டவன் செய்து வருகின்றானென்பது, எவ்வாற்றானும் மறுக்க முடியாத உண்மையேயாயினும், அவ்வுண்மையை உணர்ந்து அவனது நல்லருட் டிறத்தை நினைந்து போற்றுகின்றவர்கள் எத்துணைப்பேர் இருக்கின்றார்கள்? இப்படியொரு வினாவை எழுப்பி விடை தேடுகின்றார் திருமூல தேவநாயனார்! அவர் கண்ட விடை, திருமந்திர மாலைக் கடவுள் வாழ்த்தின் எட்டாவது திருப்பாடலாக வெளிவருகின்றது. அந்தத் திருப்பாடல்,

> "தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
> ஆயினு மீச னருளறி வாரில்லை
> சேயினு நல்ல னணியனல் லன்பர்க்குத்
> தாயினு நல்லன்பின் தாழ்சடை யோனே"

என்பதாகும்.

பின் தாழ் சடையனாகிய பிறப்பில் பெருமான், ஆன்மாக்களுக்கு எத்துணை எளிவந்தவனாயிருந்தும், அவனது திருவருளை அறிகின்ற மதுகை அவ்வான்மவர்க்கத்தினராகிய நம்மிடத்துக் காணப்பெறவில்லையே என ஆசிரியர் இத்திருப் பாடலில் இரங்கிக் கூறுகின்றார்.

சிவபெருமானைச் "சர்வேசுவரன்" முதலிய பெயர்களை வைத்து வேதாகமங்கள் துதிக்கின்றன. அண்ட பேரண்டங்களாக விரிந்திருக்கின்ற எல்லாப் புவனங்களுக்கும், அவை எல்லாவற்றிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைத்துயிர்களுக்கும்

அச் சிவபெருமானே முதற் பெருந்தலைவன். அவனது ஆணையைத் தாங்கி அண்டகோடிகள் அனைத்திலும் பல புண்ணியான்மாக்கள் இடைப்பட்ட தலைவர்களாய் இருந்து வருகின்றனர். அந்தத் தலைவர்கள் அனைவருக்கும் தலைவன் சிவபெருமான் என்பதை உணர்த்தவே அவனைச் ''சர்வேசுவரன், பரமேசுவரன்', பரமபதி'' முதலிய பெயர்களை வைத்து ஆன்றோர் அவனை அழைத்தனர்.

கண்டவர் எவரையும் அஞ்சி யொதுங்கச் செய்கின்ற தெறலும், அதற்கு மாறாக அவ்வனைவரையும் விரும்பி நெருங்கச் செய்கின்ற அன்பும் எவரிடமும் உள்ளனவோ; அவரே தலைவராயிருத்தற்குரிய தகுதியை உடையவராவர். தெறலொன்றே யுடையோரை எவரும் நெருங்குதற்கஞ்சுவர். அதனால் அவர் பாற் பெறும் பயன் தீமை விளைவிப்பதற்கேதுவாயிருக்கும். அஞ்சுதற்கும் அன்பு செய்தற்கும் ஏற்றவனாயிருக்கின்ற தலைவனே, அவன் கீழ் வாழ்பவர்களுக்குக் காலம் இடமாதியன அறிந்து கொடுப்பன கொடுத்துத் தடுப்பன தடுத்து உதவி செய்பவனாயிருக்க முடியும்.

தேவர்கோ அறியாத தேவ தேவனும், மூவர் கோனாய் நின்ற மூர்த்தியுமாகிய சிவபெருமான், தனக்கே யுரிய பெருந்தலைமையினால் உயிர்களனைத்தும் பயனடைந்து இன்புறுதல் வேண்டுமென்று திருவுளங் கொண்டு வெப்பம், தட்பம் ஆகிய இரண்டு பண்புகளையும் உடையவனாயிருக்கின்றான். அவனது வெப்பம், பாசச் சேர்க்கையால் உயிர்களுக்கு உண்டாகும் இடையூறுகளை எதிர்த்து நீக்கித் துணை செய்யும்; தட்பம், அங்ஙனம் இடையூறுகளிலிருந்து நீங்கிய ஆன்மாக்களைச் சிவானந்தத்தில் இன்புற நிறுத்தி வைத்துத் துணை செய்யும். இவ்வாறு ஒன்றோடொன்று மாறுபட்ட இயல்புகளையுடைய வெப்ப தட்பங்களை இறைவன் மேற்கொள்ளுவதற்குக் காரணம், அவன் உயிர்கள் பால் வைத்துள்ள பெருங்கருணை ஒன்றேயாம்.

நமது துன்ப நீக்கத்தில் திருவுளங்கொண்டு சிவபெருமான் செய்தருளுகின்ற மறக் கருணைச் செயல்களை அறுவை மருத்துவரது மருத்துவத்தோடு ஒப்பிட்டு அருள் நூல்கள் கூறுகின்றன, ஆண்டவனது அறமும், மறமுமாகிய இருவகைக் கருணைச் செயல்களும் அவன் ஆன்மாக்களிடத்து வைத்த அன்பினாலேயே நிகழுகின்றன என்பதற்கு,

''அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை''

என்ற திருக்குறள் சான்று தருகின்றது.

''குற்றம் செய்வது உயிரியல்பு'' என்று பெரியோர் கூறுவர். அக்குற்றத்தையே தொடர்ந்து செய்து வருபவர்களை, உயரியல்புடையவர்கள் என்று சொல்லலாமேயன்றி, அவ்வுயிரினங்களில் மேம்பட்ட மனித இயல்புடையவரென்றோ, அவரினும் மேம்பட்ட சான்றாண்மையுடையவரென்றோ சொல்ல முடியாது. மனிதரிற் பெரும்பாலோர் உயிரியல்புடையவராகவே காணப் பெறுகின்றனர் அவரை மாக்கள் கீழோர், கயவர் முதலிய பெயர்களால் நூல்கள் குறிப்பிடுகின்றன. குற்றம் புரிவதிலிருந்தொழிந்து நன்மை புரிவதில் இவர்களுக்கு நாட்டம் உண்டாகவேண்டுமானால், அதற்கு உபாயம், இவர்களை அச்சுறுத்துவது ஒன்றே என்று

''அச்சமே கீழ்கள தாசார மெச்சம்
அவாவுண்டே லுண்டாம் சிறிது''

என்ற திருக்குறளால் ' திருவள்ளுவர் பெருமான் உணர்த்தியருளினார்.

கீழ்மக்களைத் தண்டம் செய்து திருத்துவது உலகியலிற் காணப் பெறுவது. இறைவனும் அவரை அவ்வுபாயத்தினாலேயே திருத்தியருளுகின்றான். அங்ஙனம் அவன் கொடுக்குந் துன்பம் அநுபவ வேளையில் வருத்தம் தருவதாதல் பற்றியே அவனைத் ''தீயினும் வெய்யன்'' என ஆசிரியர் முதலிற் கூறியருளினார். துன்பாநுபவம் பெற்றுப் பக்குவமடைந்த உயிர்களுக்கு, அவ்வநுபவப் பயனாக ஆண்டவன் வழங்குவது, துன்பமே வலவாத பேரின்பப் பேறு. அதனால் துன்ப நீக்கத்தில் தீயினும் வெய்யனுமாகி நின்ற சிவபெருமான் இன்ப ஆக்கத்தில் புனலினும் தண்ணியனாக மாறி

விடுகின்றான்,'' என்பது பின்னர் அறிவிக்கப் பெற்றது.

இங்ஙனம் வெப்பம் தட்பமாகிய இருவகை நிலைகளிலுமிருக்கும் இறைவன் எப்பொழுதும் உயிர்களுக்கு நல்லன செய்பவனாகவே இருக்கின்றான். சிவபெருமானுக்குரிய திருப் பெயர்களுள் ஒன்றாகிய "சங்கரன்" என்னும் திருநாமமும் அவனது நன்மையுண்மையை நமக்கு அறிவிப்பதாகும். தட்ப நிலையில் நின்று அநுக்கிரகம் செய்யும்போது இறைவன் நல்லவனென்பது எளிமையாகப் புலப்படுகிறது. வெப்ப நிலையில் நின்று நிக்கிரகம் செய்யும்பொழுது அவனை நல்லவனென்று எப்படிச் சொல்லமுடியுமென்று பலர் ஐயுறுகின்றார்கள். இவர்களுக்குச் சிவஞான சித்தியார்,

"நிக்கிர கங்கள் தானு நேசத்தா லீசன் செய்வ
தக்கிர மத்தாற் குற்ற மடித்துத் தீர்த்
தச்சம் பண்ணி
இக்கிர மத்தினாலே யீண்டற மியற்றி
டென்பன்
எக்கிர மத்தினாலு மிறைசெய லருளே
யென்றும்


என்று தெளிவு தருகிறது.

நல்லவர்களிற் சிறந்தவர்கள் குழந்தைகள்: குழந்தைப் பருவம், மாசு படியாதது. பட்சபாதம் பற்றாதது. விருப்பு வெறுப்புக்களில் அழுந்தாதது. இத்தகைய சேயைவிட நல்லவன் சிவன் என்று சொல்லி அவன் நமக்குச் செய்வன அனைத்தும் மாசு நீங்கியதும், பட்சபாதத்தால் அமையாததும், விருப்பு வெறுப்புகளுக்கு உட்படாததும் ஆகும் என்பதை இங்கே ஆசிரியர் உணர்த்தியருளுகின்றார்.

மக்களில் இறைவனிடத்து அன்பு செய்கின்றவர் ஒருவகையினர். இறைவனோடு எவ்வகையிலும் தொடர்பில்லர்தவரென்று தம்மை எண்ணிக் கொண்டு ஒதுங்கி வாழ்பவர் மற்றொரு வகையினர். இவ்விருவரது நற்பேற்றிலும் இறைவனுக்கு ஏற்றத்தாழ்வில்லாத ஒரேபடித்தான இச்சையே இருக்கும். என்றாலும் மெய்யன்பர்களுக்கு உதவி செய்வதில் மிகமிக அண்மையாளனாகவும், மற்றவர்களுக்கு உதவுவதில் அவர்களது நிலைகளுக்கேற்பச் சேய்மையாளனாகவும் அவன் இருப்பான். இதனை "நல் அன்பர்க்கு அணியன்" என்பதனால் உணரவைத்தார்.

உலகில் 'தாயன்புக்கு இணையானது வேறொன்றுமில்லை'' என்பதை நாமறிவோம். ஆனால் ஒரு பிறப்பில் ஓழிந்துபோகின்ற உடலின் தொடர்பு பற்றி உண்டாகின்ற தாயன்பை நோக்க எல்லாப் பிறப்புகளிலும் பிறப்பு நீங்கிய பின்னரும் நிலையாயிருக்கும் உயிரின் தொடர்பு பற்றி உண்டாகும் இறையன்பு எவ்வளவு மேலானதென்பது ஊன்றிச் சிந்திப்பவர்களுக்கல்லாமல் மற்றவர்களுக்கு எங்ஙனம் விளங்கும்? தவந்தரும் ஞானத்தோர்கள் உணரும் தாயினும் நல்ல இறைவன் தன்மையைப் பாடலின் இறுதிப் பகுதியில் காண்கின்றோம். *





ஸ்ரீரங்கம் கோயிற் சிற்பங்கள்

# நூல்கள் - அறிமுகம்

## I 1. விக்கிரக ஆராதனை விளக்கம்.

இந்நூல்கள் இரண்டும், மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம் 291-ஆவது குருமகா சந்நிதானம் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால், இயற்றி வெளியிடப் பெற்றவை. இவ்விரு நூல்களும் இக்கால நிலையில், நமது சமய வளர்ச்சிக்கும் விளக்கத்திற்கும் பெரிதும் துணை செய்யும் சிறப்புடையனவாகும்.

விக்கிரக ஆராதனை விளக்கம் என்னும் நூலில், கடவுளுக்குத் திருவுருவம் உண்டு; கடவுள் நம் பொருட்டு அருளால் திருவுருவம் தாங்கியருள்கின்றார்; விக்கிரக வழிபாடு குறைவுடைய தன்று; திருக்குரான், விவிலியம் போன்ற பிற சமய வேதங்களிலும் கூடக் கடவுளுக்கு உருவம் உண்டு என்பது விளக்கப் பெற்றிருக்கின்றது; கருங்கல்லாலும் செங்கல்லாலும் விக்கிரகங்கள் அமைக்கப் பெறுவது விஞ்ஞானத்திற்கு ஏற்புடையதே; பிரதிஷ்டை செய்யப் பெறுவதன் மூலம் அவைகள் தெய்வீக சக்தியைப் பெறுகின்றன; விக்கிரக ஆராதனை சம்பந்தமாகப் புகழ்ந்து, ஆங்கிலேயர்களில் இறந்தவர்களும் சான்றுகள் தருகின்றனர்; சிவலிங்க வழிபாட்டின் விளக்கம்; சிவலிங்க வழிபாட்டால் பிரம்மகத்தி முதலிய பாவங்களும் நீங்கும்; இறந்த பின்னும் உயிர் உண்டு; விண்ணுலகத்தவர் மண்ணுலகத்திற்கு வந்து பேசுதல்; இறைவனின் திருமூர்த்தங்களும் அவதாரங்களும் பற்றிய உண்மைகள்; தெய்வ நிந்தனையால் வரும் கேடு; சைவ வைணவ சின்னங்களின் விளக்கம்; திருநீறு உருத்திராக்கம் வில்வம் துளசி குங்குமம் முதலியவற்றின் சிறப்புகள் ஆகிய பற்பல செய்திகள், மிகவும் அழகுற ஆராய்ந்து கற்போர் மனத்திற் பதியும்படி தெளிவுற விளக்கப் பெற்றிருக்கின்றன. விலை ரூபா. 0.50

## 2. சிந்தனையாளர்களது கேள்விகளுக்குத் தெளிவுதரும் விளக்கங்கள்.

சிந்தனையாளர்களின் கேள்விகளுக்குத் தெளிவுதரும் விளக்கங்கள் என்னும் நூலில், இறந்த பின்னும் உயிர் உண்டு; இறந்தவர்களோடு நாம் பேச முடியும்; இவ்வுலகில் நாம் செய்யும் நல்வினை தீவினைகளுக்கேற்ப, இறந்த பின்பு நாம் இருள் உலகிலோ ஒளி உலகிலோ இன்ப துன்பங்களை அடைவோம்; இந்துக்களின் ஆகமங்களிலும் சிற்ப நூல்களிலும் விவரிக்கப்படும் மூர்த்திகள் மேலுலகங்களில் அன்றும் இன்றும் என்றும் இருப்பவர்களே யாவர்; நமது பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டிருக்கிற விசேஷ தினங்கள் எல்லாம், அந்தந்த நாட்களில் மேலுலகங்களில் கொண்டாடப்படும் வைபவங்களே யாகும்; நாம் எந்த மூர்த்தியை வணங்கிப் பிரார்த்திக்கின்றோமோ அந்த மூர்த்தி நாம் நினைப்பதையும் சொல்வதையும் செய்வதையும் தெரிந்து கொள்ளக் கூடியவராகவும், நம் வழிபாட்டை ஏற்றுக் கொள்ளக் கூடியவராகவும் விளங்குகின்றார்; அவர் நமது கஷ்ட நஷ்டங்களை மனித வடிவத்திலோ, அல்லது தமது திருநாமத்தைக் கொண்ட மனிதர்களை அதிட்டித்தோ வந்து அனுக்கிரகம் புரிகின்றார் என்பன போன்ற பல செய்திகள், ஆராய்ச்சி முறையில் விஞ்ஞான பூர்வமாக நன்கினிது விளக்கப் பட்டுள்ளன.

ஆசிரியர் இவ்விரு நூல்களிலும், திருக்குரான் விவிலியம் போன்ற பிற சமய வேத நூல்களையும் ஆராய்ச்சி செய்து, பல அரிய உண்மைகளை விளக்கிச் சான்றுகள் காட்டியுள்ளார். மறுமைவாழ்வு அல்லது ஆவி உலகம் பற்றி மேலை நாட்டு அறிஞர்கள் வியத்தகு முறையில் வெளியிட்டு வரும் ஏராளமான பல அரிய நூல்களையும் ஆராய்ந்து நன்கு பயின்று, அவற்றின் உண்மைகளைத் தம்முடைய நடைமுறை அனுபவங்களாலும் தெளிந்து ஆசிரியர் விளக்கி யிருக்கின்றார். சமய

உணர்வும் நம்பிக்கையும் பற்றும், இவ்விரு நூல்களையும் படித்துணர்பவர்கள் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. விலை ரூபா. 0.50

சுவாமிகள் இவைகளையே யன்றி வேறு பல சிறந்த நூல்களையும் இயற்றி யுள்ளார்கள். படிப்பவர்களுக்குப் பெரிதும் பயனும் தெளிவும் விளைவிக்கக் கூடிய அந்நூல்களும் பின்வருமாறு:-

| | | விலை. |
|---|---|---|
| 1. | இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும் | 2.50 |
| 2. | மரண பயம் தீரும் வழி | 0.50 |
| 3. | இந்துமதக் கொள்கைகளையே கிறிஸ்தவ வேத நூலும் ஏசுநாதரும் உணர்த்தியிருப்பதன் விளக்கம் | 0.50 |
| 4. | இந்தியாவும் உலக சமாதானமும் | 0.10 |
| 5. | Delhi Address on The Soul and the Spritual Body | 0.25 |

இந்நூல்கள் அனைத்தும் ஒவ்வொரு இந்துவும் இன்றியமையாது படித்துப் பயனடைய வேண்டிய மிகவும் சிறந்த நூல்களாகும்.

— ஆசிரியர்.

---

## II. தேசீய இலக்கியம் :—

இந்நூல் 'செந்தமிழ் வித்தகர்' திரு. அ. ச. ஞானசம்பந்தனுர், M. A. அவர்களால் எழுதப் பெற்றது. திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணத்தினைச் சமய இலக்கியம் என்று மட்டுமே, பெரும்பாலும் பலர் அறிந்திருப்பர். அதனைத் தேசீய இலக்கியம் என்று புதிய நோக்கில், ஆராய்ச்சி முறையில் ஆசிரியர் விளக்குகின்றார். ஆசிரியரின் சமய ஊற்றமும், இலக்கிய ஆராய்ச்சித்திறனும், புலமைச்சிறப்பும், புதிய இனிய கருத்து வளமும், இந்நூலிற் சிறப்புற விளங்குகின்றன. இக்கால நிலைக்கு ஏற்பப் பெரிய புராணத்தின் சிறப்பு, எளிய இனிய தெளிவான நடையில், விளக்கப் பெற்றுள்ளது. அனைவரும் படித்துப் பயன் பெறத்தக்க, சிறந்த நல்ல ஆராய்ச்சி நூல். 266 பக்கங்கள் கொண்ட கண்கவரும் வனப்பு மிக்க பதிப்பு.

கிடைக்குமிடம் :— சேகர் பதிப்பகம், 30, போஸ்டாபீஸ் தெரு, சென்னை-1.

விலை: ரூபா. 6/-

## III. திருவாய்மொழி, தெளிவுரை :—

இந்நூல், நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய் மொழியின் பாசுரங்களின் இனிமையினையும், அவற்றின் பொருள் நுட்பங்களையும், யாவரும் மிக எளிதாக அறிந்து கொள்ளும் முறையில், பேரறிஞர் திரு. பி. ஸ்ரீ ஆசாரியா அவர்கள் எழுதிய எளிய தெளிவான உரையுடன், வெளியிடப் பெற்றிருக்கிறது. திருவாய் மொழிக்குச் சம்பிரதாய முறையில், பூர்வாசாரியர்கள் அருளிச் செய்த பலவகை வியாக்கியானங்கள் உண்டு. அவைகள், மிகவும் கற்ற புலவர் பெரு மக்களுக்கே யன்றி, மற்றையோர்க்கு எளிதில் விளங்குவன அல்ல! ஆதலின் ஆசிரியர் அவர்கள், பாடல்களை முதலில் பழைய முறையில் பதிப்பித்தும், பின்னர் அவற்றின் சொற் பொருள்கள் விளங்கத் தனித்தனியே நன்கினிது பிரித்துக் காட்டியும், அவற்றிற்குப் பதவுரைகள் வரைந்தும், நல்ல இனிய தமிழில் இந்நூலை இயற்றி உதவியுள்ளார். திருவாய்மொழியில் 250 பாடல்களுக்குத் தெளிவுரை அமையப் பெற்ற முதல்பாகம் இது. ஏனைய பாகங்களும் விரைவில் வெளிவரும். 500-க்கு மேற்பட்ட பக்கங்கள்; கண்கவரும் வனப்பு மிக்க பதிப்பு! கிடைக்குமிடம்:— சேகர் பதிப்பகம்; 30, போஸ்ட் ஆபீஸ் தெரு, சென்னை-1. விலை ரூபா. 4/-.

## IV. ஸ்ரீ கந்த புராணம்: வசனம் :—

கந்தபுராணம் என்னும் காப்பியப் பெருங்கடலில் நீந்தி மூழ்கித் திளைத்து இன்புறுதல் பெரிதும் கற்றோர்க்கே அன்றி, மற்றோர்க்கு எளிதில் இயல்வதன்று. ஏறத்தாழப் பதினாயிரம் பாடல்களுக்கு மேற்பட்ட கந்தபுராண வரலாற்றினை, யாவரும் எளிதினிது படித்துப் பயன் பெறுவதன் பொருட்டு, வசன நடையில் இதனைத் திரு. துர்க்காதாஸ். எஸ். கே. சுவாமி அவர்கள், சுவைமிக எழுதி யுதவியிருக்கின்றார். பொதுமக்கள் அனைவரும், சிறப்பாகத் தமிழன்பர்கள் எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டிய சிறந்த நல்ல நூல். திருத்தமான நல்ல பதிப்பு. பக்கங்கள் 330. கிடைக்குமிடம்:— இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை-4. விலை ரூபா. 2/-.

## V. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு :

இந்நூல் சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்களால் எழுதப் பெற்றது. இராமலிங்க அடிகள் வரலாறு பற்றிய பலதிறக் குறிப்புக்களையும் ஆராய்ந்து, சிறப்புறத் தொகுத்துத் தந்து விளக்கியுள்ளார் ஆசிரியர். இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாப் பாடல்களை மட்டுமேயன்றி, அவர் எழுதிய வசன நூற் பகுதிகள், கடிதங்கள் முதலிய பலவற்றையும் தேடித்துருவி ஆராய்ந்து, ஆசிரியர் இந்நூலைச் சுவைமிக எழுதியுள்ளார். இக்கால நிலைக்கு ஏற்ப, இராமலிங்கரின் சிறப்பும் அருமை பெருமைகளும் இதன்கண் இனிது விளக்கப்பெற்றுள்ளன. திரு. ம. பொ. சி. அவர்களின் சிறந்த நூல்களுள் தலையாயது என்று இதனைக் குறிப்பிடலாம். அனைவரும் படித்து மகிழத்தக்க நல்ல நூல். பக்கங்கள் 520. பொருளகராதி ஒன்றும் சேர்க்கப் பெற்றிருக்கிறது. கிடைக்குமிடம்:— இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை-4. விலை ரூ. 3/-.

## VI. ஆதி சங்கரர் விஜயம் :

இந்நூல், இந்திய நாட்டின் தலை சிறந்த தத்துவ வித்தகரும், மதாசாரியரும் ஆகிய ஸ்ரீ ஆதி சங்கரர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை, ஆராய்ச்சி முறையில் சிறப்புற விளக்குகின்றது. நூலின் பிற்பகுதியில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் வரலாறும் தரப்பெற்றுள்ளது. அதனை அணிசெய்து விளங்கிய 66 பீடாதிபதிகளைப் பற்றியும், 67-ஆம் அதிபராக விளங்கி வரும் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்களைப் பற்றியும், பல குறிப்புக்கள் தொகுத்துத் தரப்பெற்றிருக்கின்றன. 'ஆதி சங்கரர் பேசுகிறார்,' 'சங்கரர் பொன் மொழிகள்' என்னும் தலைப்புக்களில், சங்கரரின் உபதேசங்களுள் முதன்மையான சிலவற்றைத் தொகுத்துக் கொடுத்திருப்பது, மிகவும் பயன் தரக் கூடியது. ஆதி சங்கரரின் வரலாற்று விவரங்களை அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைபுரியவல்ல சிறந்த நூல். சுமார் 200 பக்கங்கள் கொண்டது. கிடைக்குமிடம்:— இன்ப நிலையம், மயிலாப்பூர், சென்னை-4. விலை ரூ 1.25.

—ஆசிரியர்.

# ஞான சித்தர்களும், சித்த மருந்தும்

**திரு. வி. பலராமையா அவர்கள், பி.ஏ.பி.எல்.,**
பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட், சென்னை-8.

முன் கட்டுரையில் பரமவித்தை யென்னும் சாகாக்கலையைப் பற்றிக்குறிப்பாக எழுதியுள்ளோம். சிதாகாசம் என்னும் பிரம்மரந்திரத்திலிருந்து, அமுதம் என்னும் இறவா மருந்தைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தோம். இந்த சிதாகாசமென்றகோவிலுக்கு ஓர் கதவு உண்டு. அதைத் திறந்தால் அமுதம் சொட்டும். அதை உண்ண உண்ண நரைதிரை மாறி நமனும் அங்கில்லை யென்பதைப் பற்றியும் படித்தோம். அதைச் சித்தர்களின் அருள் வாக்குமூலம் நாம் அறிந்துகொள்வது நலமெனத் தோன்றுகிறது. அந்த அமுதம் கிடைக்குமிடம், அதை உண்ணில் என்ன பயன்கள் கிட்டுமென்பனவற்றை **வள்ளலார், திருமூலர்** முதலிய பெரியோர்கள் சொல்வது குறிப்பிடத் தக்கது. வள்ளலார் இந்தஅமுதத்தை உண்டு என்ன பயன் பெற்றாரென்பதைக் கீழ்க் கண்ட செய்யுள் விளக்கும்.

"கடல் கடந்தேன் கரையடைந்தேன் கண்டு கொண்டேன் கோயில்
கதவு திறந்திடப் பெற்றேன் காட்சியெல் லாங் கண்டேன்
அடல் கடந்த திருவமுதுண் டருளொளியா லனைத்தும்
அறிந்து தெளிந் தறிவுருவாய் அழியாமை யடைந்தேன்
உடல் குளிர்ந்தேனுயிர் கிளர்ந்தேனுள்ள மெலாந் தழைத்தேன்
உள்ளபடியுள்ள பொருளுள்ளவனாய் நிறைந் தேன்
இடர் தவிர்க்குஞ் சித்தியெலாமென் வச மோங்கினவே"

வள்ளலார் சொல்லும் கோயிலின் கதவு. மனிதனால் ஆக்கப்பட்ட மரக்கதவு அல்ல, தன்னுள்ளிருக்கும் கதவையே அவர் குறிப்பிடுகிறார். அந்தக் கதவு திறந்தது! காட்சியெல்லாம் புலப்பட்டது. திருவமுது சொட்ட ஆரம்பித்தது. அதை உண்டார். உடல் குளிர்ந்தது. உயிர் கிளர்ந்தது. சித்தியெலாம் அவர் வசம் ஓங்கின.

இந்த அமுதமே சுத்த **கங்கை!** இதுவே **பகீரதன்** வெகு பிரயாசையுடன் சிவன் முடியிலிருந்து இறங்கிய கங்கை. சிதாகாசத்திலிருந்து சொட்டும் இந்தக் கங்கையே மரணமிலாப் பெருவாழ்வுக்கு நம்மை உய்ப்பிக்கும். பாபங்களெல்லாம் போக்கும்.

மண்ணும், கல்லும், சாக்கடை நீரும், ஒன்றும் பாதியுமாய்ச் சுட்டுத் தள்ளிய பிணங்களும் கலந்த கங்கா நதியில் மூழ்கி முத்தி பெற முடியுமா? அதை உண்டு பாபங்களைத் தொலைக்க முடியுமா?

மேற் சொன்ன வாசல், கோயில், என்பவை யென்ன? என்பது திருமந்திரத்தில் பார்க்கத் தக்கது. அந்த வாசல் திறந்து பார்ப்பதற்குப் புலனைந்தும் மணி விளக்கென்கிறார் திருமூலர். அந்த சிதாகாசம் உச்சியிலுள்ள தென்கிறார். மூலத்தைக் கண்டவராகையால் அவர் திருமூலர் ஆனார்.

'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புல னைந்தும் காளாமணி விளக்கே''

''தலையடியாவ தறியார் காயத்தில்
தலையடி உச்சியில் உள்ளது மூலம்
தலையடி யான அறிவை யறிந்தோர்
தலையடி யாகவே தானிருந் தாரே''

இந்த அமுதம் என்ற சிவநீர் எப்படி வருகிற தென்பதைத் திருமூலர் சொல்லுகிறார்.

"விந்துவும் நாதமும் மேவியுடன் கூடி
சந்திர னோடே தலைப்படு மாயிடில்
அந்தர வானத் தமுதம் வந்தூறிடும்
அங்குதி மந்திரம் ஆகுதி யாகுமே"

இந்த சிவநீரைப் பருகும் மார்க்கத்தைக் காட்ட வல்லவர்கள் யாராவது இருக்கிறார்களா? அவர்கள் எங்குள்ளார்கள்? என்ற கேள்விகள் நமக்குள்ளே உதிக்கக்கூடும். "எந்தரோ மகானுபாவலு" என்று **தியாகய்யா** சொன்னபடி எத்தனையோ சித்த பிரான்கள் நம்மிடையே உலாவுகின்றனர். அவர்களிருந்தால் மட்டும் போதுமா?

இந்த சிவநீர் பருகும் மார்க்கத்தைக் காட்டவல்ல பெரியார் ஒருவர் 80 மைலுக்கப்பாலிருக்கின்றார். வாருங்கள்! போய்ப் பார்த்துவிட்டு வரலாமென்று சிவநீர் பருக ஆசைப் படும் நண்பரிடம் நாம் சொன்னோமானால், அவர் சொல்லும் பதில் இது. "வருகிறேன்! வியாபாரம் தொடங்கி ஒரு மாதந் தானாயிற்று. அதுவுமன்றி என் மனைவிக்கு உடல் நலமில்லை. அந்தப் பெரியார் இருக்குமிடம் வரை கார் போகுமா? அவர் நாம் கேட்கும் கேள்விகளுக் கெல்லாம் பதில் சொல்வாரா? அவ்விடத்தில் சாப்பாட்டுக்கு வசதியுண்டா? மாலை காபி இல்லாவிடின் தலைவலிக்குமே! கூட்டம் அங்கு நிறைய இருக்குமா? கூட்டமென்றால் எனக்குக் கிஞ்சித்தும் பிடிக்காதே?" என்றெல்லாம் சரமாரியாக நம்மைக் கேள்விகள் போடுவார்கள்.

இப்படிப் பட்டவர்களுக்கா, அப்பெரியார்களின் கோயில் கதவு திறக்கும்? இவர்களுக்கா அவர்கள் சாவியைக்கொடுப்பார்கள். யோசித்துப் பாருங்கள். இராமலிங்க வள்ளலார் பரமபத நாட்டினுக்குப் போகும் நெறியைக் காட்டுகிறேன் வாருங்கள் என்று கூவிக் கூவி அழைத்தார். ஆனால் மக்கள் அவருக்கு என்ன பதில் கொடுத்தார்கள்? என்பதை வள்ளலாரே சொல்லுகிறார் பாருங்கள்.

"திருந்த முடையோர் கருணையாலிந்த வுலகில்
தியங்குவீரழியாச் சுகம்
சேருலகமாம் பரமபதமதனை யடையு நெறி
சேரவாருங்க ளென்றால்
இருத்தினிய சுவையுணவு வேண்டும் மணி
யாடைதரும்
இடம் வேண்டும் இவைகளெல்லாம்
இல்லையாயினும் இரவு பகலென்ப தறியாமல்
இறுகப் பிடித்த ணைக்கப்
பெருந்த முலையோடு இளம்பருவ முடன்
அழகுடைய
பெண்ணகப்படு மாகிலோநீர்
பேசிடும் பரமபத நாட்டினுக்குநும்
பிறகிதோ வருவ மென்பார்"

ஆகவே மக்கள் வேண்டிய பரமபத நாடு எத்தகைய தென்பதைப் பச்சையாகச் சொல்லி விட்டார். அமுதம் சாப்பிட எல்லோருக்கும் ஆசைதான். விலைக்குக் கிடைத்தால் பணம் பெற்றவன் வாங்கி, உட்கார்ந்த இடத்திலேயே உண்டு விட்டு உடலைத் தேற்றிக் கொண்டு பல மனைவிகளை மணந்து கொள்வான். ஏழைகள் வயிற்றில் நெருப்புப் போட்டுக் கள்ள மார்க்கெட்டு பணம் சம்பாதிப்பான். ஆனால் இந்த சிவநீர் அப்படிப் பட்ட நபருக்குப் பலகோடி மைல் தூரத்தில் ஓடி ஒளிந்து கொள்ளும். களங்கமற்ற உள்ளத்தில் குடிகொள்ளும் நீரே சிவநீர். கைலையங்கிரியாகிய சிதாகாசத்திலுள்ளது இந்த கங்கை.

(தொடரும்)

## கோயில் நிகழ்ச்சிகள்

**திருக்கல்யாண உற்சவம்:**

ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாள் தேவஸ்தானம், நாச்சியார்கோயில்.

**வார வழிபாட்டு நிகழ்ச்சி:**

அப்பர் அருள்நெறிக் கழகம், ஆடுதுறை; தென்குரங்காடு துறையில் பெரிய புராண விரிவுரை, குடந்தை பண் ஆராய்ச்சி வித்தகர் திரு. ப. சுந்தரேசன் அவர்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

# உள்ளுறை பொருள் ஆராய்ச்சி

மகாவித்வான் ஸ்ரீமத் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சீபுரம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

3. உணவு விஷயத்தில் பிறர்கை பார்த்திருக்குந்தன்மை வ்ருஷபத்திற்கும் எம்பெருமானுக்கும் ஒக்கும். எம்பெருமான் அர்ச்சாவதாரத்தில் உணவைப் பிறர்கை பார்த்திருக்கின்றான். விபவாவதாரத்திலும் "வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும்போது ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் பத்தவிலோசனம்" என்ற நாச்சியார் திருமொழியின்படியே, பத்தவிலோசன முனிவர் பெண்டிர்கையை எதிர்பார்த்திருந்தான்.

4 வ்ருஷபத்திற்கு மாடு என்று பெயர். உலகில் அறிவிலிகளை மாடே! என்று வசை கூறுதல் வழக்கம். எம்பெருமானும் அறிவிலியென்றே கூறப்படுகிறான்; ஸஹஸ்ரநாமத்தில் அவிஜ்ஞாதா என்று ஒரு திருநாமம்; அறியாதவன் என்றே இதற்குப் பொருள். ஸர்வஜ்ஞனை எம்பெருமானை அவிஜ்ஞாதா என்னலாமோ வென்று கேள்வி பிறக்கும். அவ்விடத்தில் பட்டர் டையருபாஷ்யத்தில் வெகு அழகாகப் பொருள் நிர்வஹிக்கப்பட்டுள்ளது. "அவிஜ்ஞாதா ஹி பக்தாநாம் ஆகஸ்ஸு கமலேக்ஷண:" என்பது நிர்வசநம். பக்தர்களின் அபராதங்களில் அறிவு இல்லாதவன் எம்பெருமான். கூரத்தாழ்வானும் வரதராஜஸ்தவத்தில் "உபாலம்பாயம் போ:! ச்ரயதி பத! ஸார்வஜ்ஞ்யமபி தே யதோ தோஷம் பக்தேஷ் விஹ வரத! நைவாகலயஸி." என்று இந்த அவிஜ்ஞாத்ருவத்தையே வியாக்யானித்தருளினர். எம்பெருமான் பக்தர்கள் குற்றங்களை அறியாதவனாகவே யிருந்திட்டால் அவற்றைப் போக்யமாகக் கொள்ளுகிறானென்பதற்கு அவகாசமேது? என்கிற சங்கையும் இங்கு உதிக்கும்; இதற்கு ச்ருதப்ரகாசிகையில் பரிஹாரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. என்ன தெரிவிக்கப்படுகின்றதென்றால், எம்பெருமான் பக்தர்களின் குற்றங்களில் கண் செலுத்தமாட்டான்; ஒருகால் கண் செலுத்தினாலும் அவற்றை நற்றமாகவே கொள்வன் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆகவே எம்பெருமானுக்குச் சொல்லுகிற அவிஜ்ஞாத்ருத்வம் பர்வபேதேந உபபந்நம்.

5. வ்ருஷபம், பழகிக்கொண்டே இருக்கிறவர்களிடத்திலும் கறுவுதல் உண்டானால் முட்டித் தள்ளும்; எம்பெருமான் படியும் இப்படியே; "சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்." என்ற பெரியாழ்வார் திருமொழி இங்கு அநுஸந்தேயம். மாலிகன் என்பானொருவன் கண்ணபிரானுக்கு உயிர்த்தோழனாய் அப்பிரானிடத்தே பலவகை ஆயுதங்களையும் பயின்று ஒருவர்க்கும் அஞ்சாமல் அஹங்காரியாய் ஸாது ஜனங்களை ஹிம்ஸித்துக் கொண்டிருக்க, கண்ணபிரான் 'நண்பனாகிய இவனை நாம் கொல்வது தகாதே! என்ன செய்யலாம்' என்று வியாகுலப்பட்டு ஒருநாள் அவனை நோக்கி 'நீ இப்படிச் செய்வது தகாது' என்ன, ஆஸுரப்ரக்ருதியான அந்த மாலிகன் தன் வாயில் வந்தபடி பிதற்றி 'நீ எல்லா ஆயுதங்களையும் எனக்குக் கற்பித்தும் சக்ராயுதப் பயிற்சி மாத்திரம் செய்வில்லையே' என்று கண்ணன்மேற் குறைகூற, 'இதில் பழகுவது உனக்கு முடியாது, என்று கண்ணன் கூற, 'எனக்கு முடியாதது மொன்றுண்டோ! நீ அவசியம் அதைக் கற்பிக்கவேணும்' என்ன, கண்ணன் இதுதான் தக்க சமயம் என்று திருவுள்ளத்திற் கொண்டு சக்ராயுதத்தை யெடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையிலேற்க, இது உனக்கு அரிதே' என்று கண்ணன் சொல்லவும் அதை அவன் கேளாமல் சக்ராயுதத்தை. வாங்கிச் சுழற்றி யெறிந்து பிடிப்பதாக நினைத்துத் தன் கைவிரலைக் கழுத்துக்கு அடுத்ததாக வைத்து நிற்க அச்சக்கரம் சுழன்று வருவதற்கு இடம் போதாமையாலே அதன் வீச்சு இவன் கையிற்பிடி படாமல் இவன் தலையை அரிந்து விட்டதென்பது இங்குக் குறித்த வரலாறு.

6. வ்ருஷபம், காசு கொடுத்து வாங்கிவிட்டால் நம் வீட்டையே நாடிவரும்; —“பக்திக்ரீதோ ஜநார்த்தந:” என்கிறபடியே பக்தியாகிற விலையினால் எம்பெருமானைப் பெற்றுவிட்டால் அவனும் நம்மையே நாடி நிற்பன். “எங்கும் பக்க நோக்கறியான் என் பைந்தாமரைக் கண்ணனே” என்கிறபடியே வேறொருரிடம் புரிந்து பாரான். கனிவார் வீட்டின்பமா யிருப்பன்.

7. வ்ருஷபம் பிறர்க்கு உழைப்பதையே இயற்கையாகவுடையது. எம்பெருமான் படியுமிதுவேயாம்: தூது செல்வதும் தேரில் பாகனாய் நிற்பதும் மனிதர்க்காய் நாட்டில் பிறந்து படாதனபடுவதும் காண்க. “ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி நசாஸ்பதம், ததாபி புருஷாகாரோ பக்தாநாம் த்வம் ப்ரகாசஸே.” (ஜிதந்தே ஸ்தோத்ரம்) என்றபடியே எம்பெருமானுடைய ஸகலமும் பிறர்க்கேயாயிருக்கும். “இமௌ ஸ்ம முனிசார்த்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ, ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவகிம.” (ஸ்ரீராமாயணம்) என்ற தாச்ரதிகளின் சொல்லழகும் நோக்குக.

8. வ்ருஷபம் பாரத்தை வஹிப்பதற்கென்றே பிறக்கும். எம்பெருமானும் பக்தர்களின் யோகக்ஷேமபாரங்களை வஹிப்பதிலேயே குதூஹலமுடையவன். “யோக க்ஷேமம் வஹாமி அஹம்” என்றே கீதையில் அருளிச் செய்கிறான்.

இவ்விடத்தில் ஒரு கதை:--சாஸ்த்ர விச்வாஸமுடைய ஒரு ஸ்வாமி “யோக க்ஷேமம் வஹாம் யஹம்” என்கிற பகவத் ஸூக்தியில் நிச்சலமான அத்யவஸாயமுடையவராய் தேஹயாத்திரைக்காகத் தாம் ஒரு முயற்சியும் செய்யாதவராய் இருந்து வந்தார். எம்பெருமானும் அவருடைய அத்யவஸாயத்திற்குப் போரவுகந்தருளிப் பல வகைகளாலே அவருடைய யோக க்ஷேமபாரங்களைத் தானே நிர்வஹித்து வந்தான். இப்படி வருகையில் அவருடைய அத்யவஸாயத்தை இன்னமும் சிறப்பிக்கத் திருவுள்ளம் பற்றிய எம்பெருமான் சில நாள் ஔதாஸீந்யத்தை அவலம்பித்திருந்தான். அவரும் பட்டினிகிடக்க நேர்ந்தது. ஆனாலும் பிறரிடம் சென்று யாசிக்க விரும்பவில்லை. பகவத் கீதை ஓலை ஸ்ரீகோசத்தை யெடுத்து “யோக க்ஷேமம் வஹாம்யஹம்” என்ற விடத்துக் கரி பூசினார். மறுநாள் காலையில் அவர் அனுட்டானத்திற்காகத் தடாகம் சென்றிருக்கையில், மாதவன் ஒரு சிறு குமாரனாய் உதட்டில் கரிபூசிக்கொண்டு பல பல ஸம்பாரங்களை வைத்துத் தானே தலையில் சுமந்துகொண்டு வந்து அவருடைய திருமாளிகையில் முற்றம் நிறைய ஸம்பார மயமாகவே நிரப்பிக்கொண்டிருக்கிறான்; அவர் அனுட்டானத்தை முடித்துக்கொண்டு திருமாளிகையில் நுழைகையில் முற்றம் முழுவதும் அமுதுபடியும் பலவகை ஸம்பாரங்களுமாய் நிறைந்திருக்கிற படியைக்கண்டு தேவிகளை நோக்கி ‘இவையெல்லாம் ஏது?’ என்று கேட்க, அவளும் யாரோ ஒரு பையன் கொணர்ந்து கொணர்ந்து வைத்துப் போகின்றான்; நீங்கள் அனுப்பினதாகவன்றோ நான் நினைத்திருக்கின்றேன்’ என்றாள். அது கேட்ட அவர் ‘எனக்கு ஒன்றும் தெரியாதே; நான் குளத்திற்கன்றோ சென்று வருகிறேன்: அந்தப் பையன் யாவன்? எப்படியிருப்பான்?’ என்று கேட்டனர்; ‘இடைப் பிள்ளைபோல் தென்பட்டான். உதடெல்லாம் கரிபூசினபாயாய்க் கிடந்தது’ என்றாள். கரியென்கிற பேச்சுக் காதில் விழுந்தவுடனே தாம் பகவத்கீதை யேட்டில் கரிபூசினவிடத்தை யெடுத்துப் பார்த்தார். அங்குச் சிறிதும் கரியில்லை. ‘மாதவனுடைய மாயமே இது’ என அறுதியிட்டார். அந்தோ! பாவியேனுக்குச் சேவைதந்தருள லாகாதாவென்று ஆகாசத்தை நோக்கி அழுவதும் தொழுவதுமாய்த் துடித்தார்; உடனே சங்கும் சக்கரமும் சிரித்த முகமுந்தொங்கும் பதக்கங்களோடெங்கும் கண்டறியாத தோற்றமுடனே நங்கள் பிரான் தோன்றினன். “யோக க்ஷேமம் வஹாம்யஹம்” என்றவனன்றோ நான் என்று சோதி வாய்திறந்து பணித்தனனும். ஆகவே, மாதவனே பாரவாஹி.

9. வ்ருஷபம் எத்தனை யடிபட்டாலும் லக்ஷியம் பண்ணாது; எம்பெருமான் அடிபட்டதும் மஹாபாரதமன்றோ? “ஆங்கொருநாளாய்ப்பாடி, சீரார் கலையல்குல் சீரடிச் செந்துவர்வாய், வாரார்வனமுலையாள் மத்தாரப் பற்றிக்கொண்டு, ஏராரிடைநோவ எத்தனையோர் போதுமாய், சீரார் தயிர் கடைந்து வெண்ணெய் திரண்டதனை, வேரார்நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு, நாராருறியேற்றி நன்கமைய வைத்ததனைப் போரார்வேற்கண்மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம், ஓராதவன்போல் உறங்கி யறிவுற்றுத், தாரார் தடந்தோள்களுள்ளளவுங் கை நீட்டி, ஆராத வெண்ணெய் விழுங்கி,

அருகிருந்த மோரார் குடமுருட்டி முன்கிடந்த தானத்தே, ஓராதவன்போல் கிடந்தானைக் கண்ட வளும்; வாராத் தான்வைத்தது காணுள், வயிறடித் திங்காரார் புகுதுவார் ஐயரிவரல்லால், நீராமிது செய்தீரென்ருேர் நெடுங் கயிற்ருல், ஊரார்களெல்லாருங் காணவுரலோடே, தீராவெகுளியளாய்ச் சிக்கன ஆர்த்து அடிப்ப, ஆராவயிற்றிஞேடாற்ருதான்'' என்கிற சிறிய திருமடல் காண்க.

10. நிலத்தை யுழுவதற்கு வ்ருஷபம் முதல் ஸாதநம்; எம்பெருமான் "பத்தியுழவல்" என்று திருமழிசைப்பிரானும் " தம் த்வாம் க்ஷேமக்ருஷீவலம் ஹலதரம் '' என்று பட்டரும் பணித்த படியே பக்திக்ருஷிக்கு ப்ரதமஸாதநம். பக்தியாகிறபயிர்க்கு நெஞ்சு விளைநிலம்; "பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த கார்மர் மேனி நங்கண்ணன்" என்கிறபடியே அதற்கு க்ருஷி பண்ணுகிறவன் மாதவன். ஆசார்ய ஹ்ருதயத்தில் "பெரும் பாழில் க்ஷேத்ரஜ்ஞன் பெருஞ்செய்" இத்யாதி சூர்ணிகையிஞல் இவ்விஷயம் விசததமமாக அறியத்தக்கது.

11. வ்ருஷபம் நல்லவழிகளில் நன்ருகவோடும் ; சேற்று நிலம் கண்டால் தளரும். எம்பெருமானும் நன்னெறி நின்றவர்கள் பக்கலில் விரைந்து காரியம் செய்வன். மாய வன்சேற்றள்ளலில் படிந்தவர்களிடத்தில் தளர்ச்சி தோற்ற விருப்பன்.

இங்ஙனே மற்றும் பலவகைப் பொருத்தங்களும் உய்த்துணரத்தக்கன.

## 8. தெய்வவண்டு விசேஷார்த்தம்

நம்மாழ்வார் திருவாய்மொழியில் "தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு' என்ற விடத்தில் எம்பெருமானை வண்டாக அருளிச்செய்தார். "வண்டுகளோ வம்மின்'' "அறுகால சிறுவண்டே தொழுதேனுன்னை'' என்பவை முதலானவிடங்களில் வண்டாகச் சொல்லுகிறது பாகவதர்களையே யாதலால் அதுபற்றிய விசேஷார்த்தம் பிறகு மேலே (பக்கம் 31ல்) விவரிக்கலாகும், இப்போது தெய்வவண்டு விசேஷார்த்தம் கேண்மின்.

1. வண்டு ஸாரக்ராஹி யெனப்படும். கமல மலரிற்படிந்து அங்குள்ள ஸாரத்தை யெடுத்து ஜீவிக்குமது வண்டு. எம்பெருமான் 'போதிற் கமல வன்னெஞ்சம்'' என்றும், "பக்தாநாம் யத் வபுஷி தஹ்ராம் பண்டிதம் புண்டரீகம்'' என்றும் சொல்லப்படுவதான பக்தர்களின் ஹ்ருதய புண்டரீக மலரிற்படிந்து அங்குள்ள ஸாரத்தைக் கவர்ந்து களிப்பவனென்று ப்ரஸித்தம்.

2. வண்டு பத்மாபிநிவேசமுடையது; எம்பெருமானும் பத்மாபிநிவேசமுடையவன். (இது சிலேடை) பத்மமென்கிற தாமரையிலே வண்டுக்கு ஆவல். பத்மையான பிராட்டியினிடத்தில் அபிநிவேசம் எம்பெருமானுக் கென்று கண்டு கொள்வது.

3. சாகாஸஞ்சார முடைய்து வண்டு; எம்பெருமானும் அப்படிப்பட்டவனே. (இதுவும் சிலேடை). சாகை என்று கிளைக்கும் வேதங்களுக்கும் பெயர்; வண்டு கிளைகளிலே ஸஞ்சார முடையது; எம்பெருமான் வேதங்களிலே

4. வண்டு செவிக்கின்பமாகக் கீதம் பாடும். எம்பெருமானுமப்படியே. "குழலினுேசை செவியைப்பற்றிவாங்க'' என்றவை காண்க.

5. வண்டு ஜாதியில் ஒன்ருன வேட்டுவேளான் (குளவி) மிக அற்பமானதொரு புழுவைக் கொண்டு வைத்து ஊதித் தன்னுெடு ஒற்றுமை பெற்றதாக்கும்படியைக் காணுகின்ருேம். "குளவி தன்னிறமாக்கும்'' என்கிறபழமொழியும் ப்ரஸித்தம். எம்பெருமானும் "பொருளல்லாத வென்னைப் பொருளாக்கியடிமை கொண்டாய்'' என்றும், "தம்மையே நாளும் வணங்கித்தொழுவார்க்குத் தம்மையேயொக்க அருள் செய்வர்'' என்றும் சொல்லுகிறபடியே அவஸ்துவாய்க் கிடக்கிற ஆத்மவஸ்துவின் சிறுமைபாராதே தன்னுேடொத்த தாம் படி செய்தருளுமவன்.

6. வண்டு சோலைகளிலேயே சுழலமிடும். எம்பெருமானும் "வண்டின முரலுஞ்சோலை மயிலினமாலுஞ்சோலை கொண்டல் மீதணவுஞ் சோலை குயிலினங்கூவுஞ்சோலை. அண்டர்கோனமருஞ்சோலை யென்னும்படியான "ஆராமஞ் சூழ்ந்தவரங்கம்'' முதலான திருப்பதிகளிலேயே அநுரக்தன்.

7. வண்டு மதுவைப்பருகித் தென்னுவென்று முரலும். "தென்னுதெனுவென்று வண்டுமுரல்'' என்ருரே நம்மாழ்வார். எம்பெருமானும் தொண்டர்களின் அமுதவாக்கைப் பருகித் தென்னுவென்று தெருடாடுகிருனென்பதை நம்மாழ்வார் தாமே "பண்ணூர் பாடலின் கவிகள் யானுய்த் தன்னைத்தான்பாடித் தென்னுவென்னு மென்னம்மான் திருமாலிருஞ்சோலை யானே'' என்கிற பாசுரத்திஞல் காட்டியருளிஞர்.

இங்ஙனே மற்றும் பலவகையான உவமைப் பொருத்தங்களுங் கண்டுகொள்வது.

(தொடரும்)

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

ஸ்ரீ ரங்கத்திலே எழுந்தருளின உடையவர் பெரிய நம்பிகள் பரமபதித்த பின் கூரத்தாழ்வான் கதி யென்ன வாயிற்று என்று பரிவோடு வினவி யருள ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் ஆழ்வானுக் குற்றதை யெல்லாம் அடியிற்கண்டபடி பரக்க விண்ணப் பித்தார்.

ஸ்வாமீ! நேத்திரங்களில் ஏற்பட்ட புண் களோடு ஆழ்வான் ஸ்ரீ பராந்தகனிலே ஒரு வருட காலம் மிகவும் துன்புற்ருர். அவரை ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் கண்ணும் கருத்துமாகப் பராமரித்து வந்தார். புண் தீர்ந்த பின் அவ்வைஷ்ணவர் ஆழ் வான் திருவுள்ளப்படியே அவரை மெல்ல அழைத்து வந்து நம் பெருமாள் கோயிலிலே விட்டு மீண்டார். நாங்கள் எல்லோருமே மிகவும் வருந்தி நிற்க ஆழ்வான் பெருமாளை சேவிக்க மிகவும் துடித்தமை யால் அவரை மெல்ல உள்ளே அழைத்துச் சென் ருேம். ஸ்வாமீ! அப்போது கோயில் சேவை சம்பந்தமாக அந்தச் சண்டாளச் சோழன் ஒரு ஆணை பிறப்பித்திருந்தான். தேவரீர் அவதரித்த தன் காரணமாகத் தான் குழப்பங்கள் ஏற்பட்ட தாம். அதனுல் யார் யார் தேவரீருடைய திருவடி சம்பந்தி என்று கூறிக் கொள்கிருர்களோ அவர்கள் நம் பெருமாளை சேவிக்கக் கூடாது என்பது அக் கொடியவன் கட்டளை. இந்நிலையிலே நாங்கள் ஒப்புக்காக தேவரீர் சம்பந்தமில்லாதவர்கள் என்று வெளியே கூறிக்கொண்டே நம் பெருமாள் ஸேவை யைப் பெற்று வந்தோம். இச் சூழ்நிலையிலேதான் ஆழ்வானை உள்ளே கொண்டு சென்ருேம். அவரும் பலிபீடத்தருகே தெண்டனிட்டு "உன் திருவரு ளாலன்றிக் காப்பரிதால் முறையோ அரவணைமேல் பள்ளி கொண்ட முகில் வண்ணனே!" "வள்வா யலகால் புள் நந்துழாமே பொருநீர்த் திருவரங்கா அருளாய்!" என்று வாய் விட்டலறி வணங்கி 'எம்பெருமானே பெரிய நம்பியை ஏற்றுக் கொண் டது போன்று அடியேனையும் அங்கீகரித் தருள வில்லையே! 'என் பிழைத்தான் திருவடியின் தக வினுக்கு' என்றபடி அடியேன் தவறென்ன செய் தேன்! என்று வினவிக்கொண்டே உள்ளே புகலும் அங்கு நின்ற வாயிற்காவலன் சோழன் ஆணையைக் கூறி ஆழ்வானை விலக்க, எங்களில் சிலர் மற்றையர் போலல்ல இவர். ஆத்ம குணமுடைய இவரை உள்ளே போக விடுங்கள்" என்று கூறினர். ஆழ் வான் விஷயம் என்ன வென விசாரித்து நிலையைந் தெரிந்து திடுக்கிட்டு 'எல்லோர்க்கும் உள்ள ஆத்ம குணம் ஆசார்ய சம்பந்தத்துக்கு ஹேதுவாயிருந்தது. அது அடியேன் விஷயத்திலே அதனை அறுந்துக் கொள்ளக் காரணமாய் விட்டதா? நன்று நன்று. என்னுடைய பேற்றுக்கு எம்பெருமானுர் சம்பந்த மே அமையும். அதனையொழித்த பெரிய பெருமாள் திருவடி சேவை வேண்டுவதில்லை" என வெறுத்துக் கூறி உள்ளே செல்லாமலே வெளித்திரும்பி அன்றே திருமாலிருஞ்சோலைக்கெழுந்தருளிவிட்டார்" என்று கண்ணும் கண்ணீருமாக விண்ணப்பித்து நின்ருர். கேட்ட உடையவர் ஒன்றும் ஓடாது நின்ருர். பெருமாள் சேவையினும் நம் திருவடி சம்பந்தம் என்னும் அளவுக்கு ஆழ்வானின் ஆசார்ய பக்தி யிருந்தமை கேட்ட அவர் உடல் சிலிர்த்தது. ஆழ் வானை உடனே காண வேணும் என்ற ஆத்திரமும் மேலிட்டது. உடனே திருமாலிருஞ் சோலைக்கு ஓலை அனுப்பி ஆழ்வானை அழைக்க ஏற்பாடு செய்தார்.

சோலைமலையிலே சுந்தரத் தோளுடையான் சுடர் மிகுபதங்களையும், அம்மலையின் அழகுகளை யெல்லாம் ஆழ்வார்களும் அநுபவித்துப் பாடிய பாசுரங்களை எப்போதும் அநுஸந்தானம் செய்து உள்ளம் பூரித்து வாழ்ந்த கூரத்தாழ்வானிடம் உடையவர் கோயிலுக் கெழுந்தருளியுள்ளார் என்றும், அவரை (ஆழ்வானை) த்திருவரங்கத்துக்கு எழுந்தருளப் பண்ணிவருமாறு சாஸனம் (ஓலைக் கட்டளை) அனுப்பியுள்ளாரென்றும் ஸ்ரீ வைஷ்ணவர் கள் விண்ணப்பித்தனர். ஆழ்வான் உள்ளம் துள்ளியது. வெள்ளை சாத்தி மறைந்து போனதம்

ஆசார்யர் சென்ற திசை தெரியாது, அவர் திருமேனி நிலை தெரியாது தவித்த ஆழ்வானின் உள்ளம் மீண்டும் அவர் கோயிலேற எழுந்தருளியுள்ளார். தம்மைத் தகைந்த அரச கட்டளை தகர்ந்தது. தம்பேரில் எம் பெருமானர்க்குள்ள வாத்ஸல்யம் பூர்ணமாக உள்ளது என்றெல்லாம் கேட்டலுமே புதிய தெம்பு பெற்றது. ஆசார்யனது சாஸன் வரவை ஆசார்யன் வரவாகவே கொண்டார் ஆழ்வான். ஸ்ரீ வைஷ்ணவர் அனைவரையும் கோஷ்டியாகத் திரட்டினர். அனைவரும் எதிர் கொண்டு சென்று உடையவரின் ஓலையை வரவேற்று அதனைத் தலைக் கணியாகச் சூடி அதனுட் பொதிந்த பாசுரத்தைப் படிக்கக் கேட்டுத் தம் பக்கல் உடையவருக்குள்ள பரிவை உன்னிப் பாகாய் உருகினர்.

உடையவர் திருவடிகளை சேவிக்க வேண்டும் என்ற ஆத்திரம் கணத்திற்குக் கணம் பெருகியது ஆழ்வானுக்கு. நேரே அழகர் திருமுன்பு சென்றார். அழகரையும் பரமஸ்வாமியையும் பரவிப் பணிந்தார். ''தெள்ளியார் பலர் கைதொழும் தேவனர் வள்ளல் மாலிருஞ்சோலை மணாளனர் பள்ளி கொள்ளும் இடம்'' என்று தேவரீரை உரிமையோடு கைப்பிடித்தான் வாக்கின்படி தேவரீர் அரவணை மேல் பள்ளி கொள்ளும் திருவரங்கம் செல்ல விழைகின்றேன். விடை கொடுத்தருள வேண்டும் எம் பெருமானே!'' என்று மனமுருக வேண்டினர். அழகரும் மந்தகாசத்தோடு ஆழ்வானே! சென்று வாரும். தாய் வரவுணர்ந்த கன்று போன்று உம் உள்ளம் துடிப்பதை அறிந்தோம்.'' என்று அவருக்குத் தீர்த்தம் சடகோபன் முதலிய அளித்து விடை கொடுத்தருளினர். ஆழ்வானும் உள்ளத் துடிப்போடு வெகு விரைவிலே திருவரங்கம் சென்று உடையவரின் திருமடம் சேர்ந்தார்.

உடையவர் நம் பெருமாள் சந்நிதியிலே அரங்கனை வணங்கிப் பரவி,

"வன்பெரு வானகமுய்ய மண்ணுய்ய மண்
ணுலகில் மனிசருய்யத்
துன்ப மிகு துயரகலச் சுகம் வளர அக
மகிழும் தொண்டர் வாழ
அன்பொடு தென் திசை நோக்கி நீ கிடக்கத்
துயருளதோ ஆதி நாதா!"

"என்றடிபணிய, நம்பெருமாளும் இருபதம்
சென்னியில் பதித்து
சென்று நீ ஆழ்வான் திருநயனம் போய்
இருந்தனன் அவனிடைச் செறிந்து ஆங்
கொன்றிய கருத்தில் துன்பறத் தழுவி ஓங்கிய
அன்பர்களோடும்

இன்று நின் மடத்திற்கேகென இசைத்தான்.'

இத் தருணத்தே மடத்திலிருந்து வந்தோர் எம் பெருமானரிடம் திருமாலிருஞ் சோலைமலை நின்றும் ஆழ்வான் எழுந்தருளியிருக்கிறார் என்று செய்தி சொல்ல உடையவரும் உள்ளம் மகிழ்ந்து நம் பெருமான் ஆணையையும் வியந்து விரைவாக மடத்துக்கெழுந்தருளினர். மடம் சேர்ந்ததும் ஆழ்வான் இருந்த இடம் ஓடோடியும் சென்று ஆழ்வானை ஆரத்தழுவிக் கொண்டார் எம்பெருமானர். ஆழ்வான் நிலையைக் கண்ட உடையவர் உளம் கலங்கினர். ஒன்றும் பேச இயலவில்லை. ஒரே பொருமல் விம்மலாய்க் கண்களினின்று தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கினர். ஆழ்வானுக்கோ ஆசார்யனின் அன்பு கூர்ந்த அன்பின் பரவசம். ஆழ்வான் பேசாதது கண்டு உடையவர் திகைத்தார். உணர்ச்சி மேலீட்டால் ஸ்தம்பித்துள்ளார் என்று கொண்டு அந்நிலையை மாற்ற உன்னிப் பெரிய நம்பிகள் பரமபதித்து விட்டாரே! என்று உள்ளம் கரைய வினவினர். தம் நினைப்பை விட்டு ஆசார்யர் உளத்தை வேறொன்றில் திருப்ப வேண்டும் என்பதே ஆழ்வான் குறிக்கோள். நம்பிகளைப் பற்றிக் கூறியதுமே உடையவர் உள்ளம் நெகிழ்ச்சியுற்றது கண்டார். அவர் மனம் நைந்தது. தம்முடைய ஆசார்யன் பிரிவை உன்னி நைந்தார். சிறிது நேரம்தான், மீண்டும் உடையவர் உள்ளம் ஆழ்வானை நோக்கியது. ''ஆழ்வான்! என் உயிர் போன்ற உமக்கு இப்படி நேர்வதே! என்று அலறினர் உடையவர். ஆழ்வான் சாவதானமாகப் பதிலிறுத்தார். ஸ்வாமி! அடியேன் ஏதேனும் பெரிய அபசாரம் செய்திருக்க வேண்டும். ஏதேனும் ஒரு ஸ்ரீ வைஷ்ணவரின் திருமண் கோணலாயிருக்கிறது என்று கூறியிருப்பேன். அப்படிக் கண்ட கண்கள் துன்புற வேண்டியது தானே ஸ்வாமி!'' என்று கேட்டார் உடையவர். ஆழ்வானது பதில் அவரையே உலுக்கிவிட்டது. 'ஆழ்வான்' என்று மீண்டும் அவரைத் தழுவிந் தம் பூங்கரங்களால் அவரை உடலெங்கும் தடவி ஆழ்வானது மனத் துயரை மாற்றியருளினர். பின்னர் ஆழ்வானுக்கு,

தாம் வெள்ளை சாத்திச் சென்றமை துடங்கி மீண்டும் வந்து சேரும் வரை நிகழ்ந்த வற்றை யெல்லாம் ஒன்றொழியாமல் தாய் குழந்தைக்குக் கதை சொல்வதுபோல் அருளிச் செய்தார். ஆழ்வானும் எம்பெருமானார் கூறக் கூறக் கேட்டு மகிழ்ந்து உவகை மிக்குக்கண்ணீர் பெருக்கியிருந்தார்.

"மீண்டவன் கூரத்தாழ்வான் மேவிய விடத்தில் சென்று
பூண்டுறத் தழுவிக் கொண்டு பொருமிய பொருமல் தீர
ஆண்டுற அழுது விம்மி ஐயகோ! ஆழ்வான்! நம்பி
மாண்டனன் கொல்லோ வென்ன அன்னவர் இரங்கநைந்தே
"உனக்கிது வருவதே என் உயிரனாய் என்றான்' ஆழ்வான்
மனத்திடைத் திருமண் கோணி மற்றிவர்க் கிருந்த தென்னக்
கனத்த சேர்த்ததியர் தம்மிற் கருதியாங்கொருவர் பாலும்
நினைத் திராதிருந் தேனோ நான் நெறியுறு நிலையாய்! என்றான்"

என்று கூறுவர் வடிவழகிய நம்பிதாசர்.

உடையவர் மீண்டும் கோயிலெய்தினார் என்ற செய்தி எங்கும் பரவிற்று.

"சந்தார் பொழில் சூழ் அரங்கத்தில் தன்னை யனைய எதி நாதன்
வந்தான் என்னும் சோபனத்தைக் கேட்டு மண்ணும் வானுலகும்
சிந்தா குலங்கள் தீர்ந்தனர். எண் திசையில் இசையும் தொண்டர்களும்
நந்தா விளக்காம் உடையவரைக் காண்பான் வந்து நண்ணினார்"

நாற்றிசை நின்றும் சாரி சாரியாக மக்கள் திரள் கோயிலை நோக்கி நடந்தது. நானில முய்யத் தோன்றிய ஞான முனியின் நளினமலர்ப் பாதம் வணங்கி நன் மனம் பெற்று நலமுற்றது. அப் புண்ணியக் கொழுந்து புலை மனம் கொண்ட சோழனால் வாட நேர்ந்ததை உன்னிக் கண்ணீர் பெருக்கியது. உடையவர் அவர்கள் அனைவரையும் தேற்றினார். வந்தவருள் சிலர் மனம் வெதும்பி "ஸ்வாமி! தேவரீர் நலிந்த தோடு நிற்கவில்லை துக்க பரம்பரை. நம்பி பரமபதித்தார். ஆழ்வான் கண்ணிழந்தார் என்பதோடு முடியவில்லை. அக் கொடிய சோழன் "தில்லையிலே அம்பலத்தான் ஆடல் கண்ட கோவிந்தராஜரது சித்ரகூடத்தையே அழித்துக் கடலில் ஆழ்த்தி விட்டான் ஸ்வாமீ! என்று கண்ணீர் மல்க விண்ணப்பித்தனர். கேட்ட எம்பெருமானார் துடிதுடித்துப் போனார். நடந்த வற்றையெல்லாம் விரிவாகக் கூறுமாறு பணித்தார். அவர்கள் விவரமாக "சக வருடம் 1109-ம் வருஷம் நம்பிகளும் ஆழ்வானும் நலிவுற்ற பின்னும் சோழன் வெறி நீங்கவில்லை. நம் தர்சனத்தை அறிவால் அசைக்க முடியவில்லை என்ற குமுறல் அவனுக்கு. அதிகாரத்தால் செய்யலாம் என்றது அவன் அறியாமை. நடராஜர் ஆடலரங்கத்தே பரமன் பள்ளிகொண்டி ப்பதா என்று ஆக்ரோஷம் நேரே சித்ரகூடம் சென்றான். அதனை இடித்தான். கோவிந்தராஜரைக்கடலிடையே சேர்த்துவிட்டான் இவன் எண்ணம் தெரிந்த ஸ்ரீ வைஷ்ணவர் உத்ஸவபேரரை முன்னமேயே திருமலை கொண்டு போய் விட்டனர்." என்று கூறினர். கவலையோடு கேட்ட உடையவர் மனம் பரதவித்தது. அப்பரதவிப்பிலும் அவர் உள்ளம் தில்லைக் கோவிந்தராஜரின் உத்ஸவ பேரரைத் திருமலைக்கு ஏன் எழுந்தருள் வித்தார்கள். அங்கு தான் கொண்டு செல்ல வேண்டும் என்று அவர்கள் உள்ளத்திலே எப்படி உதயமாயிற்று. எத்தனையோ ஆழ்வார் மங்களாசாஸனம் பெற்ற திருப்பதிகள் அருகில் இல்லையா? என்றெல்லாம் எண்ணியது. இந்தச் சேர்த்திக்கு ஏதோ மூலம் இருக்க வேண்டும் என உன்னினார் "குளிர் அருவி வேங்கடத்தென் கோவிந்தன்" எனச் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியும், "தென்தில்லைச் சித்திர கூடத் தென் செல்வனை, மின்னு மழை தவழும் வேங்கடத்தெம்வித்தகனை" என்று பரகாலனும் வேங்கடத்தையும் கோவிந்தனையும் இணைத்துப் பாசுரமிட்டதே மேல் இப்படி நிகழலாம் என்ற தீர்க்க தர்சனம் தானோ என்று தோன்றியது அவருக்கு. உடனே திருப்பதி நோக்கிப் பயணமானார் உடை

யவர். அங்கு சென்று கோவிந்தராஜருக்குக் கட்டிய தேவராயன் என்பவனல் திருவிருந்த பெருமாள் திரு வீதியில் வடக்காகக் கோயிலொன்று சட்டெனக் கட்டுவித்து கோவிந்தராஜரை அங்கே பிரதிஷ்டை செய்வித்து சாந்தி பெற்றூர். பின்னர் மீண்டும் கோயிலுக்கெழுந்தருளி நம் பெருமாளை சேவித்து செயத்தக்க செய்து நிறைவு பெற்ருர்.

உடையவர் பெருமாள் சந்நிதியிலே ஆழ்வானை நோக்கி உமக்கு இப்படிக் கண் போயிற்றே என்று வருந்த, பெருமாளும் ஆழ்வானை அருளப்பாடிட்டு "உமக்குக் கண் கொடுக்கிரும் பெற்றுக் கொள்ளும்" என்ன ஆழ்வானும் ஸ்வாமீ! அக் கண்டகனைக் கண்ட கண்கள் இனி அடியேனுக்கு வேண்டா. "ஸ்ரீ ராமாவரஜமுனீந்த்ரலப்தபோத" என்றபடி உடையவர் உகந்தளித்த ஞானக் கண் உளது அடியேனுக்கு என்று விண்ணப்பித்தார். உடையவர் இதனைக் கேட்டு உள்ளம் உருகிப் போனர். பெருமாளும் சிந்தை மிக மகிழ்ந்து "இவர் கருணை சேர்ந்தோர்க் கெல்லாம் அந்தமில் பேரின்பம் நல்கினேம்" என்றருளினர். ஆழ்வானும் கைகூப்பி எதிராஜருக்காக அடியேன் பெற்ற பேறு நாலூரானும் பெற அருள் செய்ய வேணும்" என்று வேண்டினர். பெருமாளும் 'தந்தோம்' என்றருளிச் செய்து ஆழ்வானுக்கு விசேஷ மரியாதைகள் ப்ரஸாதித்தார். ஆழ்வான் பிரார்த்தனை உடையவரை ஆச்சர்யத்திலாழ்த்தியது. ஆழ்வான் சோழ சபை செல்வதற்கு மூலகாரண மான வன் நாலூரான். அதனலே கண்ணிழந்தார் ஆழ்வான். அப்படிப் பட்டவனுக்கும் வீடுபேறு வேண்டி நின்ருரே இவர் என்று ஆழ்வானின் பரமகருணையை வியந்து மகிழ்ந்தது அவர் உள்ளம். அம்மகிழ்ச்சிப் பெருக்கிலே

"அன்று சனகன் திருமகளார்க் கல்லலியற்றும்
அரக்கனை முன்
இன்று போய் வா எனும் இறைவன் என்
ஆழ்வானுக்கிணை யொவ்வான்
நன்று தன்னை நலிவித்த நாலூரார்க்கும்
நலம் புரிந்தோன்
என்றும் வாழ்க! வாழ்க! வென்றே ஏத்திய
வரைத் தழீஇக் கொண்டார்."

முதனுட் போரிலே வெறுங்கையனுய் நின்ற தசமுகனை 'இன்று போய்ப் போர்க்கு நாளைவா. தையலை விட்டுச் சரண்புகு வாயெனில் இப்போதே வா. போரே வேண்டு மென்றுல் உன் உடலைத் தேற்றிக் கொண்டு நாளை வா' என விடுவித்தகாகுத்தன துதழிஞ்சி மொழியும்என் ஆழ்வான் கருணைக்கு ஒப்பாகாது. எவ்வித நிபந்தனையுமின்றியன்ரு என் ஆழ்வான் நாலூரான் நலனை வேண்டிற்று அவன் வாழ்க அவன்கருணை வாழ்க என்று அவரைக் கொண்டாடித் தழுவினர் உடையவர். ஆழ்வானுக்கோ உடையவர் தம்மை "என் ஆழ்வான்" என்று சொந்தம் பாராட்டித் தம்முடைமையாக்கிக் கொண்டாரே என்ற மகிழ்ச்சி! உடையவரும் தம் மகிழ்ச்சி மேலிட்டால் நம் அதிருஷ்டத்துக்கு ஆழ்வான் சம்பந்தமுண்டென்று தம் திருப்பரி வட்டத்தைச்சுற்றி மேலெறிந்து ஆர்த்துத் தம் ஆனந்தத்தை வெளியிட்டார்.

(தொடரும்)

---

## கோயில் நிகழ்ச்சிகள்

**மகா கும்பிஷேகம்:**


1. ஸ்ரீ நித்திய கல்யாணி அம்பாளோடு உடனுகிய ஸ்ரீ விரமார்த்தாண்டேஸ்வரர் ஆலயம் அம்பாசமுத்திரம்.
2. வேதாரண்யம் (திருமறைக்காடு) யாழ்ப்பாணம் வரணி ஆதினத்தைச்சேர்ந்த ஸ்ரீ வீணு வாதவிதூஷணி அம்பாள் சமேத ஸ்ரீ வேதாரண்யேஸ்வர ஸ்வாமி ஆலயம்
3. திருச்சிராப்பள்ளி ஸ்ரீ மட்டுவார்குழலம்மை சமேத ஸ்ரீ தாயுமானவர் ஸ்ரீ மாணிக்க விநாயகர் பரிவார மூர்த்திகள் ஆலயம்.
4. முத்துப்பேட்டை, பேட்டை அக்ரஹாரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்து ராஜ கோபால சுவாமி கோயில்.
5. ஸ்ரீ கடம்பவனேஸ்வர சுவாமி ஆலயம், திருக்கடம்பந்துறை.

pages 612 17 13 MARA PUBLIC LIB

5 - APR
MADRAS



திருக்கோவலூர்
வாமன திரிவிக்ரமப் பெருமாள்



தஞ்சைப் பெரிய கோயில் (ஸ்ரீ இராஜ ராஜேச்சுரம்).

MADRAS PUBLIC LIBRARY
5 APR 1966
MADRAS

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34, Printed at MANORAMA PRESS, 39, M. J. B. St., Madras-5